அருட்பெருஞ்ஜோதி

## திருவருட்பா

# இங்கிதமாலை

### மூலமும் - உரையும்



[இரண்டாம் பதிப்பு]

**சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்,**

-99 அம்மன் கோயில் தெரு கிருஷ்ணாங்குளம் சமீபம்,

திவுபெற்றது] சென்னை. 7-2-'44 [அணா 5

உ

சிவமயம்

அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பா

## இங்கிதமாலை மூலமும் உரையும் *

### காப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஒருமா முகனை யொருமாவை யூர்வா கனமா யுறநோக்கித்
திருமான்முதலோர் சிறுமையெலாந்தீர்த்தெம் மிருகண்மணியாகிக்
கருமா லகற்றுங் கணபதியாங் கடவு ளடியுங் களித்தவர்பின்
வருமா கருணைக் கடற்குமர வள்ள லடியும் வணங்குவாம்.

இதன்பொருள்

ஒரு—ஒப்பற்ற, மாமுகனை—கஜமுகாசுரனையும், ஒரு மாவை—ஒருமாமரவுருக்கொண்ட சூரபத்மனையும், ஊர்—தாமேறி நடத்துகிற, வாகனமாய் உற நோக்கி—வாகனமாய்ப் பொருந்தும் படி (அவ்விருவரையுங்) கொண்டு, திருமால் முதலோர்—திருமால், முதலிய தேவர்களுடைய, சிறுமை எல்லாம் தீர்த்து—தாழ்வு முழுதும் நீக்கி, எம் இரு கண் மணி ஆகி—எமது இரண்டு கண்மணிகள்போன்று, கரு—கருப்பத்திற்சென்று பிறத்தற்கேதுவாகிய

---

* உரையாசிரியர் :—மகாவித்வான் காஞ்சீபுரம் இராமசாமி நாயுடு அவர்கள்

மால்—மயக்கத்தை, அகற்றும்—ஒழித்தருளுகின்ற, கணபதி ஆம் கடவுள் அடியும்—கணபதியாகிய தெய்வத்தின் திருவடியையும், களித்து—மனமகிழ்ந்து, அவர் பின்வரும்—அவர்க்குப் பின் அவதரித்த, மா—பெரிய, கருணைக் கடல்—கருணைசமுத்திரமாகிய, குமர வள்ளல்—குமரவேளின், அடியும்—திருவடியையும், வணங்குவாம்—தொழுவோம் (யாம்) என்றவாறு.

கஜமுகாசுரனைப் பெருச்சாளி வாகனமாக்கி யேறி நடத்தின விநாயகமூர்த்தியின் திருவடியையும், மாமரமாய்வந்த சூரபத்மனை மயில்வாகனமாக்கி யேறிநடத்தின முருகவேளின் திருவடியையும் வணங்குவோம் யாம்—என்பது கருத்து. யாம் என்னுந்தோன்றா வெழுவாய் வருவிக்கப்பட்டது; ஒருமாமுகனை ஒருமாவையென்பவற் றீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. சூரபத்மன் முதலிய அசுரர் தொலைவதன்முன்னே இவர்களால் திருமால் முதலிய தேவர்கள் சிறுமையடைந்திருந்தார்களென்பது தோன்ற, "ஒருமாமுகனையொருமாவை யூர்வாகனமாயுறநோக்கித் திருமான்முதலோர் சிறுமையெல்லாந்தீர்த்து" என்றார்; இச்செய்யுளால் கணபதி, முருகவேள் என்னும் இருவர் வணக்கமுங்கூறப்பட்டது. கடவுள்-தத்துவங்களெல்லாவற்றையுங் கடந்தவன், இது தொழிலாகுபெயர். நோக்கியென்பது—வினையிலக்கணை. அருள்செய்தெனினு மொக்கும். கண்மணியென்றது கருவிழிமணியை. ஆகியென்பது உவமவுருபு. சிறுமை-தந்நிலைமையினின்று நீங்குகை. கணபதியென்பது சீவகோடிகளுக்குத் தலைவன் என்று பொருள்படும். ஏனைய வள்ளல்களினின்றும் பிரிக்க குமர வள்ளலென்று விசேடித்தார். வள்ளல்-வரையாது கொடுப்போன்.

## பாடாண்டினை.

### கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்தபக்கம், (வினவுத்தரம்)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

1. திருவார்கமலத்தடம்பணை சூழ்செல்வப்பெருஞ்சீரொற்றியில்வாழ்
மருவார்கொன்றைச் சடைமுடிகொள்வள்ளலிவர்க்குப்பலிகொடுநா

னொருவா தடைந்தே னினிநமக்கிங் குதவவருந்தோறுன்முலைமேல்
இருவா ரிடுநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இதன்பொருள்) திரு ஆர்—அழகுநிறைந்த, கமலம் தடம்—தாமரைத் தடாகங்களும், பணை—வயல்களும், சூழ்—சூழப்பெற்ற, செல்வம்—செல்வத்தால், பெரு சீர்—பெருஞ் சிறப்பையுடைய, ஒற்றியில்வாழ்—திருவொற்றியூரில் வாழ்கின்ற, மரு ஆர்—மணம் பொருந்திய, கொன்றை—கொன்றைமலர் மாலையைத் தரித்த, சடை முடி கொள்—சடா மகுடத்தைக்கொண்ட, வள்ளல் இவர்க்கு—வள்ளலாகிய இவருக்கு, பலி கொடு—பிக்ஷையையெடுத்துக்கொண்டு, நான் ஒருவாது அடைந்தேன்—நான் நீங்காமற் கிட்டினேன், (இவர் என்னைநோக்கிப் பெண்ணே) இனி—இனி மேல், நமக்கு—எமக்கு, இங்கு உதவ வருந்தோறு—இவ்விடத்தில் அன்னமிட வரும்போதெல்லாம், உன் முலை மேல்—உன் தனங்களின்மீது, நீ இரு வார் இடு—நீ இரண்டுவா ரணியக்கடவை, என்கின்றார்—என்று சொல்லுகிறார், சேடீ—தோழீ, இது என்னேடீ—இது என்னேடீ, எ-று.

தான்-அசை. ஒருவாதடைந்தேன் நீயிருவாரிடு என்கின்றார் என்பதற்கு ஒருவம்புசெய்தேன், அதற்கிவர் இரண்டுவம்புசெய் என்று சொல்லுகின்றார் என்று அசதியாடுதற்பொருளதாகிய சொன்னயந் தோன்றுமாறு காண்க; வார்-வம்பு. (சண்டை.) உன் முலைமேலிருவாரிடு என்பதற்கு உனது கற்பில் பிறழாதிரு. உனது தனங்களுக்குக் கச்சணியென்றும் முல்லையரும்பையொத்த அன்னமிடு சுகமாயிரு என்றும் பொருள் தோன்றுதல் காண்க. இவ்விரண்டர்த்தத்தில் முன்னதற்கு முல்லையென்பது இடைக்குறையாய் முலையென்றாயதென்றும் [முல்லை-கற்பு.] பின்னதற்கு முல்லை உவமையாகுபெயரென்றும் கொள்க.

2. தண்ணார்மலரை மதிநதியைத் தாங்குஞ்சடையா ரிவர்தமைநான்
அண்ணலொற்றி யிருந்தவரே யைய வே நீர் யாரென்றேன்
நண்ணா ரிடத்து மம்பலத்து நடவா தவர்நா மென்றுசொலி
எண்ணா தருகே வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) தண்—குளிர்ச்சியாகிய, ஆர் மலரை—ஆத்திமலரையும், மதி நதியை—சந்திரகண்டத்தையும் கங்காநதியையும், தாங்

கும்—தரித்த, சடையார்—சடாபாரத்தையுடையவராகிய, இவர் தமை—இவரை, நான்—யான், அண்ணல்—அண்ணலே, ஒற்றி யிருந்தவரே—திருவொற்றியூரி லெழுந்தருளினவரே, ஐயரே—ஐயரே, நீர்யார்என்றேன்—நீர்யாரென்று கேட்டேன், (அதற்கவர்) நண்ணார் இடத்தும்—அடையாதவரிடத்தும், அம்பலத்தும்—அம் பலத்திலும், நடவாதவர் நாம் என்று சொல்லி—நடவாதவர் யாம் என்று சொல்லி, எண்ணாது—மதிக்காமல், அருகே வருகின்றார்—சமீபத்தில் வராநின்றார், இதுதான் சேடி என்னேடீ, எ-று.

ஒற்றியிருந்தவர்-விலகியிருந்தவர். நடவாதவர்-செல்லாதவர்; வாத நடனத்தையுடையவர்; அம்பலம்-சபை (கனகசபை)—கூட்டம்; நண்ணார்-பகைவர்—(சேராதவர்) அன்பர், அண்ணல்—பெருமையிற் சிறந்தோன்—இது அண்ணல் என விளியாயிற்று. ஒற்றியிருந்தவரே என்று வினயதற்கு அவர் அருகே வந்ததால் கூட்டத்திற்கு வந்தாரென்பது பெறப்பட்டது.

3. பிட்டினதி மண்சுமந்த வொற்றிப் பிச்சைத் தேவரிவர்தமைநான்
தட்டின்மலர்க்கை யிடத்தெதுவோ தனத்தைப்பிடியுமென்றுரைத்
மட்டி னொருமூன் றுடனேழு மத்தர் தலையீதென்றுசொலி [தேன்
எட்டி முலையைப் பிடிக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) பிட்டின்—பிட்டின் பொருட்டு, நதிமண் சுமந்த—வையைநதிக்கரையில் மண்சுமந்த, ஒற்றி—ஒற்றியிலுள்ள, பிச்சைத் தேவர்—பிச்சைத் தேவராகிய இவர் தமை—இவரை, நான்—யான், தட்டு இல்—தடையில்லாத, மலர் கையிடத்து எது—தாமரை மலர்போலுங் கையிலிருப்பது யாது, ஓதனத்தை பிடியும் என்று உரைத்தேன்—அன்னத்தைப் பிடியுமென்று சொன்னேன், மட்டின்—சொன்னமட்டிலே, ஈது ஒரு மூன்றுடன் ஏழு மத்தர் தலை என்று சொல்லி—இது மூன்றோடு ஏழுசேர்ந்த மத்தர்தலை யென்று சொல்லி, முலையை—தனங்களை, எட்டி பிடிக்கின்றார்—எட்டிப்பிடிக்கிறார், இதுதான் சேடி என்னேடீ, எ-று.

பிட்டு-மாணிக்கவாசக சுவாமிகளினிமித்தம் வந்த வையைப் பெருக்காலுடைந்த கரையை யடைத்தற்பொருட்டுச் செம்மனச் செல்விதந்த பிட்டு; மட்டில்-குறைவில்லாத எனினுமாம். எதுவோ தனத்தைப்பிடியும் எனப்பிரித்து அதற்கிணங்க முலையைப் பிடிக்

கின்றார் என்றாள். மூன்றுடனேழு மத்தார்தலை யென்பதற்கு பதுமத்தர் தலையெனப் பொருள்கொள்க. மூன்றுடனேழு-பத்து, அதனோடு மத்தர் என்பது சேர்ந்தால் பதுமத்தர் என்றாகும். பதுமத்தர்தலை—பிரமகபாலம், முல்லை-சோறு, அது இடைக்குறை யாய் முலையென்றாயிற்று. கையிடத்தெதுவோ என்பதற்கு விடை பதுமத்தர் தலை என்பது. ஓதனத்தைப்பிடியும் என்பதற்கிணங்க முல்லையைப் பிடிக்கின்றார் என்று மற்று மொரு பொருள் தோன் றியதென்க.

4. மடையிற் கயல்பா யொற்றிநகர் வள்ள லாகு மிவர்தமைநான்
அடையிற் கனிவாற்பணியென்றே யருள்வீரீருரியீருடையென்றேன்
கடையிற்படுமோர் பணியென்றே கருதியுரைத்தே மென்றுரைத்தெ
இடையிற் கலையை யுரிக்கின்றா ரிதுதான்சேடி யென்னேடீ. [ன்

(இ-ள்.) மடையில்—நீர்மடைகளில், கயல்பாய்—கயல்மீன்கள் துள்ளியோடுகிற, ஒற்றி நகர்—ஒற்றிநகரிலுள்ள, வள்ளல் ஆகும்—வள்ளலாகிய, இவர் தமை—இவரை, நான்—யான், அடையில்—முறைமைப்படி, கனிவால்—பரிவினால், பணி—உம்மைப் பணிதலை, என்றே அருள்வீர்—எக்காலத்தருள்செய்வீர், ஈர் உடை உரியென் றேன்—குளிர்ந்த ஆடையாக யானைத்தோலையுடையவரே யென்று சொன்னேன், கடையில்படும்—கடையிற்கிடைக்கும், ஓர் பணி என்றே கருதி உரைத்தேம்—ஓராபரணமென்றே நினைத்துச் சொன்னோம், என்றுஉரைத்து—என்று சொல்லி, என் இடையில் கலையை உரிக்கின்றார்—என் இடையிலுள்ள ஆடையை அவிழ்க் கின்றார். இதுதான் சேடி என்னேடீ. எ-று.

பணி—தொண்டு, ஆபரணம். இடை உடை உரியீர்—அரை யாடையவிழ்ப்பீர். கடையிற்படும் ஓர்பணி—மோக்ஷமார்க்கத்திற் செய்யப்படுவதாகிய ஒப்பற்ற தொண்டு. இடையிற் கலையை யுரிக் கின்றார்—மோட்சமடைதற்கிடையில் தடையாயுள்ள கலைஞானங் களை யொழிக்கின்றார்.

5. மன்றன்மணக்கு மொற்றிநகர் வாணராகு மிவர்தமைநான் [றே
இன்றன்பொடுங்கையேந்தனத்தையேற்றோர்கலத்திற்கொளுமென்
னன்றன்புடையாயெண்கலத்தி னுங்கொண் டிடுவே மென்றுசொலி
யென்றன் முலையைத் தொடுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) மன்றல்மணக்கும்—வாசனைவீசுகின்ற, ஒற்றிநகர்—ஒற்றிநகரில், வாணர் ஆகும்—வாழ்வோராகிய, இவர்தமை—இவரை, நான்—யான், நின்று—நின்று, அன்பொடும்—அன்புடனே, கை ஏந்து அன்னத்தை ஏறறு—கையிலேந்திவந்த அன்னத்தையேற்று, ஓர் கலத்தில் கொள்ளும்—ஒரு கலத்திற் கொள்ளும், என்றேன்—என்று சொன்னேன், (அதற்கிவர்) நன்று அன்பு உடையாய்—நன்மையாகிய அன்புடையாளே, எண்கலத்தில் நாம் கொண்டிடுவேம்—எட்டுக் கலத்தில் நாம் கொண்டிடுவோம், என்று சொல்லி—என்று சொல்லி, என்றன் முலையை தொடுகின்றார்—என் தனங்களைத் தீண்டுகிறார், இதுதான்சேடி யென்னேடீ. எ-று.

ஓர் கலத்திற்கொள்ளும் என்றதற்கு விடையாக எண்கலத்திலுங்கொண்டிடுவேமென்று சொல்லி, கையேந்தனத்தை யேற்று என்பதைக் கையேம் தனத்தையேற்று எனப்பிரித்து, யாம் கோபிக்கமாட்டோம் தனத்தை யேற்றுக்கொள் எனப் பொருள் கொண்டு, எண்கலம் எட்டுக்கலம் எனக்கொண்டு, அகலத்திலேற்று என்றார். அகலம்-மார்பு, அ-கலம்—எண்கலம்.

6. கோமாற் கருளுந் திருவொற்றிக் கோயி லுடையா ரிவரைமத
மாமாற் றியநீ ரேகலவி மகிழ்ந்தின் றடியேன் மனையினிடைத்
தாமாற்றிடக்கொண்டேகுமென்றேன் றாவென்றார்தந்தாலென்னை
யேமாற் றினையே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கோமாற்கு அருளும்—தொண்டைமானுக்கு அருள் செய்த, திருவொற்றி கோயில் உடையார் இவரை—திருவொற்றியூரில் திருக்கோயில்கொண்டெழுந்தருளிய இவரை, மதமாமாற்றிய நீர்—மதயானையை வென்றநீர், ஏகல் அவி மகிழ்ந்து—செல்லுதல் அவியுணவினை விரும்பியேயாதலால், இன்று அடியேன் மனையினிடை—இன்று அடியேனது வீட்டில், தாம் ஆற்றிட கொண்டு ஏகும் என்றேன்—தாம் மிகுதியாகக் கொண்டுபோமென்று சொன்னேன், (அதற்கிவர்) தாஎன்றார்—கொடு என்றார், தந்தால்—கொடுத்தால், என்னை யேமாற்றினையே என்கின்றார்—என்னை ஏமாற்றிவிட்டனையே என்று சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

கோமாற்கு அருளும் என்பதற்கு திருமாலுக்கருள்செய்த என்றுரைப்பினுமாம். நீரேகலவிமகிழ்ந்து என்பதற்கு நீரே கலவியை விரும்பி என்று பொருள்கொண்டு ஏமாற்றினையே என்று கூறினர். ஆற்றிட—செய்ய, நீரே கலவி மகிழ்ந்து என்பதனை நீர் ஏகல் அவி மகிழ்ந்து எனப் பிரித்ததற்கேற்ப உணவளித்தது ஏமாற்றலாயிற்று.

**7.** அம்மா லயனுங் காண்பரியீர்க் கமரும்பதிதான் யாதென்றேன்
இம்மா லுடையா யொற்றுதற்கோ ரெச்ச மதுகண் டறியென்றார்
செம்மா லிஃதொன் றென்னென்றேன் திருவேபுரிமேற்சேர்கின்ற
வெம்மான் மற்றொன் றென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) அ—அந்த, மால் அயனும்—திருமாலும் பிரமனும், காண்பு அரியீர்க்கு—காணவொண்ணாத வுமக்கு; அமரும் பதி—அமர்ந்திருக்குந்தலம், யாது என்றேன்—எதுவென்று வினவினேன் (அதற்கிவர்), இ மால் உடையாய்—இந்த மயக்கத்தினையுடையவளே, ஒற்றுதற்கு ஓர் எச்சம்—ஒற்று என்பதற்கு ஓர் எச்சமேயாம், அது கண்டு அறி என்றார்—அதனைக் கண்டறிவாயாக என்று சொன்னார், செம்மால்—சுவாமி, இஃது ஒன்று என் என்றேன்—(நீர் சொன்னதாகிய இது ஒன்று யாதென்றேன், (அதற்கு இவர்) திருவே—இலக்குமிபோன்ற பெண்ணே, புரிமேல் சேர்கின்ற—புரி என்பதற்கு முன்னே சேர்ந்த, எம்மால் மற்றொன்று—எமது பெருமையாகிய மற்றொரு பெயர், என்கின்றார்—என்று சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

உம்மை மால் என்பதனோடுங்கூட்டப்பட்டது. ஒற்று என்பதனோடு வினையெச்ச விகுதியாகிய இகரஞ்சேர்ந்தால் ஒற்றி என்றாகும். ஆதலால் ஒற்றியூர் என்றாயிற்று. எம்மால் மற்றொன்று என்பது ஆதி, இதனைபுரி என்பதற்கு முதலில் சேர்த்தால் ஆதிபுரியென்றாகும், ஆதிபுரி யென்பது திருவொற்றியூருக்கு ஒரு பரியாய நாமம். உமது ஊர் எது என்று வினவிய தலைவிக்குக் கடவுள் ஒற்றியென்றும் ஆதிபுரியென்றும் கூறினரென்பது.

**8. கண்கள்** களிப்ப வீண்டுநிற்குங் கள்வ ரிவரு ரொற்றியதாம்
பண்க ளியன்ற திருவாயாற் பலிதா வென்றார் கொடுவந்தேன்
பெண்க டரலீ தன்றென்றார் பேசப் பலியா தென்றேனின்
எண்கண் பலித்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கண்கள்களிப்ப—கண்கள் களிக்கும்படி, ஈண்டு நிற்கும்—இவ்விடத்து நிற்கின்ற, கள்வர் இவர் ஊர்—கள்வராகிய இவரது ஊரானது, ஒற்றியாம்—திருவொற்றியூராம், பண்கள் இயன்ற—பண்கள் பொருந்திய, திருவாயால்—திருவாக்கால், பலிதா என்றார்—பிக்ஷைகொடு என்றார், கொடுவந்தேன்—(அவ்வாறே) கொண்டுவந்தேன், (இவர்) பெண்கள்தரல்—பெண்கள்தருவது, ஈது அன்று என்றார்—இது அல்ல என்று சொன்னார், (அதற்கு நான்) பேசு அப்பலி யாது என்றேன்—சொல்லப்பட்ட அந்தப் பிக்ஷை யாதென்று வினவினேன், (அதற்கு இவர்) நின் எண்கண் பலித்தது என்கின்றார்—உன் மனத்தில் தோன்றியது என்று சொல்லுகின்றார், இதுதான்சேடி யென்னேடீ. எ-று.

பேசப்பலியாதென்றேன் என்பதற்கு பேசினால் இந்தப் பிக்ஷையும் உனக்குக் கிடைக்காது என்று சொன்னேன் என்றும், நின் எண்கண் பலித்தது என்பதற்கு—உன் மார்பில் உண்டாகிய தனம் என்னும் வேறொருபொருள் தோன்றுமாறும் காண்க. பலிதா—என்பதற்குச் சுவாமி எனக்குப் பலித்தவளே (சித்தித்தவளே) என்று பொருள்கொண்டார். அன்றிப் பழந்தாஎனினுமாம். பழம்—முலை.

9. ஆரா மகிழ்வு தருமொருபே ரழக ரிவரூ ரொற்றியதாம்
நேராய்விருந்துண் டோவென்றார் நீர்தான்வேறிங் கிலையென்றேன்
வாரார் முலையாய் வாயமுது மலர்க்கை யமுது மனையமுதும்
ஏரா யுளவே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஆரா மகிழ்வு தரும்—வெறுக்காத மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற, ஒரு—ஒப்பற்ற, பேர் அழகர்—கட்டழகராகிய, இவர் ஊர்—இவரது ஊரானது, ஒற்றி ஆம்—திருவொற்றியூராம், நேர் ஆய்—(இவர்) என் எதிரேவந்து, விருந்து உண்டோ என்றார்—விருந்து உண்டோ என்றுவினவினார், (அதற்கு நான்) நீர் தான்—நீரேயன்றி, வேறு இங்கு இலை என்றேன்—வேறாகிய விருந்து இங்கு இல்லை என்று சொன்னேன், (அதற்கு இவர்) வார் ஆர் முலையாய்—கச்சணிந்த முலையையுடையவளே, வாய் அமுதும்—வாய் அமுதமும், மலர்க்கை யமுதும்—தாமரைமலர் போலும் கையமுதமும், மனை அமுதும்—வீட்டமுதமும், ஏராய்

உளவே என்கின்றார்—அழகாய் இருக்கின்றனவே என்று சொல்கின்றார், இதுதான்சேடி என்னேடீ. எ—று.

நீர் என்பதற்கு ஜலம் என்றும், தாங்கள் என்றும், வேறு என்பதற்கு—வேறாகிய விருந்து என்றும், வேறாகிய உணவு என்றும் உரைத்துக்கொள்க. வாயமுது—துதி, இன்சொல்; கையமுது—அர்ச்சனை, அன்னம்; மனையமுது—வீட்டிலுள்ள அன்னம். இவ்வாறு ஏற்றபெற்றி சொன்னயம் அமைத் துரைத்துக்கொள்க. நீர்தான் வேறிங்கிலை என்பதற்கு விருந்தாய் வந்தவர்க்கு நீர் (ஜலம்) அன்றிவேறில்லையென்று பொருள்கொண்டு வாயமுது முதலிய விருக்க இவ்வாறு கூறுதல் தகாதென்பதாம். வாயமுது அதரபானம் என்றும், கையமுது பரிசவின்பமென்றும், மனையமுது புணர்ச்சி விருப்பமென்றுங் கொள்ளலாம்.

10. அடுத்தார்க் கருளு மொற்றிநக ரைய ரிவர்தா மிகத்தாகங்
கடுத்தா மென்றார் கடிதடநீர் கண்டீ ரையங் கொளுமென்றேன்
கொடுத்தாய் கண்ட திலையையங்கொள்ளு மிடஞ்சூழ்ந் திடுகலையை
எடுத்தாற் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) அடுத்தார்க்கு—தம்மை அடுத்தவர்களுக்கு, அருளும்—அருள்செய்கின்ற, ஒற்றிநகர்—திருவொற்றியூரையுடைய, ஐயர் இவர் தாம்—கடவுளாகிய இவர், மிக தாகம் கடுத்தாம் என்றார்—மிகவும் தாகங்கொண்டு வந்தோம் என்றுசொன்னார், (அதற்கு நான்) கடிதடம் நீர் கண்டீர்—மலர் மணம்பொருந்திய தடாகத்தை நீர்பார்த்தீர், (ஆதலால் அதில் உள்ள) ஐ அம் கொள்ளும் என்றேன்—அழகிய நீரை உட்கொள்ளும் என்று சொன்னேன். (அதற்கு இவர்) கொடுத்தாய் கண்டது இல்லை—நீரைத் தந்தாய் (கடிதடம்—அல்குல்.) யான் கண்டது இல்லை, ஐயம்கொள்ளும் இடம் சூழ்ந்திடும் கலையை எடுத்தால் காண்பேம் என்கிறார்—சந்தேகம்கொள்ளும் இடத்தைச் சூழ்ந்திருக்கிற கலையை நீ நீக்கினால் யாம் காண்பேம் என்று சொல்லுகின்றார். இதுதான் சேடி என்னேடீ. எ—று.

தாகம் கடுத்தாம் என்பதற்கு—விரகதாகம்கொண்டோமென்றும், கடிதடம்—என்பதற்கு அல்குலென்றும், ஐயம் கொள்ளும் இடம் என்பதற்கு—சந்தேகிக்கத்தகுந்த இடமாகிய இடையென்

றும், சூழ்ந்திடும் கலையை எடுத்தால் என்பதற்கு—(அவ்விடையைச்) சூழ்ந்திருக்கும் ஆடையை நீக்கினுல் என்றும், சொன்னயம் அமைத்துக்கொள்க. ஐயம்—பிக்ஷைச்சோறு. ஐயம்சூழ்ந்திடும் கலை—பிக்ஷைச்சோறு கண்ணுக்குத் தோற்ருதபடி மறைத்துக்கட்டின திரைச்சீலை, கடிதடம் என்பதை அல்குல் என்று பொருள்கொண்டு கலை (ஆடை)யை யெடுத்தாற் காண்பேமென்று கூறினர்.

11. இந்தா ரிதழி யிலங்குசடை யேந்த லிவரூ ரொற்றியதாம்
வந்தார்பெண்ணே யமுதென்ருர் வரையின்சுதையிங்குண்டென்றே
னந்தார் குழலாய் பசிக்கினும்பெண் ணுசைவிடுமோ வமுதின்றேல்
எந்தா ரந்தா வென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) இந்து—பிறையும், ஆர்—ஆத்திமலரும், இதழி—கொன்றைமலரும், இலங்கு—விளங்குகின்ற, சடை—சடாபாரத்தையுடைய, ஏந்தல்—கடவுளாகிய, இவர் ஊர்—இவரது ஊரானது, ஒற்றிஆம்—திரு ஒற்றியூராம், வந்தார்—வந்து, பெண்ணே—அமுது என்ருர்—அமுதென்று கேட்டார், (அதற்கு நான்) வரையின் சுதை—மலையமுதம், இங்கு உண்டு என்றேன்—இங்கே உள்ளது என்று சொன்னேன், (அதற்கு இவர்) அம் தார் குழலாய்—அழகிய பூமாலை யணிந்த கூந்தலையுடையவளே, பசிக்கினும்—பசித்திருந்தாலும், பெண் ஆசை விடுமோ—பெண் விருப்பம் நீங்குமோ, அமுது இன்றேல்—அமுதம் இல்லாவிடில், எம் தாரம் தா என்கின்ருர்—எமது தாரத்தையாயினும்கொடு என்று சொல்லுகின்ருர், இதுதான்சேடி யென்னேடீ, எ—று.

வரையின் சுதை என்பதற்கு—மலைத்தேன் என்றும், மலைமகளாகிய பார்வதி யென்றும், வரையில் சுதை எனப் பாடங்கொண்டு அளவுபடாத அமுதமென்றும் சொன்னயம் அமைத்துக் கொள்க. சுவாமி அமுதம் என்பதற்குப் பெண் என்றுகொண்டு அமுது என்று கூறினர். எந்தாரந்தா என்பதற்கு எமது மனைவியைக் கொடு என்பது பொருள்.

12. தன்னந் தனியா யிங்குநிற்குஞ் சாமி யிவரூரொற்றியதாம்
அன்னந் தருவீ ரென்ருர்நா னழைத்தே னின்னை யன்னமிட
முன்னம் பசிபோ யிற்றென்ருர் முன்னின் றகன்றே னிவ்வன்னம்
இன்னந் தருவா யென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) தன்னந்தனியாய் இங்குநிற்கும் சாமி—தன்னந் தனியே யிவ்விடத்தில் நிற்கிற சாமியாகிய, இவர் ஊர்—இவரது ஊரானது, ஒற்றி ஆம்—திருவொற்றியூராம், (இவர் வந்து) அன்னம் தருவீர் என்றார்—அன்னம் கொடுப்பீரென்று கேட்டார், அன்னம் இட—அன்னம் போடுதற்கு, நான் நின்னை அழைத்தேன்—நான் (தோழியே) உன்னைக் கூப்பிட்டேன், முன்னம்—நீ கொண்டுவருமுன்னமே, பசி போயிற்று என்றார்—பசி தணிந்ததென்றார், முன்னின்று அகன்றேன்—அவர்க்கெதிரினின்று நீங்கி நடந்தேன், இ அன்னம்—இந்த அன்னத்தை, இன்னம் தருவாய் என்கின்றார்—இன்னமும் கொடுக்கக்கடவா யென்று சொல்லுகின்றார், இதுதான்சேடி யென்னேடீ, எ—று.

சாமி—கடவுள். தன்னந்தனி—மிகுதனிமை. நானழைத்தேனின்னை யன்னமிட முன்னம்பசிபோயிற்றென்றார் என்றது உன்னைநானழைத்த இனிய குரலோசை கேட்டு மகிழ்ந்து பசி தீர்ந்ததென்று ரென்றபடி. முன்னின் றகன்றே னிவ்வன்ன மின்னந் தருவா யென்கின்றார் என்றது நானிவர்க்கெதிரே நில்லாது நீங்கி நடந்த நடையைக்கண்டு மகிழ்ந்து இந்த அன்ன நடையை இன்னமொருக்கால் நடந்து காட்டவேண்டுமென்கின்றார் என்றபடி.

13. மாறு வழகோ டிங்குநிற்கும் வள்ள லிவரூ ரொற்றியதாம்
வீறு முணவீ யென்றார்நீர் மேவா வுணவிங் குண்டென்றேன்
கூறு மகிழ்வே கொடுவென்றார் கொடுத்தா லிதுதா னன்றென்றே
யேறு வழக்குத் தொடுக்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) மாறு அழகோடு—கெடாத அழகோடு, இங்கு நிற்கும்வள்ளல்—இவ்விடத்து நிற்கும் வள்ளலாகிய, இவர் ஊர்—இவரது ஊரானது, ஒற்றி ஆம்—திருவொற்றியூராம், (இவர்) வீறு ஆம் உணவு ஈ என்றார்—மேலாகிய வுணவைத் தாவென்றார், (அதற்கு நான்) நீர் மேவா உணவு இங்கு உண்டு என்றேன்—நீர் இதுவரையில் உண்ணாத வுணவு இங்கே யுள்ளதென்றேன், (அது கேட்ட இவர்) கூறு மகிழ்வே—சொல்லப்படாத சந்தோஷமே, கொடு என்றார்—தாவென்றார், கொடுத்தால்—தந்தால், இதுதான் அன்றென்றே—இது அல்லவென்று சொல்லி, ஏறுவழக்கு

தொடுக்கின்ருர்—ஏருவழக்குத் தொடங்குகின்ருர், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

நீர் மேவாவுணவு—நீரோடு கலவாத வுணவு, புதிய அன்னம், பழமுதலிய வுணவு, ஏருவழக்கு—நியாயசபைக்கேற்காதவழக்கு, நீர்மேவாவுணவு—நீர் இதுவரையில் அநுபவியாத சிற்றின்பம், நீர் மேவியவுணவு—பேரின்பம். நீர்—குணம், நீர்மேவாவுணவு கொடுத்தால் அது வேண்டியதில்லை சிற்றின்பத்தைக் கொடுவென்கிருர் என்பது கருத்து.

14. வண்மை யுடையார் திருவொற்றிவர்ண ரிவர்தாம்பலியென்ரு
ருண்மையறிவீர் பலியெண்மையுணர்கி லீரென் னுழையென்றேன்
பெண்மைசிறந்தாய் நின்மனையிற்பேசும் பலிக்கென்றடைந்ததுநா
மெண்மை யுணர்ந்தே யென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) வண்மை உடையார்—கொடைத்தன்மையுடையவர், திருவொற்றிவாணர்—திருவொற்றியூரில் வாழ்பவர், இவர்தாம்—இப்படிப்பட்டவரே, பலி என்ருர்—பிக்ஷையென்று வந்தார், (இவரை நோக்கி, நான்) உண்மை அறிவீர்—உண்மையை அறிந்திருக்கின்றீர், என் உழை—என்னிடத்தில், பலி எண்மை—பிக்ஷை ஏற்கும் எளிமைத்தன்மையை, உணர்கிலீர் என்றேன்—அறிகிலீர் என்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) பெண்மை சிறந்தாம்—பெண்மைக் குணங்களிற் சிறந்தவளே, நாம்—யாம், எண்ணம் உணர்ந்தே—உனது எளிமைத்தன்மையையறிந்தே, நின்மனையில்—உன்வீட்டில், பேசும்பலிக்கு என்று அடைந்தது—சொல்லப்பட்ட பலிக்கென்று வந்தது, என்கின்ருர்—என்று சொல்லுகின்ருர், இதுதான்சேடி யென்னேடீ. எ—று.

பலி—பலித்தது, பலியெண்மை—பிக்ஷையேற்றலின் தாழ்மை, எண்மை உணர்ந்தே—உன் எண்ணத்தையும் காம மயக்கத்தையும் அறிந்தே, என் எண்ணம் எளிதாய் முடியுமென்பது கருதியே, பலியெண்மை—பலித்தலின் எளிமை, அதாவது எண்ணினபடியே யெளிதாய் முடிவது, பலி—முதனிலைத் தொழிற்பெயர்.

15. திருவையளிக்குந்திருவொற்றித்தேவரீர்க்கென்விழைவென்றே
வெருவலுனதுபெயரிடையோர்மெய்நீக்கியநின்முகமென்ருர் [ன்

தருவ லதனை வெளிப்படையாற் சாற்றுமென்றேன் சாற்றுவனேல்
இருவை மடவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) திருவை அளிக்கும்—செல்வத்தைத் தருகிற, திருவொற்றி தேவரீர்க்கு—திருவொற்றியூரிலெழுந்தருளிய தேவரீருக்கு, விழைவு என் என்றேன்—விருப்பம் யாதென்று கேட்டேன், (அதற்கு இவர்) வெருவல்—அஞ்சாதே, உனது பெயரிடை—உன் பெயரொன்றினிடையிலுள்ள, ஓர் மெய்நீக்கிய நின் முகம் என்றார்-ஓரொற்றெழுத்தை நீக்கின வுன்முகந்தானென்றார், (அதற்குநான்) அதனைத்தருவல்—அதைத் தருகிறேன், வெளிப்படையால்—வெளிப்படைச்சொல்லினால், சாற்றும் என்றேன்—சொல்லுமென்றேன், (அதற்கு இவர்) சாற்றுவனேல்—சொல்லுவேனால், மடவாய்—பெண்ணே, இருவை என்கின்றார்—திட்டுவை யென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ, எ-று.

திரு-இம்மைமறுமைவீடு என்னுஞ்செல்வம். உனது பெயர் என்றது நங்கை யென்னுஞ் சொல்லை; இந்த நங்கை யென்பதில் இடையிலுள்ள ஙகரமெய்யை நீக்கினால் நகை யென்றாகும்; ஆதலால் உனது பெயரிடையோர் மெய்நீக்கிய நின்முகம் என்றது உனது நகைமுகம் என்றாயிற்று, ஆகவே நினது நகை முகத்தைப் பார்க்கும் விருப்பம் எனக்குண் டென்பது கருத்து. இருவை என்றது வைவாய் என்றபடி.

16. முந்தை மறையோன் புகழொற்றிமுதல்வரிவர்தம்முகநோக்கிக்
கந்தை யுடையீ ரென்னென்றேன் கழியா வுன்றன் மொழியாலே
இந்து முகத்தா யெமக்கொன்றே யிருநான் குனக்குக் கந்தையுள
திந்த வியப்பென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) முந்தைமறையோன்—பழமையாகிய வேதங்களையுடைய பிரமதேவனால், புகழ்—புகழப்பட்ட, ஒற்றி—திருவொற்றியூரிலெழுந்தருளிய, முதல்வர்—தலைவராகிய, இவர் தம்முகம் நோக்கி—இவரது முகத்தைப்பார்த்து, கந்தையுடையீர் என் என்றேன்—கந்தைத் துணியையுடையீர் இப்படியிருத்தற்குக் காரணம் யாதென்றேன், (அதற்கு இவர்) கழியா உன்றன் மொழியாலே—நீங்காதவுன்சொல்லினால், இந்து முகத்தாய்—பூரண சந்

திரனை நிகர்த்த முகத்தை யுடையவளே, எமக்கு ஒன்றே—எமக் குள்ளது ஒரு கந்தையே, உனக்கு—உனக்கோ வென்றால், இரு நான்கு கந்தை உளது—எட்டுக் கந்தை யுண்டு, இந்த வியப்பு என்னென்று சொல்லுகிறார், இதுதான் சேடியென்னேடீ. எ-று.

இந்தவியப்பு—இந்த ஆச்சரியம், இருநான்கு எட்டு. (அ) இத னோடு கந்தைசேர்ந்தால் அகந்தை யென்றாகும், ஆதலால் எனக்கு ஒருகந்தை உனக்கு எட்டுக் கந்தை யென்றும், எனக்குக் கந்தை யுண்டு உனக்கு அகந்தையுண்டு என்றும் கூறினமை காண்க.

17. துன்ன லுடையாரிவர்தமைநீர் துன்னும்பதிதான்யாதென்றேன்
னென்ன லிரவிலெமைத்தெளிவா னின்ற நினது பெயரென்றா
ருன்ன லுறுவீர்வெளிப்படவீ துரைப்பீ ரென்றேனுரைப்பேனேல்
இன்ன லடைவா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) துன்னல் உடையீர்—தையலைக்கொண்ட ஆடையை யுடையவராகிய, இவர்தமை—இவரை, நீர்துன்னும்பதியாது என் றேன்—நீர் பொருந்தும் ஊர் எதுவென்று கேட்டேன், (அதற்கு விடையாக இவர்) னென்னல் இரவில்—நேற்றிரவில், எம்மைதெளி வான் நின்ற—எம்மைத் தெளிந்தறியும்பொருட்டு ஒற்றுவிடுத்து நின்ற, நினதுபெயர் என்றார்—உன்பெயரென்று சொன்னார், (அது கேட்டநான்) உன்னல் உறுவீர்—யாவராலும் தியானிக்கப்படு வோரே, ஈது—இதனை, வெளிப்பட உரைப்பீர்என்றேன்—வெளிப்படச்சொல்லுவீரென்றேன், (அதற்கு இவர்) உரைப்பே னேல்—சொல்லுவேனாயின், இன்னல் அடைவாய்என்கின்றார்—துன்பமடைவாயென்கிறார், இதுதான்சேடி என்னேடீ. எ-று.

தெளிவானின்ற நினதுபெயர் என்றது ஒற்று விடுத்துநின்ற வுன்பெயர், அதாவது—ஒற்றி. இதுதிருவொற்றியூர் என்றாயிற்று. இன்னலடைவா யென்றது நான் ஒற்றுவிடுத்தது இவர் அறியலா யிற்றேயென்ற நாணம், அச்சம் என்பவற்றாலுளதாம் துன்பம்.

18. சிமைக்கோள்சூலத்திருமலர்க்கைத்தேவர்நீரெங்கிருந்ததென்
னெமைக்கண்டளவின்மாதேநீயிருந்ததெனயாமிருந்ததென்றா [றே
ரமைக்கு மொழியிங் கிதமென்றே னுமுன் மொழியிங் கிதமன்றோ
விமைக்கு மிழையா யென்கின்றா ரிதுதான் சேடியென்னேடீ.

(இ-ள்.) சிமைகொள்—கூர்மையைக்கொண்ட, சூலம்—சூலப் படையை யேந்திய, திருமலர்க்கை—அழகிய தாமரைமலர்போலுந் திருக்காத்தையுடைய, தேவர்—தேவராகிய, நீர்—தாங்கள், எங்கு இருந்தது என்றேன்—எவ்விடத்திலிருந்தது என்று வினவினேன். (அதற்கு இவர்) எம்மைகண்டளவில்—எம்மைப்பார்த்த மாத்திரத் தில், மாதே—பெண்ணே, நீ இருந்ததுஎன—நீ யிருந்தாற்போல, யாம்—இருந்ததென்றார், (அதுகேட்டநான்) அமைக்கும்மொழி— உம்மாற்சொல்லப்பட்ட சொல்லானது, இங்கிதம் என்றேன்— இங்கிதமாயிருக்கிறதென்றேன், (அதற்கிவர்) இமைக்கும் இழை யாய்—பிரகாசிக்கிற ஆபரணங்களை யணிந்தவளே, ஆம்—ஆம், உன்மொழி—உன் சொல்லானது, இங்குஇதம்அன்றோ—இவ் விடத்திற்கு இதமாயிருக்கிறதல்லவா, என்கின்றார்—என்றுசொல் லுகிறார், இதுதான்சேடி யென்னேடீ. எ-று.

சிமை-உச்சி, அது இங்குக்கூர்மைக்காயிற்று, இங்கிதம்— குறிப்பாலறியப்படுவது, இதம்-நன்மை, எமைக்கண்டவளவில் நீ இருந்ததென-எம்மைப்பார்த்தளவில் நீஇருந்தது ஒற்றியன்றோ, அதுபோலஅந்த ஒற்றியில் நாமுமிருந்தது என்றாராயிற்று, இமைத் தல்-பிரகாசித்தல், இழை-ஆபரணம்.

19. **நடங்கொள்** பதத்தீர் திருவொற்றி நங்கள்பெருமா னீரன்றோ திடங்கொள்புகழ்க்கச்சூரிடஞ்சேர்ந்தீரென்றேனின்னடுநோக்காக் குடஞ்சேர்ந் ததுமாங் கஃதென்றார் குடம்யாதென்றேனஃதறிதற் கிடங்கர் நடுநீக் கென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) நடம்கொள்பதத்தீர்—நடனஞ்செய்கிற திருவடியை யுடையீர், திருவொற்றிநங்கள் பெருமான்—திருவொற்றியூரி லெழுந்தருளிய எம்பெருமானே, நீர் அன்றோ—நீரல்லவா, திடம் கொள்புகழ்—அழியாத புகழைக்கொண்ட, கச்சூர் இடம் சேர்ந்தீர் என்றேன்—திருக்கச்சூ ரென்னுமிடத்தை யடைந்தீரென்று கேட்டேன், (அதற்கு இவர்) நின்நடுநோக்காகுடம்சேர்ந்ததும்— உன்நடுவைநோக்காதகுடம்சேர்ந்ததும், ஆங்கு அஃது என்றார்— அந்தக்கச்சூரே யென்றார், (அதுகேட்ட நான்) குடம்யாது என் றேன்—குடம் எதுவென்றேன், (அதற்கு விடையாக இவர்) அஃது அறிதற்கு—அதனையறிதற்கு, இடங்கர்நடுநீக்கு என்

கின்றார்—இடங்கர் என்பதன் நடுவை யொழிப்பாயாக வென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கச்சூர்-ஒரு சிவஸ்தலம், மார்பு. நடு-நடுவுநிலைமை, இடை; நோக்கா-நுண்மையை யெண்ணாத, இடங்கர்-முதலை. இதில் நடுவெழுத்தை யொழித்தால் மூலையென்றாகும், குடம் என்றது மூலையை; கச்சுத் தங்குதற்கிடமா யிருத்தலால் கச்சூர் என்றது மார்பை. இடங்கர்-நீர்வாழ்விலங்கொன்றைக் குறித்த திரிசொல், முதலை அதனைக்குறிக்கு மியற்சொல்.

20. சங்கமருவு மொற்றியுளீர் சடைமேலிருந்த தென்னென்றேன்
மங்கை நினது முன்பருவ மருவு முதனீத் திருந்ததென்றார்
கங்கை யிருந்த தேயென்றேன் கமலை யனையாய் கழுக்கடையு
மெங்கை யிருந்த தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) சங்கம்மருவு—சங்குகள் தவழாநின்ற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவரே, சடைமேல் இருந்தது—உன் சடையின்மீதிருந்தது, என் என்றேன்—யாதென்று வினவினேன், (அதற்கு இவர்) மங்கை—மங்கையே, நினதுமுன்பருவம்—உன்முன் பருவமானது, மருவும்—பொருந்திய, முதல்நீத்து இருந்தது என்றார்—முதலொழித்திருந்ததென்றார், (அது கேட்டநான்) கங்கை இருந்ததே என்றேன்—கங்கையிருந்ததே யென்று கேட்டேன், (அதற்கு இவர்) கமலை அனையாய்—திருமகளை நிகர்த்தவளே, கழுக்கடையும்-சூலமும், எம்கை இருந்தது என்கின்றார்-எமது கையிலிருந்ததே யென்கிறார், இதுதான் சேடியென்னேடீ. எ-று.

மங்கைப் பருவத்துக்கு முன்பருவம் பெதும்பை, இதில் முதலை யொழித்தால் தும்பையென்றாகும். கங்கை-கங்காநதி, கம்-தலை, கை-கரம், கழுக்கடை-சூலம்.

21. துதிசே ரொற்றி வளர்தரும துரையே நீர்முன் னுடலுறும்
பதியாதென்றேனம்பெயர்முற்பகரீரெழுத்தைப்பறித்ததென்றார்
நிதிசேர்ந் திடுமெப் பெயர்யாது நிகழ்த்து மென்றே னீயிட்ட
தெதுவோ வதுகா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) துதிசேர்—அன்பரது தோத்திரங்கள்கூடின, ஒற்றி வளர்—திருவொற்றியூரில் வாழ்கின்ற, தரும துரையே—தரும துரையே, நீர்—நீர், முன்—முன்னுளில், ஆடல்உறும்—திருவிளையாடல்கள் செய்த, பதி யாது என்றேன்—தலம்யாதென்று வினவினேன், (இவர்) முன் பகர்—முன்னே சொல்லப்பட்ட, நம்பெயர்—நமதுபெயரில், ஈரெழுத்தைப் பறித்தது என்றார்—இரண்டெழுத்தை வாங்கிவிட்டது என்றார், நிதிசேர்ந்திடும்—செல்வஞ்சேர்ந்த, அப்பெயர் யாது—அந்தப்பெயர்எது, நிகழ்த்தும் என்றேன்—சொல்லுமென்றேன்; (இவர்) நீ இட்டது எதுவோ—நீயிட்டபெயர் எதுவோ, அதுகாண் என்கின்றார்—அதுவே யென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

நம்பெயரென்பது தருமதுரை, அதில் முற்பகரீரெழுத்தைப் பறித்தது மதுரை, தருமதுரை யென்னும் பெயரும் இவளிட்டழைத்ததாதலால் நீயிட்டதெதுவோவதுகா ணென்றார்.

22. உடற்கச் சுயிரா மொற்றியுளீருமது திருப்பேர் யாதென்றேன்
குடக்குச் சிவந்த பொழுதினைமுன் கொண்ட வண்ணராமென்றார்
விடைக்குக் கருத்தா வாநீர்தாம் விளம்பன்மிகக்கற் றவரென்றே
னிடக்குப் புகன்று யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) உடற்கு—உடம்புக்கு, அச்சு உயிர் ஆம்—உயிர்க்குயிராகிய, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரி லெழுந்தருளி யிருப்பவரே, உமதுதிருப்பேர் யாது என்றேன்—உமது திருநாமம் யாதென்று வினவினேன், (அதற்கு இவர்) குடக்குசிவந்தபொழுதினை முன்கொண்டவண்ணர்ஆம்என்றார்—அந்திவண்ணராமென்றார், (அதற்குநான்) விடைக்கு கருத்தா ஆம் நீர்—விடை சொல்லுதற்குக் கர்த்தாவாகிய நீர், விளம்பல் மிகக் கற்றவர் என்றேன்—பேச்சு மிகவுங் கற்றவர் என்றேன், இடக்குபுகன்றாய் என்கின்றார்—(அதற்கு இவர்) இடக்குப்பேசினை யென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

குடக்கு-மேற்கு. குடக்குசிவந்த பொழுது-மேற்குச் சிவந்த காலமாகிய அந்தி, வண்ணர்-நிறத்தையுடையவர். விடை-இடபம்; கருத்தா-தலைவன்; இடக்கு-எறுமாறு; இறைவரது இடபம் தருமவுருவினதாதலால் எறுமாறு என்றது-தருமத்திற்கு விரோதமானசொல்.

23. மணங்கேதகைவான்செயுமொற்றிவள்ளலிவரைவல்விரைவேன்
பிணங்கேஞ் சிறிதுநில்லுமென்றேன் பிணங்காவிடினுநென்னலென
வணங்கே நினக்கொன்றி னிற்பாதி யதிலோர் பாதி யாகுமிதற்
கிணங்கேஞ் சிறிது மென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கேதகை—தாழைமலர், மணம்—வாசனையை, வான் செய்யும்—சுவர்க்கலோகத்தளவும் வீசுகின்ற, ஒற்றி—திருவொற்றியூரிலெழுந்தருளிய, வள்ளல் இவரை—வள்ளலாகிய இவரை, வல் விரைவேன்—மிகு விரைவோடு சென்று, பிணங்கேம் சிறிதும்—சிறிதும் பிணங்கமாட்டோம், நில்லும் என்றேன்—நில்லுமென்று சொன்னேன், (அதற்கு இவர்) நென்னல் என—நேற்றுப்போல, பிணங்காவிடினும்—மிகுதியாகப்பிணங்காவிடினும், அணங்கே—பெண்ணே, நினக்கு—உனக்குள்ள, ஒன்றினில்பாதி—ஒன்றிற் பாதி, அதில் ஓர் பாதியாகும் இதற்கு—அதிலொரு பாதியாகிய இச்சிறு பிணக்கத்துக்கும், சிறிதும் இணங்கேம் என்கின்ருர்—சிறிதும் இணங்கமாட்டோம் என்கிருர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

நேற்று நீ பிணங்கின பெரும் பிணக்கத்துக்கு மாருக எமக்கு அதிற் காற்பங்காகிய சிறுபிணக்குண்டு, ஆதலால் யாம் சிறிதும் உன் சொல்லுக் கிணங்கமாட்டோமென்பது கருத்து. ஒன்றினிற் பாதி அரை, அதிற்பாதி கால்.

24. ஒற்றிநகரா ரிவர்தமைநீ ருவந்தே றுவதிங் கியாதென்றேன்
மற்றுன் பருவத் தொருபங்கே மடவாயென்ருர் மறைவிடையீ
திற்றென் றறிதற்கரி தென்றே னெம்மையறிவா ரன்றியஃ
தெற்றென் றறிவா ரென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஒற்றிநகரார் இவர்தமை—திருவொற்றிநகரையுடையவராகிய இவரை, நீர் இங்கு உவந்து ஏறுவதுயாது என்றேன்—நீர் இவ்விடத்தில் மகிழ்ந்தேறுவது யாதென்று கேட்டேன், (அதற்கு இவர்) மடவாய்—பெண்ணே, உன்பருவத்து ஒருபங்கே என்ருர்—உன்பருவத்தில் ஒருபங்கே யாகுமென்ருர், (அதற்கு நான்) ஈதுமறைவிடை—இது மறைவிடை யாதலால், இற்றுஎன்று அறிதற்கு—இத்தன்மைத் தென்றுணர்தற்கு, அரிது என்றேன்—அரிதாயிருக்கின்றதென்றேன், (அதற்கு இவர்) எம்மை அறிவார்

அன்றி—எம்மையறிபவராகியஞானியரேயன்றி, அஃது—அதனை, எற்றுஎன்று அறிவார்—(மற்றையார்) எத்தன்மைத்தென்றறிவார், என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

மற்றுன் பருவத் தொருபங்கு என்றது பிரவிடை, இதிலுள்ள பிற்பங்காகிய விடை, விடை-இடபம், மறைவிடை-பொருள்விளங்காத மறுமொழி, வேதவுருவாகிய இடபம்.

25 கண்ணின்மணிபோலிங்குநிற்குங்கள்வரிவரூரொற்றியதாம்,பண்ணின்மொழியாய்நின்பாலோர் பறவைப்பெயர்வேண்டினம்படைத்தான், மண்ணின்மிசையோர் பறவையதாய் வாழ்வாயென்று ரென்னென்றே,னெண்ணியறிநீயென்கின்றாரிது தான்சேடியென்னேடீ.

(இ-ள்.) கண்ணின் மணிபோல்—கண்மணியைப்போல, இங்கு நிற்கும்—இங்கே நிற்கிற, கள்வர்—கள்வராகிய, இவர் ஊர்—இவரது ஊரானது, ஒற்றி ஆம்—திருவொற்றியூராம், பண்ணின் மொழியாய்—பண்போலுஞ் சொல்லையுடையாய், நின்பால்—உன்னிடத்து, ஓர்பறவைப்பெயர்—ஓர் பறவையின் பெயரை, வேண்டினம்—விரும்பி வந்தோம், படைத்தால்—(அதை) தருவீராயின், மண்ணின்மிசை—இந்த நிலவுலகத்தின்மீது, ஓர் பறவையதாய் வாழ்வாய் என்றார்—ஒரு பறவையாய் வாழக்கடவாயென்றார், என் என்றேன்—இது என்னென்று கேட்டேன், நீ எண்ணி அறி என்கின்றார்—நீ யாலோசித்தறியக்கடவாய் என்கிறார், இது தான் சேடி என்னேடீ. எ-று.

ஓர் பறவைப்பெயர் அன்னம், சோறு. ஓர் பறவையதாய் வாழ்வாய், ஓர் பறவை-கிளி, இதின் பரியாயமாகிய திரிசொல் சுகம், ஆதலால் சுகமாய் வாழ்வாய் என்றாயிற்று.

26. சேடார்வளஞ்சூழொற்றிநகர்ச் செல்வப்பெருமானிவர்தமைநானேடார்கரத்தீ ரெண்டோள்க ளுடையீ ரென்னென்றுரைத்தேனீ
கோடாகோடி முகநூறு கோடாகோடிக் கணமென்னே
யீடாயுடையா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) சேடுஆர் வளம்சூழ்—பெருமை பொருந்திய வளங்களெல்லாம் நிறைந்த, ஒற்றிநகர்—திருவொற்றி நகரத்தில் வாழ்

கின்ற, செல்வம்—செல்வப்பெருக்கமுள்ள, பெருமான்—பெருமானாகிய, இவர் தமை—இவரை, நான்—யான், ஓடுஆர்கரத்தீர்—ஓட்டையேந்தினகையை யுடையீர், எண்டோள்கள் உடையீர்—எட்டுத்தோள்களை யுடையீர், என் என்று உரைத்தேன்—இதென்னவென்று கேட்டேன், (அதற்கு இவர்) கோடாகோடிமுகம்—கோடாகோடிமுகங்களையும், நூறுகோடாகோடி களம்—நூறு கோடாகோடி கழுத்துக்களையும், ஈடாய் உடையாய்—ஒப்பாக வுடையாய், என்னே என்கின்றூர்—இதுவென்னவென்கிறூர், இது தான் சேடி என்னேடீ. எ-று.

கோடாகோடி—கோடியென்னுமெண்ணைக் கோடியாற் பெருக்கினல் பதும்ம் என்னும் எண்ணுண்டாகும். ஆதலால் கோடாகோடிமுகம் என்பது தாமரைமலர்போன்ற முகம் என்றும், நூறு கோடாகோடி சேர்ந்தால் சங்கம் என்னும் எண்ணுண்டாதலால் சங்குபோன்ற கழுத்தென்றும் பொருளுரைத்துக் கொள்க. பதுமம்-தாமரை, சங்கம்-சங்கு, ஈடு-ஒப்பு.

27. துருமஞ் செழிக்கும் பொழிலொற்றித் தோன்றூலிங்குநீர்வந்த கருமஞ் சொலுமென் றேனிவண்யாங் கடாதற் குன்பாலெம்முடைமைத் தருமம்பெறக்கண்டாமென்றூர்தருவலிருந்தாலென்றேனில் இருமந் தரமோ வென்கின்றூ ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) துருமம் செழிக்கும்—மரங்கள் செழிக்கின்ற, பொழில்—சோலைசூழ்ந்த, ஒற்றி—திருவொற்றியூரி லெழுந்தருளிய, தோன்றூல்—பெரியோனே, இங்கு—இவ்விடத்திற்கு, நீர் வந்த கருமம்—நீர் வந்த காரியத்தை, சொலும் என்றேன்—சொல்லுவீரென்றுகேட்டேன், (அதற்குஇவர்) இவண்—இவ்விடத்தில், யாம்கடாதற்கு—யாம்வினவினதற்கு, உன்பால்—உன்னிடத்தில், எம் உடைமை தருமம் பெறக்கண்டு ஆம்என்றூர்—எமது உடைமையாகிய தருமம்வரக்கண்டேயாம் என்றூர், (அதற்குநான்) இருந்தால் தருவல் என்றேன்—இருந்தால்கொடுப்பேனென்றேன், (அதற்குஇவர் இருந்தால் தருவேனென்றூயே) இல்—உன்வீடு, இருமந்தரமோ—பெரிய மந்தரவலையோ, என்கின்றூர்—என்று சொல்லுகின்றூர், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

தோன்றூல்—சுவாமீயெனினுமாம். கடாதற்கு—வினவினதற்கு. எம்முடைமைத்தருமம் விடை-அதாவதுமறுமொழி. மந்

தரமலை கடலைக்கடைந்து அமுதங்கொடுத்ததாதலால் உன்வீடு அது போல அமுதந்தரவல்லதோ என்பதுகுறிப்பு. அமுதம்-சோறு. அதை விரும்பி வந்தோமென்றதாயிற்று. இரு மந்தரம்-இரண்டு தனங்கள். அமுதம்-அதிலுள்ள அமுதம் என்றொருகுறிப்பு.

28. ஒருகைமுகத்தோர்க்கையரெனுமொற்றித்தேவரிவர்தமைநான்
வருகை யுவந்தீ ரென்றனைநீர் மருவி யணைதல் வேண்டுமென்றேன்
றருகை யுடனே யகங்காரந் தனையெம்மடியார் தமை மயக்கை
யிருகை வளைசிந் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஒருகைமுகத்தோர்க்கு—ஒருதுதிக்கையோடுகூடின முகத்தையுடையவராகிய விநாயகருக்கு, ஐயர்என்னும்—தந்தையாரென்று சொல்லப்படுகிற, ஒற்றித்தேவர்—திருவொற்றியூர்த் தேவராகிய, இவர்தமை—இவரை, நான்—யான் வருகைஉவந்தீர்—(இவ்விடத்திற்கு) வருதலைவிரும்பினீர், என்றனை—என்னை, நீர்—நீர், மருவி அணைதல்வேண்டும் என்றேன்—கூடித் தழுவ வேண்டுமென்றேன், (அதற்கு இவர்) தருகையுடனே—தருதலோடு, அகங்காரம்தன்னை—அகங்காரத்தையும், எம் அடியார் தம்மை—எம் அடியாரையும், மயக்கை—மயக்கத்தையும், இருகை வளை சிந்து என்கின்றார்—இருகைவளை சிந்து என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

தருகை-ஈகை, தருகையுடனே, அகங்காரம்தனை, எம் அடியார்தமை, மயக்கை என நிறுத்தி, இவற்றோடுமுறையே, இரு, கை, வளை, சிந்து, என்பவற்றைச்சேர்த்து, தருகையுடனேயிரு, அகங்காரம்தனை கை, எம் அடியார் தமைவளை, மயக்கை சிந்து, என்றுரைத்துக்கொள்க; கை-வெறு, வளை-சேர்த்துபகரி, சிந்து-கெடு, நீர்மருவி-நீரில்முழுகி, அணைதல்-சாயுச்சியம், இருகை வளை சிந்து-இருகையாலும் வளைப்பாயாக கடலை, கண்ணை மூடிக் கொள், சிந்து-கடல்.

29. திருந்த மிகுஞ்சீ ரொற்றியில்வாழ் தேவரேயிங் கெதுவேண்டி
வருத்த மலர்க்கா லுறநடந்து வந்தீ ரென்றேன் மாதேநீ
யருத்தந் தெளிந்தே நிருவாண மாக வுன்ற னகத்தருட்க
ணிருத்த வடைந்தே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) திருத்தம் மிகும்சீர்—திருத்த மிகுந்த சிறப்பினை யுடைய, ஒற்றியில்வாழ்—திருவொற்றியூரில்வாழ்கின்ற, தேவரே—கடவுளே, இங்கு—இவ்விடத்திற்கு, எது வேண்டி—எதனை விரும்பி, மலர்கால்—தாமரை மலர்போன்ற உமது திருவடிகள், வருத்தம் உற—வருத்தத்தை அடைய, நடந்துவந்தீர் என்றேன்—நடந்துவந்தீர் என்று கேட்டேன், (அதற்கு இவர்) மாதே—பெண்ணே, நீ—நீ, அருத்தம்தெரிந்து—பொருளறிந்து, நிருவாண மாக—முத்தியையடைய, உன்தன் அகத்து—உன்மீது, அருள் கண் இருத்த—அருட்பார்வை செய்யும்பொருட்டு, அடைந்தேம் என்கின்ரூர்—வந்தோம் என்று சொல்லுகின்ரூர், இதுதான் சேடி என்னேஉ. எ-று.

அருத்தம்-அன்பு, பொருள். நிருவாணம்-அம்மணக்கோலம், முத்தி, இருத்த-வைக்க எனினுமாம்.

30. வளஞ்சேரொற்றி மாணிக்க வண்ணராகு மிவர்தமைநான் [ன் குளஞ்சேர்ந் திருந்ததுமக்கொருகண் கோலச்சடையீரழகிதென்றே களஞ்சேர் குளத்தினெழின்முலைக்கண்காண வோரைந்துனக்கழகீ திளஞ்சேல் விழியா யென்கின்ரூ ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வளஞ்சேர்—எல்லாவளங்களும் சேர்ந்த, ஒற்றி—திருவொற்றியூரில் எழுந்தருளிய, மாணிக்கவண்ணர் ஆகும்—மாணிக்க நிறத்தினராகிய, இவர்தம்மை—இவரை, நான்—யான், (நோக்கி) கோலம் சடையீர்—அழகாகிய சடாபாரத்தையுடையவரே, உமக்கு—தேவரீருக்கு, ஒரு கண்—ஒரு கண்ணனது, குளம்சேர்ந்தது—குளத்தைச்சேர்ந்திருந்தது, இது அழகு என்றேன்—இது அழகாக இருக்கிறதென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) இளம் சேல்விழியாய்—இளஞ் சேல் மீனை ஒத்த கண்களையுடையவளே, களம் சேர்குளத்தின்—களத்தைச் சேர்ந்த குளத்தினும், எழில் முலைக்கண்—அழகிய முலைக்கண், காண—யாவரும்காணுமபடி, ஓர்ஐந்து—ஒரைந்தாயிருக்கின்றன, ஈது உனக்கு அழகு என்கின்ரூர்—இது உனக்கு அழகாயிருக்கின்றதென்று சொல்லுகிரூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

வண்ணம்-நிறம், குளம்-நெற்றி, தடாகம். களம்-கழுத்து, கபடம். குளத்தின்-நெற்றியின் அழகினும், இதில் இன் ஐந்த

னுருபு உறழ்பொருளில் வந்தது, கண்காண என்றியைப்பினுமமை யும், ஐந்து-அஞ்சு, கண்டோர் அஞ்சுதற்குரியவாயிருக்கின்றன, அஞ்சு-அஞ்சுதல், முதனிலைத்தொழிற்பெயர்.

31 பலஞ்சேரொற்றிப்பதியுடையீர்பதிவேறுண்டோநுமக்கென்றே
னுலஞ்சேர்வெண்பொன் மலையென்றா ருண்டோநீண்டமலையென்
றேன்,வலஞ்சே ரிடைத்தவ் வருவித்த மலைகா ணதனின்மம்முதல்
சென்,றிலஞ்சேர்ந் ததுவு மென்கின்றாரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) பலம்சேர்—பயன் சேர்ந்த, ஒற்றிப்பதியுடையீர்—திருவொற்றிப் பதியினையுடையீர், நுமக்குப்பதிவேறு உண்டோ என்றேன்—உமக்குத்தலம் வேறுஉண்டோ என்று வினவினேன், (அதற்கு இவர்) உலம்சேர்—திரள்கற்கள் பொருந்திய, வெண் பொன்மலை என்றார்—வெள்ளிமலை என்றுசொன்னார் (அதற்கு நான்) நீண்டமலை உண்டோ என்றேன்—நீண்டமலை யொன்றும் உமக்கு உண்டோ என்றுசொன்னேன், வலம்சேர் இடை—உறுதி சேர்ந்த இதின்நடுவே, த வருவித்தமலை காண்—தகரம் வருவிக் கப்பட்ட மலையாகும், அதனில்—அதன்கண், ம முதல் சென்று—மகரமாகிய முதலெழுத்துப்போய், இலம் சேர்ந்ததுவும்—வீடு சேர்ந்ததுவும், என்கின்றார்—என்றுசொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ, எ-று.

பலம்-அன்பர் விரும்பும்பயன், அது இம்மைமறுமை வீட்டின் பங்கள். உலம்-திரள்கல். வெண்பொன்-வெள்ளி, நீண்டமலை-மாலை. இடைத்தவ் வருவித்தமலை-மதலை. அதில்மம்முதல் சென் றது தலை. இலம்-வீடு, அதற்குத்தாமம் என்று பெயர். தாமம்-மாலை, தலைமாலை ; மதலை-கொன்றை,

32. வயலா ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் வாய்திறவார்
செயலார் விரல்கள் முடக்கியடி சேர்த்தீ ரிதழ்கள் விரிவித்தார்
மயலாருளத்தோடென்னென்றேன்மறித்தோர்விரலாலென்னுடைய
வியலார் வடிவிற் சுட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வயல் ஆர்—வயல்கள்நிறைந்த, ஒற்றிவாணர்—திருவொற்றிவாணராகிய, இவர்வந்தார்—இவர்வந்து, நின்றார்—நின்று, வாய்திறவார்—வாய்திறவா திருக்கிறார், (ஆயினும்) செயல்ஆர்—

செயல்நிகழ்தலையுடைய, விரல்கள் முடக்கி—விரல்களைமடக்கி, அடிசேர்த்து—அடியிற்சேர்த்து, ஈரிதழ்கள் விரிவித்தார்—இரண்டு விரல்களை விரித்தார், (அதுகண்டநான்) மயல்ஆர் உளத்தோடு—அன்புள்ள மனத்தோடு, என்என்றேன்—என்னென்று கேட்டேன், மறித்து—மீட்டும், ஓர்விரலால்—ஒருவிரலினால், என்னுடைய—எனது, வியல்ஆர் வடிவில்—பெருமை பொருந்திய அவயவத்தில், சுட்டுகின்றார்—சுட்டிக்காட்டுகின்றார், இதுதான் சேடி யென்னேடீ, எ-று.

வந்தார் நின்றார் மூற்றெச்செங்கள், வாய்திறவார் என்றது பேசார் என்றபடி; தொழில் செய்தற்குரியனவாதலால் விரல்களைச் செயலார் விரல்கள் என்றார். முடக்கி-இரண்டு விரல்களை மடக்கி, அடிசேர்த்து-அடிவிரலிற் சேர்த்து, மறித்தோர் விரல் என்றது சுட்டுவிரலை; இருவிரல் முடக்கி யடி விரலிற் சேர்த்தல் அன்னத்தினளவு குறித்தற் கென்க; வடிவிற் சுட்டுதல் தனம் வேண்டுமென்பதற்கு.

33. பேர்வா ழொற்றி வாணரிவர் பேசா மௌன யோகியராய்ச்
சீர்வாழ்நமதுமனையினிடைச்சேர்ந்தார்விழைவென்செப்புமென்றே
னோர்வா ழடியுங் குழலணியு மொருநல் விரலாற் சுட்டியுந்தம்
மேர்வா ழொருகை பார்க்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) பேர்வாழ்—பேர்பிரபலமான, ஒற்றிவாணர் இவர்—திருவொற்றி வாணராகிய இவர், பேசாமௌன யோகியராய்—பேசாத மௌன யோகியராகி, சீர்வாழ்—மேன்மைதங்கிய, நமது மனையினிடை—நமது வீட்டில், சேர்ந்தார்—வந்தடைந்தார், விழைவுஎன்—உமக்கு விருப்பம்யாது, செப்பும் என்றேன்—சொல்லு மென்றேன், (அதற்கு இவர்) ஓர்வாழ் அடியும்—ஒப்பற்ற வாழ்க்கைக்குரிய தமது பாதத்தையும், குழல் அணியும்—என் கூந்தலணியையும், ஒருநல்விரலால் சுட்டியும்—தமது ஒப்பற்ற நல்ல விரலாற் சுட்டியும், தம்—தமது, ஏர்வாழ்—அழகுதங்கிய, ஒருகை—ஒருதிருக்கையை, பார்க்கின்றார்—நோக்குகின்றார், இது தான்சேடி என்னேடீ. எ-று.

அடி-பாதம், பாதம்-அடி, குழலணி-கூந்தலிலணியத்தகுந்த ஆபரணமாகிய சில், அடியும்சில்லும் சேர்ந்தால் அடிசிலாகும்; அடி

சில்-சோறு, தம்ஏர்வாழொருகை பார்த்தல் யாதுக்கெனின், அடி சிலைத் தம்கையிலுள்ள பிரமகபாலத்திலிட வேண்டுமென்று குறிப்பித்தற்கென்க. சநகாதியர்க்கு உண்மை நிலையைக் காட்டினது முதலியனதோன்ற ஏர்வாழொருகை என்றார்.

34. பெருஞ்சீ ரொற்றி வாணரிவர் பேசா மௌநம் பிடித்திங்கே
விரிஞ்சீர் தரநின் றுடன் கீழு மேலுநோக்கி விரைந்தார்யான்
வருஞ்சீருடையீர்மணிவார்த்தை வகுக்கவென்றேன் மார்பிடைக்கா
ழிருஞ்சீர் மணியைக் காட்டுகின்றா ரிதுதான்சேடி யென்னேடீ.

(இ—ள்.) பெருஞ்சீர்—பெருஞ் சிறப்பமைந்த, ஒற்றிவாணர் இவர்—திருவொற்றி வாணராகிய இவர், பேசாமௌநம்பிடித்து—பேசாத மௌந நிலையைப்பற்றி, இங்கே—இவ்விடத்தே, விரிஞ்சு ஈர்தா நின்று—பரந்து வியாபித்திழுக்கும்படி நின்று, உடன் கீழும் மேலும் நோக்கி—உடனே கீழும்மேலுமாகப்பார்த்து, விரைந் தார்—விரைந்து சென்றார், யான்—நான், வரும் சீர் உடையீர்—வளர்கின்ற மேன்மையுடையவரே, மணிவார்த்தை வகுக்க என் றேன்—மணிவார்த்தையை வகுக்கக் கடவீரென்றேன், (அதற்கு இவர்) மார்பிடை—என்மார்பிலுள்ள, காழ்—சரவடிவாய்க் கோக் கப்பட்டிருக்கிற, இருஞ்சீர் மணியை—பெருஞ்சிறப்பையுடைய மணியை, காட்டுகின்றார்—சுட்டிக் காட்டுகிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

விரிஞ்சீர்தரநின்றுடன் கீழுமேலு நோக்கலாவது-கண்களை நான்குபக்கத்திலும் பரப்பியுருவப் பார்த்தல், கீழுமேலு நோக்க லாவது பாதாதி கேசமாகப்பார்த்தல். மணிவார்த்தை-மாணிக்கம் போலும் வார்த்தை, மாணிக்கவாசகம், மணியைக் குறித்த பிரஸ் தாபம், காழ்-வடம், மார்பிடை மணியைக் காட்டுதல் முத்துமாலை யணிந்ததனம் வேண்டுமென்றற்கு, மணி-மாணிக்கச்செப்பு எனி னுமாம். மணி-நீலமணியுமாம்.

35. வலந்தங் கியசீ ரொற்றிநகர் வள்ள லிவர்தா மௌநமொடு
கலந்திங் கிருந்த வண்டசத்தைக் காட்டி மூன்றுவிர னீட்டி
நலந்தங் குறப்பின் னடுமுடக்கி நண்ணு மிந்த நகத்தொடுவா
யிலந்தங் கரத்தாற் குறிக்கின்றா ரிதுதான்சேடி என்னேடீ.

(இ—ள்.) வலம்தங்கிய—வெற்றிதங்கிய, சீர்—சிறப்புள்ள, ஒற்றிநகர் வள்ளல்—திருவொற்றி நகரிலுள்ள வள்ளலாகிய, இவர்—இவர், மௌநமொடு—மௌந நிலேயோடு, கலந்து அங்கு இருந்த—கூடி அவ்விடத்திலிருந்த, அண்டசத்தைகாட்டி—பறவையைக்காட்டி, மூன்றுவிரல் நீட்டி—மூன்று விரல்களே நீட்டி, நலம்தங்குற—நன்மையுண்டாக, பின்—பின்னே, நடுமுடக்கி—நடுவிரலேமுடக்கி, நண்ணும்—பொருந்திய, இந்த நகத்தோடு—இந்த நகங்களோடு, வாய்—வாயிலேயுடைய, இல்லம்—வீட்டை, தம்கரத்தால் குறிக்கின்ருர்—தமது கரத்தாற் சுட்டுகின்ருர், இது தான் சேடி என்னேடீ. எ—று.

அண்டம்-சம்-முட்டையில், பிறப்பது; மயில். இந்த நகத்தோடு-இந்த மயூரபாதமென்னும் நகக்குறியோடு, இல்லம் இலமென இடைக்குறையாயிற்று. கலந்திங்கிருந்த வண்டசத்தைக் காட்டல் தாமும் அதுபோலப் புணரவேண்டி யென்க; இலந்தங்கரத்தாற் குறித்தல்—வீட்டிற்குள்ளே வந்தாற் புணரலாமென்று குறிப்பித்தற்கு, வீடு-மோக்ஷமுமாய்; நகக்குறிவைக்கு மிடம் தனங்களென்பர்.

36. தேனர்பொழிலாரொற்றியில்வாழ் தேவரிவர்வாய் திறவாராய்
மானர் கரத்தோர் நகந்தெறித்து வாளா நின்ருர் நீளார்வந்
தாஞ ருளத்தோ டியாதென்றேன் றங்கைத் தலத்திற்றலேயையடி
யேனுடிறவேகாட்டுகின்ரு ரிதுதான்சேடி என்னேடீ.

(இ—ள்.) தேன் ஆர் பொழில்ஆர்—தேன்பொருந்திய சோலேகள் நிறைந்த, ஒற்றியில்வாழ்—திருவொற்றியூரில் வாழ்கின்ற, தேவர் இவர்—தேவராகிய இவர், வாய்திறவாராய்—வாயைத் திறக்காதவராய், மான்ஆர்கரத்து—மான்பொருந்திய கையால், ஓர்—ஒரு, நகம்தெறித்து—நகத்தைத்தெறித்து, வாளாநின்ருர்—சும்மாநின்ருர், (அதுகண்டு நான்) நீள் ஆர்வம்தான் ஆர் உள்ளத்தோடு—பெரிதாகிய அன்புள்ளமனத்தோடு, யாது என்றேன்—என்னென்று வினவினேன், (அதற்கு இவர்) தம்கைத்தலத்தின்—தமது கைத்தலத்திலுள்ள, தலேயை—கபாலத்தை, அடியேன் நாடுற—அடியேன்பார்க்கும்படி, காட்டுகின்ருர்—காட்டாநின்ருர், இதுதான் சேடி யென்னேடீ. எ—று.

தேன்-வண்டு எனினுமாம், பொழில்சூழ் எனப்பாடமோதி பொழில் சூழ்ந்த என்றுரைத்தல் நலம், மானுர்கரம்-இடக்கை, நகம் தெறித்தலாவது வாய் பேசாது பிறரை யழைக்குமோர் வகைக் குறிப்பு ; தலையைக்காட்டுதலாவது தமது கரத்திலிருப்பது உயிர் போன தலையென்றும் அது பிரமகபாலமென்றும் தெரிவித்தற்கு, உயிர்போனதலை-போனகம், போனகம்-சோறு, கபாலம் என்பது கவாலம் என்ருகி அது கவாளமென்று சொல்லப்படும். கவாளம்-ஒருவாய்ச்சோறு, (கவளம்) என்பதும் அது. இந்தத் தலையோட்டில் சோறிடு என்பது திரண்ட குறிப்புப்பொருள்.

37. செச்சை யழகர் திருவொற்றித் தேவ ரிவர்வாய் திறவாராய்
மெச்சு மொருகாற் கரந்தொட்டு மீண்டு மிடற்றக் கரம்வைத்தார்
பிச்ச ரடிகேள் வேண்டுவது பேசீ ரென்றேன் றமைக்காட்டி
யிச்சை யெனையுங் குறிக்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) செச்சை அழகர்—திருநீற்றழகையுடையவர், திருவொற்றித் தேவர்—திருவொற்றியூரி லெழுந்தருளியதேவர், இவர் வாய்திறவாராய்—இவர்தம் வாயைத்திறவாதவராகி, மெச்சும் ஒருகால் கரம் தொட்டு—ஒருதரம் புகழப்படுகிறதமதுகையைத்தீண்டி, மீண்டும்—மறுபடியும், அக்கரம்—அந்தக்கையை, மிடற்று வைத்தார்—தமது கண்டத்தில் வைத்தார், (அதுகண்ட நான்) பிச்சர்—பித்தராகிய, அடிகேள்—சுவாமிகளே, வேண்டுவது—நீர் விரும்புவதை, பேசீர்என்றேன்—சொல்லுமென்றேன், (அதற்கு இவர்) தம்மை காட்டி—தம்மையுங் காட்டி, இச்சை என்னையும் காட்டுகின்ரூர்—விருப்பத்தோடு என்னையும் காட்டுகின்ரூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கரம்தொட்டது என்கையில் கங்கணங் கட்டுவேன் என்றும், கண்டத்தில் வைத்தது இந்தக்கையினுல் உன்கழுத்தில் மங்கல்யங் கட்டுவேனென்றும் குறிப்பித்தாராயிற்று; தம்மைக்காட்டி இச்சை யெனையுங் குறிக்கின்ரூர் என்றது நானும் நீயும்தம்பதிகளாக வேண்டுமென்று குறிப்பித்தற் கென்க. கரந்தொட்டு என்பதற்கு என்கையைத் தீண்டியெனப் பொருள் கொண்டால் பாணிக்ரஹணம் செய்துக்கொள்வேன் என்ருரென்பது கருத்து. பாணிக்ரஹணம்-கைப்பிடித்தல், கைப்பற்றுதல்.

38. மன்றார் நிலையார் திருவொற்றி வாணரிவர்தா மௌனமொடு
நின்றாரிருகை யொலியிசைத்தார்நிமிர்த்தார்தவிசினிலைகுறைத்தார்
நன்றா ரமுது சிறிதுமிழ்ந்தார் நடித்தா ரியாவு மையமென்றே
னின்றா மரைக்கை யேந்துகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) மன்று—பொற்சபையாகிய, ஆர்—அரிய, நிலை யார்—நிலையை யுடையவர், திருவொற்றிவாணர்—திருவொற்றி யூரில் வாழ்கின்றவர், இவர்தாம்—இவர்தாம், மௌநமொடு—மௌந நிலையோடு, நின்றார்—நின்று, இருகை ஒலி இசைத்தார்—இரண்டு கைகளாலும் ஒலியுண்டாக்கினார், நிமிர்த்தார்—நிமிர்த் தனர், தவிசின்நிலை குறைத்தார்—ஆசநத்தினிலையைக் குறைத் தார், நன்றுஆர் அமுதுசிறிது உமிழ்ந்தார்—நன்றாகிய அரிய அமிர் தத்தைச்சிறிது உமிழ்ந்தார், நடித்தார்—நடித்தனர், (இவற்றைக் கண்டநான்) யாவும்—இவையெல்லாம், ஐயம் என்றேன்—ஐயமே யென்று சொன்னேன், (அதைக்கேட்ட இவர்) இன்—இனிதாகிய, தாமரைகை ஏந்துகின்றார்—தாமரை மலர்போலுந் தமதுகையை யேந்திநின்றார், இதுதன் சேடி என்னேடீ. எ—று.

இருகையொலி யிசைத்தல்-அமலை, சோறு. நிமிர்த்தல்-சோறு. தவிசு-ஆசநம், இதினிலை குறைத்தலாவது முதலெழுத்தைக் குறுக் கல், குறுக்க அசநம் என்றாகும், அசநம்-சோறு. உமிழ்தல்-துப்பு தல், துப்பு-சோறு. நடித்தல்-சதி, சதி-சோறு. ஐயம்-சந்தேகம், பிக்ஷை. தாமரைக்கை யேந்துதல் சோறிடு என்று குறிப்பித்தல்.

39. வாரா விருந்தாய் வள்ளலிவர் வந்தார் மௌனமொடு நின்றார்
நீரா ரெங்கே யிருப்பதென்றே னீண்டசடையைக் குறிப்பித்தா
ரூரா வைத்த தெதுவென்றே னொண்கை யோடென்னிடத்தினில்
வைத்,!தேரார் கரத்தாற் சுட்டுகின்றா ரிதுதான்சேடி யென்னேடீ.

(இ—ள்.) வள்ளல்இவர்—வள்ளலாகிய இவர், வாராவிருந்தாய் வந்தார்—வாராத விருந்தினராகவந்தார், (வந்தவர்) மௌநமொடு நின்றார்—மௌநநிலையோடு நின்றனர், (அதுகண்ட நான்) நீர்ஆர்—நீர்யாவர், எங்கே இருப்பது—எவ்விடத்தி லிருப்பது, என்றேன்—என்று கேட்டேன், (அதற்கு இவர்) நீண்ட சடையைக் குறிப்பித் தார்—தமதுநீண்ட சடையைக்குறிப்பித்தார், ஊராவைத்தது எது என்றேன்—ஊராவைத்தது எதுவென்றேன் (அதற்கு இவர்)

ஒண்கை ஓடு என்னிடத்தினில் வைத்து—தமது ஒள்ளிய கையிலுள்ள ஓட்டினை யென்னிடத்தேவைத்து, ஏர் ஆர்காத் தால் சுட்டுகின்றார்—அழகுபொருந்திய கையினால் சுட்டுகின்றனர், இதுதான் சேடி யென்னேடீ. எ—று.

வாராவிருந்து-புதியவிருந்து, கிடைத்தற் கரியவிருந்து; நீரார்-நீருருவாயிருப்பவர், கங்கை-சடையைக் குறிப்பித்தது அங் கிருக்கிறாளென்று குறிப்பித்தற்கு, ஊராவைத்தது-ஊராகவைத் தது, ஊராகக்கொண்டது; ஓடு என்னிடத்தினில் வைத்து ஏரார் காத்தாற் சுட்டுதல்-ஒற்றியென்பதைக் குறிப்பித்தற்கு. ஒற்றி-திருவொற்றியூர்.

40. செங்கேழ்க்கங்கைச்சடையார்வாய்திறவாராகீண்டடைந்தா ரெங்கேயிருந்தெங்கணைந்ததுகாணெங்கள்பெருமானென்றேனென் னங்கேழருகி னகன்றுபோ யங்கே யிறைப்போ தமர்ந்தெழுந்தே யிங்கே நடந்து வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) செங்கேழ்—செந்நிறத்தையுடையவராகிய, கங்கைச் சடையார்—கங்கைச்சடையினர், வாய்திறவார்ஆக—வாய்திறவாத ராக, ஈண்டு அடைந்தார்—இங்குவந்தார், (வந்தவரை) எம்பெரு மான்—எம்பெருமானே, எங்கேயிருந்தது—நீர் எவ்விடத்திருந் தது, எங்கு அணைந்தது—எங்கு வந்தது, என்றேன்—என்று வின வினேன், (அதற்கு இவர்) என் அருகின் அங்கு ஏழ் அகன்று போய்—என் அருகேநின்று அவ்விடத்து ஏழடிதூரம் நீங்கிச் சென்று, அங்கே இறைப்போது அமர்ந்து எழுந்து—அவ்விடத் துச் சிறிதுநேரம் தங்கியெழுந்து, இங்கே நடந்துவருகின்றார்— இங்கே நடந்துவாராநின்றார், இதுதான் சேடி யென்னேடீ.

அருகினகன்று-ஒற்றி, ஒற்றியூர்; இறைப்போதமர்ந்தெழுந்து வருகின்றது-ஒற்றியிருந்து வருகின்றது, ஒற்றியூரிலிருந்து வரு கின்றது. ஏழ்-ஏழடிதூரம். செங்கேழ் சடையாரென்றியைத்துக் கொள்க; என்னை, கங்கை செந்நிற முடையளன்மையின்,செங்கேழ் சடைக்காதல் சடையார்க்காதல் விசேடணமாக்குக.

41. கோடையா ரொற்றி வாணரிவர் கூறு மௌந ராகின்றார் தொடையாரிதழிமதிச்சடையென்றுரையேவிழைவேதுமக்கென் னுடையார் துன்னற் கந்தைதனை யுற்று நோக்கிநகைசெய்தே [நே யிடையாக் கழுமுட் காட்டுகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கொடையார்—கொடையை யுடையவர், ஒற்றி வாணர்—ஒற்றி வாணராகிய, இவர்—இவர், கூறா—பேசாத, மௌனர் ஆகி நின்றார்—மௌனமுடையவராய் நின்றனர், தொடை ஆர் இதழிமதி—தொடுத்தலமைந்த கொன்றைமலரையும் இளம் பிறையையும், சடை—சடையிலணிந்த, என் துரையே—என் துரையே, உமக்கு விழைவு ஏது என்றேன்—உமக்கு விருப்பமென்னென்றேன், உடையார்—உடையவர், துன்னல் கந்தைதனை—தமது தைத்த கந்தையை, உற்று நோக்கி—உற்றுப்பார்த்து, நகைசெய்து—நகைத்து, இடையா—தோற்காத, கழுமுள் காட்டுகின்றார்—தமது சூலத்தைக்காட்டாநின்றனர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கொடையார் வீடாகிய பெருஞ் செல்வத்தை வழங்குவோர்; கொடையார் என்பதை ஒற்றிக்கேயாக்கி, கொடைத்தன்மை நிறைந்த ஒற்றிஎன்றாயினும் கொடையாளர் வாழ்கின்ற ஒற்றியென்றாயினும் பொருள் கூறினுமாம்; ஆர் இதழி-ஆத்திமலர் கொன்றைமலர் என்றிரண்டாகக் கோடலுமமையும்; உடையார்-உடுக்கையாகப் பொருந்திய எனினுமாம்; கந்தையை யுற்றுநோக்கினது-குளிர் மிகுதியைக் குறித்தற்கு; சூலத்தை நோக்கினது சூலத்தை நிகர்த்த உன் தனத்தைத் தழுவினால் குளிர் நீங்கும் என்பது குறிப்பித்தற்கு; கழுமுள் என்பதற்குச் சூலமெனப் பொருள்கொண்டு குளிர் என்பதற்குப் பரியாயமெனவுங் கூறுவர்.

42. பொன்னைக்கொடுத்தும் புணர்வரிய புனிதரிவரூரொற்றியதா
முன்னைத் தவத்தா லியாங்காண முன்னே நின்றார் முகமலர்ந்து
மின்னிற்பொலியுஞ்சடையீரென் வேண்டுமென்றேனுணச்செய்யா
ளின்னச் சினங்கா ணென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) பொன்னைக் கொடுத்தும்—பொன்னைக் கொடுத்தாயினும், புணர்வு அரிய—அடைதற்கரிய, புனிதர்—பரிசுத்தராகிய, இவர் ஊர்—இவரது ஊரானது, ஒற்றியதாம்—ஒற்றியூராம், முன்னை தவத்தால்-முற்காலத்துச்செய்த தவப்பயனால், யாம் காண—நாம்பார்க்கும்படி, முகமலர்ந்து முன்னேநின்றார்—முகமலர்ந்து எனக்கெதிரே நின்றார், (இவரை நோக்கி) மின்னின் பொலியும் சடையீர்—மின்னலைப்போல விளங்குகின்ற சடையையுடையவரே, என்வேண்டும் என்றேன்—உமக்கு என்னவேண்டும்

என்று வினவினேன், (அதற்கு இவர்) உண்ண—உண்ணும் பொருட்டு, செய்யாள் இல் நச்சினம் என்கின்றார்—திருமகள் வீட்டை விரும்பினோம் என்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

செய்யாள் இல்-திருமகள்பிறந்த வீடாகிய பாற்கடல், பால்-அமுது, (சோறு), செய்யாள் இல்-திருமகள் வீடாகிய தாமரை, தாம் விரும்புதற்குரிய அரை-நிதம்பம், தாவும் தாம் எனத் தொகுத்தலாயிற்று, செய்யாள் இல்—திருமகள் வீடாகிய தாமரையை விரும்புகிற பறவையினம், அன்னம்-சோறு, செய்யாளின் நச்சினம்-திருமகளினும் அதிகமாக உன்னை விரும்பினோம்.

43. வயலார் சோலை யெழிலொற்றி வாண ராகு மிவர்தமைநான்
செயலா ரடியர்க் கருள்வீர்நுஞ் சிரத்து முரத்துந் திகழ்கரத்தும்
வியலாய்க்கொண்டதென்னென்றேன் விளங்கும்பிநாகமவைமூன்று
மியலாற் காண்டி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வயல் ஆர் சோலை எழில்—வயல்களும் நிறைந்த சோலைகளும் ஆகிய இவற்றினழகையுடைய, ஒற்றிவாணர் ஆகும்—திருவொற்றியூரில் வாழ்வோராகிய, இவர்தமை—இவரை, நான்—யான், செயல் ஆர் அடியர்க்கு—திருத்தொண்டுசெய்யும் அடியவர்க்கு, அருள்வீர்—அருள்செய்பவரே, நும்—உமது, சிரத்தும்—தலையிலும், உரத்தும்—மார்பிலும், திகழ்கரத்தும்—விளங்குகிற கையிலும், வியல் ஆய் கொண்டது—பெருமையாயமைத்துக் கொண்டது, என் என்றேன்—யாதென்றேன், (அதற்கு இவர்) அவை மூன்றும்—(மூன்றிடத்துந் தரிக்கிற) அவை மூன்றும், பிநாகம்—பிநாகமேயாம், இயலால் காண்டி என்கின்றார்—இதனை இலக்கணவகையால் அறிவாயாக என்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

செயல்-அடிமைத்தொழில், பிநாகம்-என்பதை, கம், நாகம், பிநாகம் எனப்பிரித்து, கம்-நீர் என்றும், நாகம்-சர்ப்பம் என்றும், பிநாகம்-வில்லென்றும் பொருள்கொண்டு, முறையே சிரமுதலிய மூன்றிடத்துக்கும் அமைத்துரைத்துக்கொள்க, இயல்-இலக்கணக் கூறுபாடாகிய ஓர் மிறைக்கவி ; அதாவது பிநாகம் என்பதை வில்

லென்றும், முதலெழுத்தை நீக்கி நாகம்-சர்ப்பம் என்றும், முத லிரண்டெழுத்துக்களையும் நீக்கி, கம்-தலை என்றும் கொள்ளுதல்- இது அக்கரவருத்தநம் என்னும் மிறைக்கவியின்பாற்படும்.

44. போதுநின் றருள்வீரொற்றி யுளீர்பூவுந்தியதென்விழியென்றே
னிதுவென் றறிநா மேறுகின்ற தென்றா ரேறு கின்றது தா
னெதுவென் றுரைத்தே னெதுநடுவோ ரெழுத்திட் டறிநீயென்று
சொலி, யெதிர்நின்றுவந் துநகைக்கின்றாரிதுதான்சேடியென்னேடீ.

(இ ள்.) பொது நின்று—அம்பலத்தில் நின்று, அருள்வீர்—அருள்செய்பவரே, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுமிருக்கின்றவரே, விழி—உம்கண், பூஉந்தியது என் என்றேன்—பூவைக் கடந்தது என்னென்றேன், (அதற்கு இவர்) நாம் ஏறுகின்றது—நாமேறுவது, இது என்று அறி என்றார்—இதுவென்றறிந்து கொள்வாயாகவென்றார், ஏறுகின்றதுதான்—ஏறுவதுதான், எது என்று உரைத்தேன்—எதுவென்று சொன்னேன், எதுநடு—எது நடுவில், ஓர் எழுத்து இட்டு நீ அறிஎன்றுசொல்லி—ஒரு எழுத்தை வைத்து நீ யறிந்துகொள்ளக்கடவையென்று சொல்லி, எதிர் நின்று—எதிரேநின்று, உவந்துநகைக்கின்றார்—களித்து நகைக்கிறார், இதுதான்சேடி யென்னேடீ. எ-று.

பொது-பொதுவிடம்; (அம்பலம், பொன்னம்பலம்,) பூவுந்தியதென்விழி-பூப்பட்டகண், என்கண் பூவை வென்றது; பூவுந்தியது-தாமரைமலரை உந்தியாகவுடையது, திருமால் (பத்மநாபன்) பூமியைக் கடந்தது, (அளந்தது); எது என்பதனடுவேயோரெழுத்தாகிய ரு என்பதைச் சேர்த்தால் எருது என்றாகும், ஏறுவது எருது என்றாயிற்று.

45. இட்டங்களித்த வொற்றியுளீ ரீண்டிவ்வேளையெவனென்றேன்
சுட்டுஞ் சுதனே யென்றார்நான் சுட்டியறியச் சொலுமென்றேன்
பட்டுண் மருங்குற் பாவாய்நீ பரித்ததன்றே பாரென்றே
யெட்டுங் களிப்பா லுரைக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) இட்டம்களித்த ஒற்றி உள்ளீர்—இஷ்டம்போலக் களித்திருக்கிற திருவொற்றியூரிலுள்ளவரே, ஈண்டு இவ்வேளை

எவன் என்றேன்—இவ்விடத்து இவ்வேளை யாதென்றேன், சுட்டும் சுதனே என்றார்—சுட்டத்தகுந்த குமரனே யென்றார், நான் சுட்டி அறியச்சொல்லும் என்றேன்—நான்குறித்துணரும்படி சொல்லும் என்றேன், (அதற்கு இவர்) பட்டு உள் மருங்குல்—பட்டாடையைத்தரித்த இடையையுடைய, பாவாய்—பாவையே, நீ பரித்தது அன்றே—நீதரித்ததன்றோ, பார் என்று—ஆராய்ந்து பார் என்று, எட்டும் களிப்பால் உரைக்கின்றார்—மிகுதியாகிய களிப்பினாற் சொல்லாநின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

வேளை-சமயம், சுதன்-குமாரன் (சாமிநாதன்) சாமி-பொன், நீபரித்தது-நீதரித்தது, பாவை-பிரதிமைபோல்வாள், இதுஉவமையாகுபெயர், எவன்-யாவன், யாது ; சுதன்-புதல்வன் ; பரித்தல்-தரித்தல்.

46. பாற்றக் கணத்தா ரிவர்காட்டுப் பள்ளித்தலைவரொற்றியினின்
றூற்றப் பசித்து வந்தாரா மன்ன மிடுமி னென்றுரைத்தேன்
சோற்றுக்கிளைத்தோமாயினும்யாஞ் சொல்லுக்கிளையேங்கீழ்ப்பள்ளி
யேற்றுக் கிடந்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) பாற்றுஅக்கணத்தார் இவர்—அழித்தற் றொழிலையுடைய அந்தப்பூதகணத்தாராகியஇவர், காட்டுப்பள்ளித்தலைவர்—காட்டுப்பள்ளித்தலைவராவார், (இவர்) ஒற்றியில் நின்று—ஒற்றியிலிருந்து, ஆற்றப் பசித்து வந்தாராம்—மிகப் பசித்துவந்தாராம், (இவர்க்கு) அன்னம் இடுமின் என்று உரைத்தேன்—அன்னமிடுங்களென்று சொன்னேன், (அதற்கு இவர்) சோற்றுக்கு இளைத்தோம் ஆயினும்—சோற்றுக்கு இளைத்தோமானாலும், யாம் சொல்லுக்கு இளையேம்—நாம்சொல்லுக்கு இளைக்கமாட்டோம், (நீ) கீழ்ப்பள்ளி—கீழாகியபள்ளியை, ஏற்று கிடந்தாய் என்கின்றார்—ஏற்றுக்கிடந்தனை யென்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

பாற்றல்-அழித்தல், காட்டுப்பள்ளி-காட்டில்வாழ்கின்ற பள்ளிச்சாதி, திருக்காட்டுப்பள்ளி, (ஒரு திருப்பதி). கீழ்ப்பள்ளி-கீழான பள்ளிச்சாதி, தரையாகிய படுக்கை ; (கணவனில்லாதவளென்பது குறிப்பு). சொல்லுக்கிளையேம்-சொல்லுக்குப் பின்வாங்கமாட்டோம்.

47. குருகா ரொற்றிவாணர்பலி கொள்ள வகையுண்டோவென்றே
னொருகாலெடுத்தீண்டுரையென்றாரொருகாலெடுத்துக்காட்டுமென்
வருகாவிரிப்பொன்னம்பலத்தேவந்தாற்காட்டுகின்றோம்வீ [றேன்
ழிருகா லுடையாயென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) குருகு ஆர்—பறவைகள் நிறைந்த, ஒற்றிவாணர்—ஒற்றியூரில்வாழ்பவரே பலிகொள்ள வகைஉண்டோ என்றேன்—பலியேற்க வகையுளதோ என்றேன், (அதற்கு இவர்) ஒருகால் எடுத்து—ஒருதரமெடுத்து, ஈண்டு உரை என்றார்—இவ்விடத்துச்சொல்லென்றார், (அதுகேட்டநான்) ஒருகால் எடுத்து காட்டும் என்றேன்—ஒருகாலெடுத்து நீர்தாம்சொல்லுமென்றேன், வருகா விரி—பெருகிவருகிற சோலைகள்பரந்த, பொன் அம்பலத்தே வந்தால்—பொற்சபைக்கு வந்தால், காட்டுகின்றோம்—காட்டுவோம், வீழ் இருகால் உடையாய் என்கின்றார்—விழுந்த இருகால்களை யுடையவளே யென்கிறார், இதுதான் சேடி என்னேடீ.

குருகார் என்றமையால் சோலை வயல் என்பவை மிக்கிருத்தல் பெறப்பட்டது, வகை-நியாயம், ஒருகால்-ஒருதரம், ஒருக்கால்; வீழ் இருகால் உடையாய்-இருகால்களிலும் விழுந்த ஆடையை யுடையவளே, இருகால் உடையாய்-அரையையுடையவளே, இருகால்-அரை, (நிதம்பம்). பெண்களிருக்குமிடத்தில் நிர்வாணியாய் வந்தீரே, உமக்குப் பிக்ஷையெடுக்க வகையுண்டோவென்று கேட்டதற்கு விடையாக நீதான் நிர்வாணியென்றார் என்பது கருத்து.

48. வேலை ஞாலம் புகழொற்றி விளங்குந் தேவ ரணிகின்ற
மாலை யாதென் றேனயன மான் மாலை யகற்று மாலையென்றார்
சோலை மலரன் றேயென்றேன் சோலை யேநாந் தொடுப்பதென
வேலை முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வேலை ஞாலம் புகழ்—கடல்சூழ்ந்த வுலகிலுள்ளார் புகழ்கின்ற, ஒற்றிவிளங்கும்—திருவொற்றியூரில் விளங்குகின்ற, தேவர்—தேவரீர், அணிகின்ற மாலை யாது என்றேன்—தரிக்கின்றமாலை யாதென்று கேட்டேன், (அதற்கு இவர்) அயன் மால் மாலை அகற்றும் மாலை என்றார்—பிரமவிட்டுணுக்களுடைய மயக்கத்தை யொழிக்கின்ற மாலையென்றார், (அதற்கு நான்) சோலை மலர் அன்றே என்றேன்—சோலை மலரல்லவே யென்றேன்,

(அதற்கு இவர்) சோலையே நாம்தொடுப்பது என—சோலையே யாம் தொடுப்பதென்றுசொல்லி, ஏல முறுவல் புரிகின்றார்—(அதற்கிணங்க) நகைசெய்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ—று.

வேலை-வேலா என்னும் வடசொற்றிரிபு. ஞாலம்-இடவாகு பெயர். தலைவி இறைவரை நோக்கி நீரணியுமாலை யாது என்று கேட்டதற்கு விடையாக பெண்ணே யர்மணியுமாலை பிரமவிட்டுணுக்களுடைய மயக்கத்தையொழிக்கின்ற மாலை யென்றார்; அதற்குத் தலைவி அப்படியானால் உமக்கு மாலையாயிருப்பது சோலைமலரல்லவே யென, அதற்கு இறைவர் ஆம், யாம் தொடுத்தணிவது சோலைமலர்மாலையேயாம் என்றார். சோலைக்கு தண்டலை யென வேறுபெயருண்டாதலால், தண்ணிய தலைமாலையென்றுயிற்று. அயன் மால் என மேற்குறித்தமையால் இதுவும் அவர்கள் தலைமாலை யென்க. மால்-மயக்கம், பெருமை; சோலை-தண்டலை, இதனைத் தண் தலையெனப் பிரித்துக் குளிர்ந்த தலைமாலை யென்றுரைத்துக்கொள்க, முறுவல் புரிகின்றார் என்பதனை ஒரு சொல்லாக்கி நகைக்கின்றார் என்றுரைப்பினுமாம்.

49. உயிருளுறைவீர் திருவொற்றி யுடையீர் நீரென் மேற்பிடித்த
வயிர மதனை விடுமென்றேன் வயிரி யலநீ மாதேயாஞ்
செயிரதகற்றுன்முலையிடங்கொள் செல்வனலகாண் டெளியென்றே
யியல்கொண் முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) உயிருள் உறைவீர்—உயிர்களெல்லா வற்றிலும் நிறைந்து வாழ்பவரே, திருவொற்றியுடையீர்—திருவொற்றியூரையுடையவரே, நீர் என்மேல்பிடித்த வயிரமதனை விடும் என்றேன்—நீர் என்மீது கொண்டிருக்கிற வைரத்தை விட்டுவிடுமென்று சொன்னேன், (அதற்கு இவர்) நீ வயிரி அல்ல—நீ வைரியல்ல, மாதே—பெண்ணே, யாம்—நாம், செயிரது அகற்றும்—குற்றத்தை நீக்குகிற, முலையிடம் கொள்—முலையிடத்தைக்கொண்ட, செல்வன் அல்ல—செல்வனன்று, தெளி என்று—தெளிவாயாக வென்று, இயல்கொள் முறுவல் புரிகின்றார்—அழகைக்கொண்ட நகைத்தலைச் செய்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ—று.

உயிருளுறைதலாவது-அந்தரியாமியாயிருக்குந்நிலை, (சர்வவியாபகத்துவம்.) வயிரம்-கடும்பகை, வச்சிராயுதம், வயிரி-வச்சிரா

யுதத்தையுடைய இந்திரன். முலை-தனம், இதற்குப் பரியாயம் சுவர்க்கம் (சுவர்க்கலோகம்). முலையிடங்கொள் செல்வன்-இந்திரன், செயிரகற்றுமுலை யென்றமையால் சுகத்தைத்தருவது சுவர்க்கம் என்றதாயிற்று. தலைவி இறைவரை நோக்கி, நீர் பிடித்த வயிரத்தை என்மேல் விடுமென்றாள். அதற்கு விடையாக இறைவர், பெண்ணே உன்மேல் எமக்குக் கோபமில்லை யென்றும், நீ யெமக்குச் சத்துருவல்லவென்றும், யாம் வச்சிராயுதத்தையுடைய இந்திரனல்லவென்றும், உன்முலைப்போகந் துய்க்க வநதோமென்றும் பொருள் தோன்றுமாறு, வயிரியல நீ மாதே யாம் செயிரதகற்றுன் முலையிடங்கொள் செல்வன் என்றார். செயிர்-துன்பம், செயிரதகற்று என்னும் விசேடணத்தால் இன்பந்தருவது. முலைக்குப் பரியாயம் சுவர்க்கம். முலையும் சுவர்க்கமும் இன்பந்தருவதென்றாயிற்று.

50. தண்கா வளஞ்சூழ் திருவொற்றித் தலத்திலமர்ந்த சாமிநுங்கை
யெண்கார் முகமாப்பொன்னென்றே னிடையிட்டறிதலரிதென்றார்
மண்கா தலிக்கு மாடென்றேன் மதிக்குங் கணைவில் லன்றென்றே
யெண்கா ணகைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) தண் கா வளம் சூழ்—குளிர்ந்தவளமாகிய சோலைகள் சூழ்ந்த, திருவொற்றித்தலத்தில் அமர்ந்த சாமி—திருவொற்றித்தலத்திலெழுந்தருளி யிருக்கின்றசாமீ, நும் கை—நுமதுகையிலுள்ள, எண்—மதிக்கத்தகுந்த, கார்முகம்—வில்லானது, மா பொன் என்றேன்—மாவெடைப்பொன் என்று சொன்னேன், (அதற்கு இவர் மாவெடைப்பொன்னேயாயினும்) இடையிட்டு அறிதல்—எடைபோட்டறிவது, அரிது என்றார்—அருமையாமென்றார், (அதற்கு நான்) மண்கா தலிக்கும் மாடுஎன்றேன்—மண்ணைவிரும்புகிறமாடு என்றேன், (அதற்கு இவர்) மதிக்கும் கணை—அது மதிக்கத்தகுந்தகணையாகும், வில் அன்று என்று—வில்லல்லவென்று சொல்லி, எண்காண் நகைசெய்தருள்கின்றார், எண்ணத்தையறியத் தகுந்த நகைத்தலைச் செய்கின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

மாபொன்-பெருமையுள்ள பொன், மாவெடைப் பொன். மா-காவில் ஐந்திலொரு பாகம். இடையிடல்-நிறுத்தல், மண் காதவிக்கும் மாடு. மண்ணுலகத்தார் விரும்புகிற பொன், மண்ணையுண்ண விரும்பின மால்-விடை. கணை-அம்பு. மண்காதலித்தல்

சர்வசங்காரகாலத்தில் திரிபுர தகனகாலத்தில் விட்டுணு இடபமாயும் அம்பாயுமிருந்தாரென்பது புராணக்கதை யாதலால் மண்காதலிக்கு மாடு என்றார்.

51. செய்காண்வளஞ்சூழொற்றியுளீர்திருமான்முதன்முத்தேவர்க
மைகாணீரென்றேனிதன்மேலணங்கேநீயேழடைதியென்றார் [ட்கு
மெய்காண துதானென்னென்றேன்விளங்குஞ்சுட்டுப்பெயரென்றே
யெய்கா ணுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) செய்காண் வளஞ்சூழ்—வயல்களாகக் காணப்படுகிற வளத்தாற் சூழப்பட்ட, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ள வரே, திருமால்முதல் முத்தேவர்கட்கும்—திருமால் முதலாகிய மூன்று தேவர்களுக்கும், நீர் ஐ காண் என்றேன்—நீர் கடவுள் காணும் என்றேன், (அதற்கு இவர்) இதன்மேல்—இதற்குமேலே, அணங்கே—பெண்ணே, நீ எழ் அடைதி என்றார்—நீ எழினை யடைவாயென்றார், (அதற்கு யான்) மெய்காண்—உண்மைதான் காணும், அதுதான் என் என்றேன்—அது தான் யாதென்றேன், விளங்கும் சுட்டுப்பெயர் என்று—விளங்குகின்ற சுட்டுப்பெயர் என்றுசொல்லி, எய்காணுற நகைக்கின்றார்—யாவருங் காணும்படி சிரிக்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

ஐயென்பதற்கு முன்னே எழ் என்பதைச் சேர்த்தால் ஏழை யென்றாகும்; அது சுட்டுப்பெயர், காணுற-பிரத்தியக்ஷமாக, தலைவி இறைவரை நோக்கி, நீர் மும்மூர்த்திகட்கும் மேலான கடவுள் என்றாள். ஐ-கடவுள். இதற்கு இறைவர் ஐந்தெனப்பொருள் கொண்டு பெண்ணே, நீ ஐ என்பதற்கு மேல் எழ் என்பதை அடைவாய் என்றார். அதாவது நீ யேழை என்றாராயிற்று. அதற்குத் தலைவி, ஐயரே, நீர் சொல்லுவது விளங்கவில்லை அது என்னென்றாள். அதற்கு இறைவர், பெண்ணே நீ யேழையாத லால் இதனை யறிந்திலைபோலும் என்று சிரித்தார். எய்த்தல்-அறிதல்.

52. விண்டு வணங்கு மொற்றியுளீர் மென்பூ விருந்தும் வண்பூவில்
வண்டு விழுந்ததென்றேனெம் மலர்க்கை வண்டும்விழுந்ததென்றார்
தொண்டர்க்கருள்வீர்மிகவென்றேன் றோகாய்நாமேதொண்டனெ
வெண்டங் குறவே நகைக்கின்றா ரிதுதான்சேடி என்னேடீ. [ன

(இ-ள்.) விண்டுவணங்கும்—திருமால்வணங்குதற்குரிய, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரி லெழுந்தருளியிருப்பவரே, மெல் பூ இருந்தும்—மெல்லிய பூவிலிருந்தும், வண்பூவில்—வளவியபூவில், வண்டுவிழுந்தது என்றேன்—வண்டுவிழுந்ததென்றுசொன்னேன், (அதற்கு இவர்) எம்—எமது, மலர் கை வண்டும்—தாமரைமலர் போலுங் கையிலிருந்த வண்டும், விழுந்தது என்றார்—விழுந்த தென்று சொன்னார், (அதுகேட்ட நான்) தொண்டர்க்கு—அடிய வர்க்கு, மிக அருள்வீர் என்றேன்—மிகுதியாக அருள்செய்வீர் என்று சொன்னேன், (அதற்கு இவர்) தோகாய்—பெண்ணே, நாமே தொண்டன் என—யாமே தொண்டனென்று, எண் தங்குற நகைக்கின்றார்—மதிப்புண்டாகச் சிரிக்கின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

மென்பூ-தாமரைமலர்போலுங்கை. வண்பூவில்-வளவிய பூவுல கில் (நிலத்தில்). மலர்க்கை வண்டு-தாமரை மலர் போலும் கையி லுள்ள சங்கு; வண்டு-வளையல், நாமே தொண்டன்-யாமேதொண் டன் (சுந்தரர்க்குத் தூது போனது முதலியவற்றைக் குறித்தது).

53. மட்டார்மலர்க்காவொற்றியுளீர்மதிக்குங்கலைமேல்விழுமென்றே
எட்டாமெழுத்தை யெடுத்தநா மிசைத்தேமென்றுரொட்டாக [ன்
உட்டா வுறுமவ் வெழுத்தறிய வுரையீ ரென்றே னந்தணரூர்க்
கிட்டார் நாம மென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) மட்டுஆர்—தேன்பொருந்திய, மலர் கா—பூஞ்சோலை கள் சூழ்ந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலெழுந்தருளி யிருப் பவரே, மதிக்கும் கலைமேல்விழும் என்றேன்—மதித்தற்குரிய கலை யானது மேலேவிழுமென்று சொன்னேன், (அதற்கு இவர்) நாம் எட்டாம் எழுத்தை எடுத்தது—யாம் எட்டாமெழுத்தை யெடுத் தது, இசைத்தேம் என்றார்—சொன்னோமென்றுசொன்னார், (அது கேட்ட நான் எட்டுஆகஉள் தா வுறும் அவ்வெழுத்து—எட்டென்று மனத்திற்பொருந்தும்படியான அந்த எழுத்தை, அறிய உரைப்பீர் என்றேன்—அறியும்படி சொல்லுவீர் என்றேன், (அதற்கு இவர்) அந்தணர்—வேதியர், ஊர்க்கு—ஊரிலுள்ளார்க்கு, நாமம் இட்டார் என்கின்றார்—நாமமிட்டாரென்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

கலை-ஆடை, எட்டாமெழுத்து-அ, எடுத்தது-விழும் (அவிழும்); அந்தணரூர்-அக்கிராரம், இதில் முதலெழுத்து அகரம், கலை அவிழும் என்றுரென்பது குறிப்பு.

54. ஒற்றி நகரீர் மனவசிதா னுடையார்க் கருள்வீர் நீரென்றேன்
பற்றி யிறுதி தொடங்கியது பயிலு மவர்க்கே யருள்வதென்றார்
மற்றி துணர்கி லேனென்றேன் வருந்தே லுள்ள வன்மையெலாம்
எற்றி லுணர்தி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஒற்றி நகரீர்—திருவொற்றிநகரத்திலுள்ளவரே, மன அசிதான் உடையார்க்கு அருள்வீர்—மனத்தில் அன்புடையவர்களுக்கு அருள்செய்வீர், நீர் என்றேன்—நீரென்று சொன்னேன், (அதற்கு இவர்) பற்றி இறுதி தொடங்கி—பற்றி இறுதி ஆரம்பித்து, அது பயிலுமவர்க்கே—அதனைப்பழகுவோர்க்கே, அருள்வது என்றார்—நாம் அருள்செய்வது என்று சொன்னார், இது உணர்கிலேன் என்றேன்—இதனை அறிந்திலேனென்று சொன்னேன், (அதற்கு இவர்) வருந்தேல்—வருந்தாதே, உள்ள வல் மை எல்லாம்—உளதாகிய வலிய அஞ்ஞானமுழுதும், எற்றில் உணர்தி என்கின்றார்—நீக்கினால் அறிவாய் என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

மனவசி இறுதிதொடங்கினால்-சிவனம என்றாகும். வல் மை-வலிய அஞ்ஞானம். எற்றில்-நீக்கினால்.

55. வான்றோய்பொழில்சூழொற்றியுளீர்வருந்தாதணைவேனேவென்றேன், ஊன்றோயுடற்கென்றார்தெரிய வுரைப்பீரென்றேனேவிதுதான், சான்றோருமதுமரபோர்ந்துதரித்தபெயர்க்குத்தகாதென்றே யென்றோர் மொழிதந் தருள்கின்று ரிதுதான்சேடி யென்னேடீ.

(இ-ள்.) வான்தோய்—ஆகாயத்தைத்தொடுகின்ற, பொழில் சூழ்—சோலைசூழ்ந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, வருந்தாது—வருந்தாமல், அணைவேனே என்றேன்—அணைவேனேவென்று சொன்னேன், (அதற்கு இவர்) ஊன்தோய் உடற்கு என்றார்—ஊன்பொருந்திய வுடம்பிற்கென்றுசொன்னார், (அதுகேட்ட நான்) தெரிய உரைப்பீர் என்றேன்—தெரியும்படி சொல்லுவீரென்றேன், ஓ—ஓ, இதுதான்—இதுதானே, சான்

ளூர்—பெரியோர், உமது மரபு ஓர்ந்து—உமது பெண்மரபை யறிந்து, தரித்தபெயர்க்கு—(உமக்கு) இட்டபெயர்க்கு, தகாது என்று—தகுதியன்றென்று, என்று—எதிர்த்து, ஓர்மொழிதந் தருள்கின்ளூர்—ஒருசொல்லைச் சொல்லியருளுகிளூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

தாது-பொன், (பொன்னணி) உமது மரபோர்ந்து சான்ளூர் தரித்த பெயர் என்றது மெல்லியார், அப்பெயர்க்குத்தகாது என்றது மெல்லியராகிய வுமக்குப்பெரும் பொறையும் வன்மையுமுள்ள பொன்னணி தகாது என்றபடி. வருந்தாது என்பதனை வரும் தாது எனப் பிரித்து உண்டாகிய பொன்னணி யென்றுமுரைத்துக்கொள்க.

56. தீது தவிர்க்கு மொற்றியுளீர் செல்ல லறுப்ப தென்றென்றேன்
ஈது நமக்குத் தெரிந்ததென்ளூ ரிறையா மோவிங் கிதுவென்றேன்
ஓதுமடியார் மனக்கங்கு லோட்டுநாமே யுணரன்றி
ஏது மிறையன் றென்கின்ளூ ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) தீதுதவிர்க்கும்—தீமைகளை நீக்குகின்ற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, செல்லல் அறுப்பது என்று என்றேன்—எமது துன்பத்தை யொழிப்பது என்று என்றேன், (அதற்கு இவர்) ஈது நமக்கு தெரிந்தது என்ளூர்—இது எமக்குத் தெரிந்ததேயென்று சொன்னூர், (அதற்கு நான்) இங்கு இது இறை ஆமோ என்றேன்—இது தலைமையாகுமோ என்றேன், (அதற்கு இவர்) ஓதும் அடியார்—துதிக்கின்ற அடியாரது, மனம் கங்குல்—மனத்திருளை, ஓட்டும்—துரத்துகின்ற, நாமே உணர் அன்றி—யாமேயறிதலல்லது, ஏதும்—மற்றையதாகிய ஏதுவும், இறை அன்று—தலைமையன்று, என்கின்ளூர்—என்று சொல்லுகிளூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

தீது-தீமையாகிய செயல், அதனுலுண்டாகும் பாவம். தீது தவிர்க்கும் என்பது ஒற்றிக்காதல் ஒன்றியுள்ளார்க்காதல் விசேடணமாகக்கொள்க. செல்லலறுப்பதென்று என்பதனை செல் அல் அறுப்பது என்று எனப்பிரித்து, செல்லாநின்ற இருளையறுப்பது சூரியன் எனவும் பொருளுரைக்கலாம். உணர்-முதனிலைத்தொழிற்பெயர்.

57. ஒண்கை மழுவோ டனலுடையீ ரொற்றி நகர்வா ழுத்தமர்நீர்
வண்கையொருமைநாதரென்றேன் வண்கைப்பன்மைநாதரென்றார்
எண்கணடங்காவதிசயங்காணென்றேன்பொருளன்றிவையதற்கெ
ன், றெண்சொன் மணிதந்தருள்கின்றா ரிதுதான்சேடி என்னேடீ.

(இ-ள்.) ஒள் கை—ஒட்பமாகிய கையில், மழுவோடு அனல் உடையீர்—மழுவுடனே நெருப்பையுமுடையவரே, ஒற்றிநகர்வாழ் உத்தமர்—திருவொற்றிநகரத்தில் வாழ்கின்ற உத்தமரே, நீர்—நீர், வண்கை—கொடைக்கையினையுடைய, ஒருமைநாதர் என்றேன்—ஒப்பற்றதலைவர் என்றேன், (அதற்கு இவர்) வண்கைபன்மைநாதர் என்றார்—கொடைக்கை பலவற்றையுடைய நாதர் என்றார், (அதற்கு நான்) எண்கண் அடங்கா அதிசயம்காண் என்றேன்—கணக்கிலடங்காத அதிசயமாயிருக்கிறதென்றேன்; (அதற்கு இவர்) அதற்கு இவை பொருள் அன்று என்று—அதற்கிவை பொருளல்லவென்று, எண்சொல்மணிதந்தருள்கின்றார்—மதித்தற்குரிய மணிவார்த்தைகளைத் தந்தருளாநின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ—று.

உத்தமர்-அண்மைவிளியாதலால் இயல்பாயிற்று; ஒருமைநாதர் என்றதற்கேற்பப்பன்மைநாதர் என விடையிறுக்கப்பட்டது. கைப்பன்மைநாதர் பலகைநாதர், அதிசயம்-மிகுவெற்றி; அதிகமானகை, ஆச்சரியம். சொல்மணி-மணிபோலுஞ் சொல், மணி-மாணிக்கம், ஒருமைநாதர் என்பற்கு மோக்ஷத்துக்கு நாதர் என்றுரைத்தலுமாம்.

58. ஒருவரெனவாழொற்றியுளீ ருமக்கம்மனையுண்டோவென்றேன்
இருவரொருபேருடையவர்காணென்றா ரென்னென்றேனெம்பேர்
மருவு மீறற் றயலகரம் வயங்கு மிகர மானதென்றே
இருவு மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஒருவர்எனவாழ்—ஒருவரென்று சொல்லும்படி வாழ்கின்ற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரில் வாழ்பவரே, உமக்கு அம்மனை உண்டோ என்றேன்—உமக்கு அம்மனையுண்டோவென்று கேட்டேன், (அதற்கு இவர்) இருவர் ஒருபேர் உடையவர்காண் என்றார்—இருவரும் ஒரேபெயருள்ளவர்காணென்று சொன்னார், (அதுகேட்டநான்) என்என்றேன்—அதுயாதென்றேன், (அதற்கு

இவர்) எம்பேர்—எமது பேரானது, மருவும் ஈறுஅற்று—பொருந்திய இறுதியற்று, அயல்அகரம்—அயலிலுள்ள அகரம், வயங்கும் இகரம் ஆனது என்று—விளங்குகிற இகரமானது என்று, இருவுமொழி தந்தருள்கின்றார்—இருவுமொழியை விடையாகச் சொல்லியருள்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

ஒருவர்-ஒப்பற்றவர், அம்மனை-அழகிய மனைவி, இருவர் ஒருபேருடையவர்-ஒரு பேருள்ள இரண்டு மனைவியர், ஒருபேர்-சங்கரி, இது உமாதேவிக்கும் திருமாலுக்கும் பெயர், உமாதேவியைக் குறிக்கும்போது சம்கரியெனப்பிரித்து சுகத்தைச்செய்பவள் என்றும், திருமாலைக்குறிக்கும்போது சங்கு அரியெனப்பிரித்து சங்கைத்தரித்தவிஷ்ணுவென்றும் பொருள்கொள்க. எம்பேர் என்றது சங்கரன்—இதில் ஈறற்ற அயலகரம் இகரமானது சங்கரி இருவுமொழி-மறுமொழி.

59. பேரா ரொற்றி யீரும்மைப் பெற்றா ரெவரென் றேனவர்நம் மேரார் பெயரின் முன்பினிரண் டிரண்டா மெழுத்தா ரென்றாரென் னேரா யுரைப்பீ ரென்றேனீ நெஞ்ச நெகிழ்ந்தா லுரைப்பாமென் றேரா யுரைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) பேர் ஆர் ஒற்றியீர்—பெருமை நிறைந்த திருவொற்றியூரையுடையவரே, உம்மைபெற்றார் எவர் என்றேன்—உம்மை ஈன்றார் யாவரென்றேன், (அதற்கு இவர்) அவர் நம்—அவர் எமது, ஏர் ஆர்—அழகு பொருந்திய, பெயரின் முன்பின்—பெயரின்முன்பின்னுயுள்ள, இரண்டு இரண்டாம் எழுத்தார் என்றார்—இரண்டு இரண்டாமெழுத்தையுடையவர் என்று சொன்னார். என்—என்ன, நேராய் உரைப்பீர் என்றேன்—நேராகச் சொல்லுவீரென்று கேட்டேன், (அதற்கு இவர்) நீ நெஞ்சம் நெகிழ்ந்தால் உரைப்பாம் என்று—நீ மனமுருகினல் சொல்லுவோமென்று, ஏராய் உரை செய்தருள்கின்றார்—அழகாய்ச் சொல்லி யருளுகிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

இரண்டிரண்டு-நான்கு, இரண்டிரண்டா மெழுத்து-சிவநம. இரண்டிரண்டா மெழுத்தார்-சிவநம வென்னும் நான்கெழுத்தை யுச்சரிப்பவர். பெற்றார் என்பது கிடைக்கப்பெற்றவர் என்னும் பொருளது.

60. தளிநான் மறையீ ரொற்றிநகர் தழைக்க வாழ்வீர் தனிஞான
வொளிநா வரசை யைந்தெழுத்தா லுவரி கடத்தி னீரென்றேன்
களிநா வலனை யீரெழுத்தாற் கடலின் வீழ்த்தி னேமென்றே
யெளியேற் குவப்பின் மொழிகின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) தளிநான் மறையீர்—பெருமைபொருந்திய சதுர்வேதப் பிரதிபாத்தியரே, ஒற்றி நகர் தழைக்க வாழ்வீர்—திருவொற்றிநகரம் செழிக்கவாழ்பவரே, தனிஞானவொளி—ஒப்பற்ற ஞானப்பிரகாசத்தையுடைய, நாவரசை—திருநாவுக்கரசை, ஐந்து எழுத்தால்—ஸ்ரீபஞ்சாக்ஷரத்தால், உவரி கடத்தினீர் என்றேன்—கடலைக்கடக்கும்படி செய்தீர் என்றேன், (அதற்கு இவர்) களிநாவலனை—களிப்பையுடைய நாவலூரனை, ஈரெழுத்தால்—இரண்டெழுத்தால், கடலில் வீழ்த்தினேம் என்று—கடலில்விழுத்தினே மென்று, எளியேற்கு—எளியேனுக்கு, உவப்பின்மொழிகின்றார்—மகிழ்வோடு சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

நாவரசு-அப்பர், (வாகீசர்.) நாவலன்-சுந்தரர். ஈரெழுத்து-இரண்டெழுத்தாகிய தூது. கடலின்வீழ்த்தல்-சமுசாரக்கடலில் தள்ளல். உவரி கடல் என்பவற்றிற்குப்பரியாயம். பரவை, அப்பர் பரவையிலேறினர், சுந்தரர் பரவையில் வீழ்ந்தார். பரவை-பரவைநாச்சியார்.

61. ஓமூன் றுளத்தீ ரொற்றியுளீருற்றோர்க்களிப்பீரோவென்றேன்
றாமூன் றென்பார்க் கயன்மூன்றுந் தருவே மென்றா ரம்மமிகத்
தேமூன்றினநும்மொழியென்றேன்செவ்வாயுறுமுன்னகையென்
யேமூன் றுறவே நகைக்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ. [றே

(இ-ள்.) ஓம்ஊன்று உளத்தீர்—ஓங்காரமூன்றியதிருவுளத்தையுடையவரே, ஒற்றிஉள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, உற்றோர்க்கு—அடைந்தவர்க்கு, அளிப்பீரோ என்றேன்—கிருபைசெய்வீரோ என்றேன், (அதற்கு இவர்) தாமூன்று என்பார்க்கு—தாமூன்றென்பவர்க்கு, அயல்மூன்றும் தருவேம் என்றார்—அயலாகிய மூன்றையும் தருவேமென்றார், (அதற்கு நான்) அம்ம—ஆச்சரியம், மிக—மிகவும், தேம்ஊன்றின நும்மொழி என்றேன்—இனிமையுண்டாயிருக்கின்றது நுமது சொல்லினிடத்தென்றேன், (அதற்கு இவர்) செவ்வாய் உறும் உன் நகையென்று—செவ்வாயி

லுண்டாகிய உன் நகையிடத்தே என்று சொல்லி, ஏமம் ஊன்றுற நகைக்கின்றார்—இன்பமுண்டாகும்படி நகைக்கின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

ஓம்-பிரணவம் ; தாமூன்று-தாதாதா-முத்தர். தாவுக்கு அயல் மூன்று-தீதீதீ-முத்தீ, (முத்தி முத்தீயென நீட்டலாயிற்று), தேமூன்று-தேதேதே, முத்தே, உன்செவ்வாயிலுண்டாகிய நகை முத்தே யொத்திருக்கின்றது என்பது கருத்து. ஏமம்-இன்பம். இது ஏம் எனக்கடைக்குறையாயிற்று. தே மூன்றின என்பதற்குத் தேனை யொத்திருக்கின்றது என்று முரைத்துக்கொள்க. முத்தா-முத்தனே, முத்தை நிகர்த்தவனே என்றும் உரைத்துக் கொள்க. வேயீன்றமுத்தேயெனினுமாம்.

62. மன்னி விளங்கு மொற்றியுளீர் மடவா ரிரக்கும்வகையதுதான்
முன்னிலொருதா வாமென்றேன் முத்தாவெனலேமுறையென்றார்
என்னிலிதுதா னையமென்றே னெமக்குந் தெரியு மெனத்திருவா
யின்ன லமுத முகுக்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) மன்னிவிளங்கும் ஒற்றிஉள்ளீர்—நிலைபெற்றுவிளங்குகிற திருவொற்றி நகரிலெழுந்தருளியிருப்பவரே, மடவார்-அறியாமையுள்ளவர், இரக்கும்வகையது தான் முன்னில்—இரக்கும் விதத்தை ஆலோசித்தால், ஒருதா ஆம் என்றேன்—ஒருதா ஆகுமென்றேன், (அதற்குஇவர் அங்ஙனமன்று) முத்தாஎனலே முறை என்றார்—முத்தாவென்று சொல்லுதலேமுறையென்றார், (அதற்கு நான்) என்னில் இதுதான் ஐயம் என்றேன்—என்னிடத்தில் இதுவே ஐய மென்றேன், (அதற்கு இவர்) எமக்கும் தெரியும் என—எமக்கும் தெரியுமென்று, திருவாயில்—தமது திருவாயினின்றும், நல்அமுதம் உகுக்கின்றார்—நல்ல அமிர்தத்தைச் சிந்துகின்றார், இதுதான் சேடி யென்னேடீ, எ-று.

மடவார்-அறிவிலார், (மடைமை-பகுதி) தா-குற்றம், முத்தா-முக்குற்றம், (காமம், வெகுளி, மயக்கம்,) என்னில்-என் இல், என் வீடு ; ஐயம்-சந்தேகம், பிச்சை, இரத்தற்குக் காரணம் முக்குற்றமென்பது தோன்ற, "மடவாரிரக்கும் வகையதுதான் முன்னிலொருதாவாமென்றேன் முத்தாவெனலே முறை" என்றார்.

63. வளஞ்சே ரொற்றி யீரெனக்கு மாலை யணிவீ ரோவென்றேன்
குளஞ்சேர் மொழிப்பெண் பாவாய்நின் கோலமனைக்கணுமகிழ்வால்
உளஞ்சேர்ந்தடைந்தபோதேநின் னுளத்திலணிந்தேமுணரென்றே
யிளஞ்சீர் நகைசெய் தருள்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வளம்சேர் ஒற்றியீர்—எல்லாவளங்களும் சேர்ந்திருக்கிற திருவொற்றி நகரிலிருப்பவரே, எனக்கு மாலை அணிவீரோ என்றேன்—எனக்குமாலை தரிப்பீரோவென்றேன், (இவர்) குளம்சேர் மொழி—குளஞ்சேர்ந்த சொல்லையுடைய, பெண்பாவாய்—பெண்பாவையே, நின்—உனது, கோலம்—அழகிய, மனைக்கண்—வீட்டின்கண், ஆம்—உண்டாகிற, மகிழ்வால்—மகிழ்ச்சியால், உள்ளமசேர்ந்து அடைந்தபோதே—மனமொத்து அடைந்தபோதே, நின் உளத்தில் அணிந்தேம்—உன்மனத்திலணிந்தோம், உணர் என்று—தெரிந்துகொள்ளென்று, இளஞ்சீர்நகை செய்தருள்கின்றார்—சிறப்புள்ள இளநகை செய்தருளாநின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

வளம்-செல்வம், நிலவளம் நீர்வள முதலிய வெனினுமாம். மாலை-மயக்கத்தை, மால்-மயக்கம், பூமாலை ; குளம்-வெல்லம், சர்க்கரை ; பெண்பாவை-பெண்ணுருவாகிய பிரதிமை, உள்ளம்-மனம், மாலை யென்றதற்கேற்ப மார்பு என்று முரைத்துக்கொள்க.

64. வீற்றா ரொற்றி நகரமர்ந்தீர் விளங்கு மலரே விளம்புநெடு
மாற்றா ரென்றே னிலைகாணெம் மாலை முடிமேற் பாரென்றார்
சாற்றாச் சலமே யீதென்றேன் சடையின் முடிமே லன்றென்றே
யேற்றா தரவான் மொழிகின் றாரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வீற்று ஆர்—பெருமையோடு விளங்குகிற, ஒற்றிநகர் அமர்ந்தீர்—திருவொற்றிநகரி லமர்ந்தவரே, விளங்கும் அலரே—விளங்குகின்ற அலரே, விளம்பும்—சொல்லுகின்ற, நெடுமொற்றார் என்றேன்—பெரும்பகைவர் உண்டென்றேன், (அதற்கு இவர்) இலைகாண்—இல்லைகாண், எம்மாலை முடிமேல் பார் என்றார்—எமது மாலை முடிமீது பார்க்கக் கடவையென்றார், (அதற்கு நான்) சடையின் முடிமேல்—சடைமுடிமேலுள்ள, ஈது—இது, சாற்றா—சொல்லவொண்ணாத, சலமே என்றேன்—சலமேயென்று சொன்னேன், (அதற்கு இவர்) அன்று என்று—அல்லவென்று, ஏற்று

ஆதரவால் மொழிகின்றார்—அதிகரித்த அன்போடு சொல்லா நின்றார், இதுதான்சேடி என்னேடீ. எ-று.

வீறு-பெருமை. அலர்-பழிமொழியாகிய நிந்தை, மலர். மாற்றார்-பகைவர். மால்தார்-பெருமையுள்ள மாலை, மயக்கத்தைத் தருகிற மாலை. இலை-இல்லை ; இலை-வில்வபத்திரம் முதலியன. சலம்-நீர், பொய். மாலை இலையென்றியைத்து எமது மாலை இலையாற்றொடுக்கப்பட்டது, மாலையில்லை, என்றுரைத்துக்கொள்க. ஆதரவு-அன்பு.

65. புயப்பா லொற்றி யீரச்சம் போமோ வென்றே னாமென்றார்
வயப்பா வலருக் கிறையானீர் வஞ்சிப் பாவிங் குரைத்ததென்றேன்
வியப்பாநகைப்பாவெனும்பாவெண்பாகலிப்பாவுரைத்துமென்றே
யியற்பான் மொழிதந் தருள்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) புயப்பால் ஒற்றியீர்—நீர்ப்பக்கங்களுடைய திருவொற்றியூரரே, அச்சம் போமோ என்றேன்—அச்சம் ஒழியுமோ வென்றேன், (இவர்) ஆம் என்றார்—ஆமென்று சொன்னார், வயம் பாவலருக்கு—வெற்றியுள்ள பாவலர்களுக்கு, இறைஆனீர்—தலைவரானீர், வஞ்சிப்பா இங்கு உரைத்தது என்றேன்—வஞ்சிப்பாவே நீரிப்பொழுது சொன்னது என்றேன், (அதற்கு இவர்) வியப்பு ஆம்—வியப்புண்டாதற்குரிய, அ—அந்த, நகைப்பாஎனும்பா—ஆசிரியப்பாவென்கிறபாவும், வெண்பா—வெண்பாவும், கலிப்பா—கலிப்பாவும், உரைத்தும் என்று—சொல்லுவோமென்று, இயல் பால் மொழிதந்தருள்கின்றார்—பொருந்திய பால்போலும் இன்சொற்சொல்லியருளாநின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

புயல்-நீர், அதுபுயற்பாலெனப் புணர்தலொழிந்து புயப்பாலென்றெதுகையின்ப நோக்கிப் புணர்ந்தது. பாவலர்-சுந்தரர் முதலியோர். வஞ்சிப்பா-வஞ்சனையாக, வியப்பா என்பதனீற்று ஆகாரத்தை நகைப்பா என்பதனோடு சேர்க்க ஆசிரியப்பா என்றாகும், நகை-சிரிப்பு ; அச்சம்போ-அந்தச் சம்புவே. [றேன்

66. தண்ணம்பொழில்சூழொற்றியுளீர்சங்கங்கையிற்சேர்த்திருமென்
றிண்ணம்பலமேல் வருங்கையிற் சேர்த்தோமுன்னர்தெரியென்றார்
வண்ணம்பலவிம் மொழிக்கென்றேன் மடவாயுனதுமொழிக்கென்
றே,யெண்ணங்கொளநின் றுரைக்கின்றாரிதுதான்சேடிஎன்னேடீ.

(இ-ள்.) தண் அம்பொழில்சூழ்—குளிர்ச்சியும் அழகுமுள்ள சோலைகள் சூழ்ந்த ஒற்றிஉள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, சங்கம் கையில் சேர்த்திடும் என்றேன்—சங்கவளையலைக் கையிலணிந்திடுமென்றேன், (அதற்கு இவர்) திண்ணம்—நிச்சயம், பலமேல்வரும் கையில்—பலமேலான பெண்கள் கையில், முன்னர் சேர்த்தோம்—முற்காலத்துச் சேர்த்தோம், தெரிஎன்றார்—(அந்தச் செய்தியை) அறிந்துகொள்வாயாகவென்றார், (அதற்கு நான்) இம்மொழிக்கு—இந்தச் சொல்லுக்கு, பலவண்ணம் என்றேன்—பலவகை என்றேன், (அதற்கு இவர்) மடவாய்—பெண்ணே, உனது மொழிக்கு என்று—உன் சொல்லுக்கேயாமென்று, எண்ணம்கொள்ள நின்றுஉரைக்கின்றார், ஆலோசிக்கும்படி நின்று சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

சங்கம்-சங்கவளையல், தமிழ்ச்சங்கம். பலமேல் வருங்கை-பலவென்பது மேலே வரப் பெற்றகை பலகை. அது சங்கப்பலகை; வளையல் சேர்த்தது கூடலிற் பெண்கள் கையில், இது திருவிளையாடற்புராணத்து வளையல் விற்ற படலத்தில் விசதம். பல-பலாப்பழம், பலவிம்மொழிக்கு-பலாப்பழத்தின் சுவையே யிச்சொல்லுக்குவமையாவது.

67. உகஞ்சே ரொற்றி யூருடையீ ரொருமா தவரோ நீரென்றேன் முகஞ்சேர்வடிவேலிரண்டுடையாய்மும்மாதவர்நாமென்றுரைத்தார், சுகஞ்சேர்ந்திடுநும்மொழிக்கென்றேன்றோகாயுனதுமொழிக்கென்றே, யிகஞ்சேர்நயப்பா லுரைக்கின்ற ரிதுதான்சேடிஎன்னேடீ.

(இ-ள்.) உகம்சேர்—ஊழிக்காலத்தும் நிலைபெற்றிருக்கிற, ஒற்றியூர் உடையீர்—திருவொற்றியூரையுடையவரே, நீர் ஒரு மாதவரோ என்றேன்—நீர் ஒரு மாதவரோவென்று வினவினேன், (அதற்கு இவர்) முகம்சேர்வடிவேல் இரண்டு உடையாய்—முகத்தைச்சேர்ந்த வடிவேலிரண்டையுடையவளே, நாம்—யாம், மும்மாதவர் என்று உரைத்தார்—மும்மாதவரென்று சொன்னார், (அதற்கு நான்) நும்மொழிக்கு சுகம் சேர்ந்திடும் என்றேன்—உமது சொல்லுக்கு சுகம் சேருமென்றேன், (அதற்கு இவர்) தோகாய்—பெண்ணே, உனது மொழிக்கு என்று—(சுகஞ்சேர்வது) உன் சொல்லுக்கேயாகுமென்று, இகம்சேர் நகைப்பால்

உரைக்கின்றூர்—இவ்விடத்துப்பொருந்திய சிரிப்போடு சொல்லு கின்றூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

ஒரு மாதவர்-ஒரு பெண்ணையுடையவர், மும்மாதவர்-மூன்று பெண்களையுடையவர், (உமை, கங்கை, விஷ்ணு). சுகம்-நன்மை, கிளி. இகம்சேர்நயப்பு-உலகமுழுதும் விரும்பியடைதற்குரிய இன் சொல், தோகை-தோகையையுடைய மயிலுக்குச் சினையாகு பெய ராய், அது பெண்ணுக்கு உவமையாகு பெயராயிற்று. முகஞ்சேர் வடிவேலிரண்டு என்றது இரண்டு கண்களை, "முகத்திற்பகழி யிரண்டுடையார்" என்றூர் பிறரும்.

68. ஊரா மொற்றி யீராசை யுடையே னென்றே னெமக்கல து
நேரா வழக்குத் தொடுக்கின்றூய் நினக்கே தென்றூர் நீரெனக்குச்
சேரா வணமீ தென்றேன்முன் சேர்த்தீ தெழுதித் தந்தவர்தாம்
யாரார் மடவா யென்கின்றூ ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஊர்ஆம் ஒற்றியீர்—திருவொற்றியூரை யுடையவரே, ஆசை உடையேன் என்றேன்—ஆசையுடையேனென்று சொன் னேன், (அதற்கு இவர்) எமக்கு அல்லது—எமக்கேயன்றி, நினக்கு ஏது—உனக்கேது, நேரா வழக்கு தொடுக்கின்றூய்—தொடுவழக் கிடுகிறூய், என்றூர்—என்று சொன்னூர், (அதற்கு நான்) நீர் எனக்கு சேராவண்ணம் ஈது என்றேன்—இது எனக்குப் பொருந் தாதவகை என்றேன், (அதற்கு இவர்) முன்—முன்னே, ஈது சேர்த்து—இதைச் சேர்த்து, எழுதித் தந்தவர்—எழுதிக்கொடுத்த வர், யார் ஆர்—எவர் எவர், மடவாய்—பெண்ணே, என்கின்றூர்— என்று சொல்லுகின்றூர், இதுதான் சேடி என்னேடீ.

ஆசை உடையேன்-விருப்பமுடையேன், திக்காகியஆடையை யுடையேன், ஆசை-திக்கு, உடை-ஆடை, சேராவணம்-சேர் ஆவ ணம், சேர்தற்குரிய அடையாளம், உரிமைப்பத்திரம்.

69. வருத்தந் தவிரீ ரொற்றியுளீர் மனத்திலகாத முண்டென்றேன்
இருத்தந் தொழுநம் மடியவரை நினைக்கின் றூரைக் காணினது
வருத்தன் பெயர்முன் னெழுத்திலக்க முற்றே மற்ற வெல்லையகன்
றிருத்த லறியாய் என்கின்றூ ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) வருத்தம் தவிரீர்—துன்பத்தை நீக்காதிருக்கின்றீர், ஒற்றி உள்ளீர்—திருவொற்றியிலுள்ளவரே, மனத்தில்—உமது மனத்தில், அகாதம் உண்டு என்றேன்—வஞ்சனையுண்டென்று சொன்னேன், (அதற்கு இவர்) நிருத்தம் தொழும்—நமது நிருத்தத்தை வணங்குகின்ற, நம் அடியவரை—எமது அடியாரை, நினைக்கின்றோரை—நினைப்பவரை, காணில்—கண்டால், அது—அந்த அகாதமானது, உரு—உருவாகிய, தன் பெயர்—தன் பெயரின், முன் எழுத்து இலக்கம் உற்று—முன்னெழுத்திலக்கத்தைப் பெற்று, மற்ற எல்லை அகன்று இருத்தல் அறியாய்—மற்ற எல்லையை நீங்கி யிருத்தலை அறியமாட்டாய், என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

அகாதம்-இதில் முன்னெழுத்து இலக்கமாவது-அ-எட்டு, அ-காதம், எட்டுக்காதம். இங்ஙனங்கூறியதனால் அகாதம் எம்மிடத்தில்லை யென்பதும் நம்மடியாரைக் கண்டால் அகாதம் எட்டுக் காததூரம் விலகிப்போம் என்பதும் கருத்து.

70. மையலகற்றீரொற்றியுளீர் வாவென்றுரைப்பீரோவென்றேன்
செய்யவதன்மேற்சிகரம்வைத்துச் செவ்வனுரைத்தாலிருவாவென்
றுய்யவுரைப்பேமென்றார்நும் முரையென் னுரையென்றேனிங்கே
யெய்யுன் னுரையை என்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) மையல் அகற்றீர்—எமது மயக்கத்தை யொழிக்கமாட்டீர், ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, வா என்று உரைப்பீரோ என்றேன்—வாவென்று சொல்லுவீரோ என்றேன், (அதற்கு இவர்) செய்ய—அழகிய, அதன்மேல்—அந்த வா என்பதற்கு மேலே, சிகரம் வைத்து—சிகரத்தை வைத்து, செவ்வன் உரைத்தால்—நன்றாகச் சொன்னால், இருவா என்று உய்ய உரைப்பேம் என்றார்—இருவா என்று உய்யும்படியாய் உச்சரிப்போமென்றார், (அதற்கு நான்) நும் உரை என்—நமது சொல் யாது, உரை என்றேன்—சொல்லென்றேன், (அதற்கு இவர்) இங்கே—இவ்விடத்தே, உன் உரையை எய் என்கின்றார்—உன் சொல்லை நீயே அறிவாயென்கிறார், இதுதான் சேடி என்னேடீ.

வாவென்பதன்மேற் சிகரம் வைத்தலாவது சிவா என்று உச்சரித்தல், இருவா-இரண்டுவா, வாவா, இருப்பாய் வருவாயாக, எய்தல்-அறிதல்.

71. தாவென் றருளு மொற்றியுளீர் தமியேன் மோக தாகமற
வாவென் றருள்வீ ரென்றேனவ் வாவின் பின்னர் வருமெழுத்தை
மேவென் றதனிற் சேர்த்திங்கே மேவி னன்றோ வாவென்பேன்
ஏவென் றிடுகண் ணென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) தாஎன்று அருளும்—தாவென்று நீடித்தருளுகின்ற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, தமியேன்—தமியளாகிய நான், மோகதாகம் அற—மோகதாகத்தையற்றொழிய, வா என்று அருள்வீர் என்றேன்—வாவென்றருள் செய்வீராக என்று சொன்னேன், (அதற்கு இவர்) அ—அந்த, வாவின்பின்னர் வரும் எழுத்தை—வாவின்பின்னே வருகிற எழுத்தை, மேவு என்று—பொருந்தக்கடவாயென்று, அதனில் சேர்த்து—அதிற் சேர்த்து, இங்கே—இவ்விடத்தில், மேவின் அன்றோ—பொருந்தினலன்றோ, வா என்பேன்—வாவென்றழைப்பேன், ஏ வென்றிடு கண்ணாய்—அம்பை வென்ற கண்ணையுடையாய், என்கின்றார்—என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

மோகதாகம்-விரகதாகம், வாவின்பின்னர் வருமெழுத்து வி; வாவி-தடாகம். மேவுதல்-மூழ்குதல். ஏ-அம்பு. ஏவென்றிடுகண்ணாய் என்பதற்கு அம்பென்று சொல்லுவற்குரிய கண்களையுடையாய் என்றுரைப்பினுமாம்; தாவென்றருளும் என்பதற்கு இளைப்பாறுமிடமாகிய மோக்ஷத்தை எக்காலத்தும் அருள்செய்கிற என்றுரைத்தலுமாம்; இது ஒற்றிக்காதல் ஒற்றியுளார்க்காதல் விசேடணமாக்குக. இங்கே மேவினன்றோ என்பதற்கு இதில் மூழ்கினாலன்றோ. ஏவென்றிடுகண் என்பதனீறுதொகுத்தல், கண்ணாய என்பது பூர்வரூபம், ஏவைவெல்லவாவது கொலை கூர்மைமுதலியவற்றால் அம்பினுமேற்பட்டிருத்தல்.

72. என்மேலருள்கூர்ந்தொற்றியுளீரென்னையணைவானினைவீரேற்
பொன்மேல்வெள்ளியாமென்றேன்பொன்மேற்பச்சையாங்கதன்மே
லன்மேற் குழலாய் சேய்தன்மே லலவ னதன்மேன் ஞாயிறஃ
தினமே லொன்றின் றென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) என் மேல் அருள்கூர்ந்து—என்மீது அருள்மிகுந்து, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, என்னை அணைவான்—என்னைத் தழுவ, நினைவீரேல்—நினைப்பீராயின், பொன் மேல் வெள்ளி ஆம் என்றேன்—பொன்னும் மேலாகிய வெள்ளி

யும் உமக்குண்டாகும் என்றேன், (அதற்கு இவர்) பொன்மேல் பச்சை—பொன்னுக்குமேலே பச்சையும், ஆங்கதன்மேல்—அதற்கு மேலே சேய்—சேயும், அதன்மேல்—அதற்கு மேலே, அலவன்—அலவனும், அதன்மேல்—அதற்கு மேலே, ஞாயிறு—ஞாயிறும், அஃதின்மேல்—அதன்மேலே, ஒன்று இன்று என்கின்றார்—ஒன்று மில்லை என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

அணைவான் என்பதில் வான் வினையெச்ச விகுதி. நினைவீரேல் என்பதில் ஏல் ஆயின் என்பதன் மரூஉ ; அன்மேற் குழலாய்-இருட்டின் மிக்க கூந்தலையுடையவளே, பொன்மேல் வெள்ளி யாம்-வியாழம் அதற்குமேல் வெள்ளி இவ்விரண்டு தினங்களும் வரலாம். மேல் என்றது இங்குப் பின் எனப் பொருள் பட்டது ; அதற்கு இறைவர்முன் எனப்பொருள்கொண்டு, என் எனப்படுகிற வியாழத்துக்கு முன்னே புதன் (பச்சை). அதற்கு முன்னே செவ்வாய் (சேய்). அதற்கு முன்னே திங்கள் (அலவன்-சந்திரன்). அதற்கு முன்னே ஞாயிறு (சூரியன்-ஆதிவாரம்). அதற்குமேல் ஒன்றுமில்லை என்றசதியாடினாராயிற்று. என்னை யணைய நினைவீரேல் யாம் பொன்மேல் வெள்ளியென்பதற்கு என்னைத் தழுவ நினைவீராயின் யாமிருவரும் என்றும் பொன்னும் (வியாழமும்) வெள்ளியும் (சுக்கிரனும்) போல நெருங்கி (கூடி) வாழலாம் என்றொரு பொருளாமாறு கண்டுகொள்க.

73. வயலா ரொற்றி மேவுபிடி வாதர் நாம மியாதென்றேன்
மயலா யிடுமிப் பெயர்ப்பின்னர் வந்த விளைய நாமமென்றார்
செயலார் கால மறிந்தென்னைச் சேர்வீ ரென்றேன் சிரித்துனக்கிங்
கியலா ரயலா ரென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) வயல்ஆர்—வயல்கள் சூழ்ந்த, ஒற்றிமேவு—திருவொற்றியூரிலெழுந்தருளிய, பிடிவாதர்—பிடிவாதராகிய வுமது, நாமம் யாது என்றேன்—பெயர் என்னென்று கேட்டேன், (அதற்கு இவர்) மயல் ஆயிடும்—நீ மயல் கொள்ளத் தகுந்த, இப் பெயர்ப் பின்னர்வந்த—இந்தப் பெயரின் பின்னேவந்த, இளைய நாமம் என்றார்—இளைய பெயர் என்று சொன்னார், (அதற்கு நான்) செயல் ஆர்—உலக நடைக்குப் பொருந்திய, காலம் அறிந்து—காலத்தை யறிந்து, என்னை சேர்வீர் என்றேன்—என்னைக் கூடுவீரென்று சொன்னேன், (அதற்கு இவர்) சிரித்து—நகைத்து, உனக்கு—உனக்கு, இங்கு—இவ்வுலகத்தில், இயல் ஆர்—உறவினர்

யார், அயல் ஆர்—விரோதிகள் யார், என்கின்றார்—என்று கேட்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

பிடிவாதர்-காளியோடு செய்த வாத நடநத்தையுடையவர், இவர்க்குச் சபாபதி என்று பெயர். இவர்க்குப் பின்வந்த மூர்த்தம் கலியாணசுந்தரர்; உலகநடை-கலியாணஞ் செய்து கூடுதல், அதற்கு உறவினர் முதலானோரை யறிந்தன்றோ முயலவேண்டும். அதனை யறியும்பொருட்டு, இயலாரயலார் என்று வினவினர். சொன்னபின் கலியாணசுந்தரர் என்னும் என் பெயர்க்கேற்பக் கலியாணஞ்செய்து உன்னைச் சேர்வேன் என்றாயிற்று. மயலாயிடும் இளைய நாமம் என வியையும், பிடிவாதர்-பிடிவாதக்காரர் என்றும், கால், கை பிடிப்புள்ள வாதநோயாளர் என்றும் சொன்னயந் தோன்றுதல் காண்க; வாத நோயாளராதலாலன்றோ கால்தூக்கியாடுவது.

74. நாலா ரணஞ்சூ ழொற்றியுளீர் நாகம் வாங்கலென்னென்றேன்
காலாங்கிரண்டிற் கட்டவென்றார் கலைத்தோல் வல்லீர்நீரென்றேன்
வேலார் விழிமாப் புலித்தோலும் வேழத்தோலும் வல்லேமென்
றேலா வமுத முகுக்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) நால் ஆரணம் சூழ்—நான்கு வேதங்களும் முழங்குகிற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, நாகம் வாங்கல் என் என்றேன்—நாகத்தை வாங்குதல் யாதுக்கென்று கேட்டேன், (அதற்கு இவர்) கால் ஆங்கு இரண்டில் கட்ட என்றார்—இரண்டு கால்களாகிய அவ்விடத்தில் கட்டுதற்கென்று சொன்னார், (அதற்கு நான்) நீர் கலைத்தோல்வல்லீர் என்றேன்—நீர் கலைத்தோலுடுத்தவில் வல்லவர் என்று சொன்னேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) வேல்ஆர் விழி—வேல்போலும் விழியையுடையவளே, மாபுலித்தோலும் வேழத்தோலும் வல்லேம் என்று—பெரிய புலித்தோலையும் யானைத்தோலையும் உடுத்தலினும் வல்லோமென்று, ஏலா அமுதம் உகுக்கின்றார்—கிடைக்கப்பெறாத அமுதத்தைச் சிந்துகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

தலைவி-நாகம் வாங்கல் என்றதற்கு (மேருவாகிய) மலையை வளைத்தல் என்பது பொருளாயிருக்க, இறைவர் ஆடை வாங்க எனப் பொருள்கொண்டு, காலாங்கிரண்டிற் கட்டவென்றார். இரண்டுகால்-அரையாதலால் அரையிற் கட்டவென்றாயிற்று. அரை-இடை. கலைத்தோல்-மான்தோல்; கலைத்தோல் என்பதில் பின்

மொழியாகிய தோல் தொல் என்பதன் நீட்டல் விகாரமெனக் கொண்டு பழைய ஆடையெனினுமாம். நாகம்-மலே, பாம்பு. வேழம்-யானே. ஏலாவமுதம் என்றது இறைவரது தேனூறு செஞ்சொல்; வேலார்விழி-அண்மைவிளி. உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

75. முடியாவளஞ்சூழொற்றியுளீர் முடிமேலிருந்த தென்னென்றே
கடியா வுள்ளங் கையின்முதலேக் கடிந்த தென்றூர் கமலமென
வடிவார்கரத்தி லென்னென்றேன் வரைந்தவதனீறகன்றதென்றே
யிடியா நயத்தி னகைக்கின்றூ ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) முடியா—சொல்லமுடியாத, வளம்சூழ்—பலவளங்களும் நிறைந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, முடிமேல் இருந்தது—உமது திருமுடிமீதிருந்தது, என் என்றேன்—யாதென்று கேட்டேன், (அதற்கு இவர்) கடியா—நீக்கப்படாத, உள்ளங்கையில்—உள்ளங்கையில், முதலே கடிந்தது—முதலே நீக்கிவிட்டது, என்றூர்—என்று சொன்னூர், (அதற்குமேல் நான்) கமலம் என வடிவு ஆர் கரத்தில் என் என்றேன்—கமலம் போல அழகுபொருந்திய உமது திருக்கையிலிருப்பது யாதென்று கேட்டேன், (அதற்கு இவர்) வரைந்த அதன் ஈறு அகன்றது என்று—நீ சொன்ன அதன் இறுதி நீங்கினது என்று, இடியா—இடித்துச்சொல்லி, நயத்தின் நகைக்கின்றூர்—விருப்பத்தோடு சிரிக்கின்றூர், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

வளம்-செல்வம் எனினுமாம். உள்ளங்கை-அகங்கை. இதில் முதலெழுத்தாகிய அகரத்தை நீக்கினல் கங்கை என்றூகும்; முடிமேலிருந்ததென் என்றதற்கு விடையாக கங்கையைச் சிரசிற்றூங்கியிருக்கிறே னென்றூராயிற்று. வரைந்தவதனீறகன்றது-சொல்லப்பட்ட கங்கை யென்பதனிறுதியாகிய கை நீங்கினது; கம் அதாவது தலே (கபாலம்). கமலமென வடிவார் கரத்திலென் என்றதற்கு விடையாகக் கையிற் கபாலத்தைத் தாங்கியிருக்கிறே னென்றூராயிற்று. கமலம் என்பதை கம் அலம் எனப்பிரித்து நீ சொன்ன கமலம் என்பதனீறூகிய அலம் நீங்க நின்ற கம் என விடைகூறினூரெனினுமமையும். இடியா-செய்யா என்னும் வாய்பாட்டுவினேயெச்சம். இடித்தல்-வற்புறுத்தல்.

76. ஒன்றும் பெருஞ்சீ ரொற்றிநக ருடையீர் யார்க்குமுணர்வரியீர்
என்றும் பெரியீர் நீர்வருதற் கென்ன நிமித்த மென்றேன்யான்
றுன்றும் விசும்பே காணென்றார் சூதா முமது சொல்லென்றேன்
இன்றுன் முலைதா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) யான்—நான், ஒன்றும்—பொருந்தின, பெரு சீர்—பெருஞ் சிறப்பினையுடைய, ஒற்றிநகர் உடையீர்—திருவொற்றி நகரை யுடையவரே, யார்க்கும் உணர்வு அறியீர்—யாவர்க்கும் அறிதற்கரியவரே, என்றும் பெரியீர்—எக்காலத்தும் அழியாத பெருமையுடையவரே, நீர் வருதற்கு—நீர் வருகைக்கு, நிமித்தம் என்ன என்றேன்—காரணம் யாதென்றேன், (அதற்கு இவர்) துன்றும் விசும்பே என்றார்—நெருங்கின விசும்பே என்று சொன்னார், (அதற்கு நான்) உமது சொல்—உமது சொல்லானது சூது ஆம் என்றேன்—சூதாயிருக்கிறதென்று சொன்னேன், (அதற்கு இவர்) இன்று உன் முலைதான் என்கின்றார்—இப்போது அப்படியிருப்பது உன்முலையேயாமென்று சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ–று.

உணர்வு என மேல்வருதலால் யார்க்கும் என்றது எப்படிப்பட்ட ஞானியர்க்கும் என்க. நீர் வருதற்கென்ன நிமித்தம் என்பதற்குத் தாங்கள் வருகைக்கென்ன காரணமென்பது பொருளாயிருக்க, இறைவர் நீர்-ஜலம் எனப் பொருள்கொண்டு விசும்பே என்றார். விசும்பு-மேகம் ; சூதாமுமதுசொல் என்பதற்கு உமது வார்த்தை சூதாயிருக்கிறது என்பது பொருளாயிருக்க இறைவர் சூது-சொக்கட்டான்காய் எனப் பொருள்கொண்டு சூதுபோன்றிருப்பது உன் முலைதானென்றார் ; சூது-கபடவார்த்தை, விசும்பு-மேகம், இதற்குப் பயோதரம் என்றொரு பெயராதலால் யாம் வருதற்குக் காரணம் உன் பயோதரமே என்றார். பயோதரம்-முலை, சோறு எனப் பொருள்படுவதாகிய முல்லை என்பது முலை என இடைக்குறையாயிற்றென்றலுமாம்.

77. வானோர் வணங்கு மொற்றியுளீர் மதிவாழ் சடையீர்மரபிடைநீர்
தானா ரென்றே னனிபள்ளித் தலைவ ரெனவே சாற்றினர்காண்
ஆனா லொற்றி யிருமென்றே னுண்டே யிருந்து வந்தனஞ்சேய்
ஈனா தவணீ யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) வானோர்—தேவர்கள், வணங்கும்—வணங்குகின்ற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, மதிவாழ் சடையீர்—பிறைவாழ்கின்ற சடையையுடையவரே, மரபிடை—சாதியில், நீர் ஆர் என்றேன்—நீர் என்ன சாதியார் என்றேன், (அதற்கு இவர்) நனிபள்ளித்தலைவர் என சாற்றினர்—நனிபள்ளித்தலைவரென்று சொன்னார், (அதற்குமேல் நான்) ஆனால் ஒற்றி இரும் என்றேன்—ஆனால் ஒற்றியிருப்பீரென்று சொன்னேன், (அதற்கு இவர்) ஆண்டே இருந்து வந்தனம்—அப்படியொற்றியிருந்தே வந்தோம், நீ சேய் ஈனுதவள் என்கின்றார்—நீ பிள்ளை பெறுதவள் என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

வான்-சுவர்க்கலோகம், வானோர்-சுவர்க்கலோகத்தவர் (தேவர்கள்). மதிவாழ் சடையீர் என்ற குறிப்பால் மதி பிள்ளை மதியை யுணர்த்திற்று. பிள்ளை மதி-பிறை. வாழ்தல்-தங்குதல். நனி பள்ளி-திருநனிபள்ளி என்னுந் திருப்பதி. இறைவர் தாம் நனி பள்ளித்தலைவர் என்றளவில் தலைவி பள்ளிச்சாதியார்க்குத் தலைவரென்று நினைத்து ஒற்றியிரும் என்று சொன்னதாகக் கொள்க. ஒற்றியிரும்-விலகியிரும். இதற்கு இறைவர் ஒற்றியிருந்தே வந்தோம் என்பது தோன்ற 'ஆண்டேயிருந்து வந்தனம்' என்றார், சேயீனுதவள்-மலடி, இவளுக்கு வந்தி என்றொரு பெயர். வந்தி, வந்தனைசெய் என்பது சொன்னயம். யாம் திருவொற்றியூரிலிருந்து வந்தோம், நீ எம்மை வந்தித்து உய்யக்கடவையென்றதாயிற்று.

78. பற்று முடித்தோர்புகழொற்றிப் பதியீர் நுமது பசுவினிடைக்
கற்று முடித்த தென்னிருகைக் கன்று முழுதுங் காணென்றேன்
மற்று முடித்த மாலையொடுன் மருங்குற் கலையுங் கற்றுமுடிந்
திற்று முடித்த தென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) பற்றுமுடித்தோர் புகழ்—பற்றுக்களை விட்டவர் புகழ்கின்ற, ஒற்றி பதியீர்—திருவொற்றித்தலத்தை யுடையவரே, நுமது பசுவினிடை—உமது பசுவினிடையே, என் இருகை கன்று முழுதும்—என்னிருகைக்கன்றுகளெல்லாம், கற்று முடித்தது காண் என்றேன்—கற்று முடிவுசெய்தது காணென்று சொன்னேன், (அதற்கு இவர்) மற்றும்—மேலும், முடித்த மாலையொடு—முடித்த மாலையோடு, உன் மருங்குல் கலையும் கற்று முடிந்து—உன்னிடைக்கலையுங் கற்றுமுடிந்து, இற்று முடித்தது என்

கின்றார்—இற்று முடிவு செய்யப்பட்டது என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ.எ—று.

79. வானங் கொடுப்பீர் திருவொற்றி வாழ்வீ ரன்று வந்தெனது
மானங் கெடுத்தீ ரென்றுரைத்தேன் மாநன் றிஃது மானன்றே
யூனங் கலிக்குந் தவர்விட்டா ருலக மறியுங் கேட்டறிந்தே
யீனந் தவிர்ப்பா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) வானம் கொடுப்பீர்—முத்தியுலகைக் கொடுப்பவரே, திருவொற்றி வாழ்வீர்—திருவொற்றியூரில் வாழ்பவரே, அன்று வந்து—அந்நாளில் வந்து, எனது மான் அங்கு எடுத்தீர் என்று உரைத்தேன்—என் மானை அவ்விடத்தெடுத்தீரென்று சொன்னேன், (அதற்கு இவர்) மா நன்று—மிகவும் நன்றாயிருக்கின்றது, இஃது—இது, உம்மான் அன்றே—உங்கள் மானல்லவே, ஊனம் கலிக்கும்—குற்றங்களைக் கடந்த, தவர் விட்டார்—தபசிகள் விட்டார்கள், உலகம் அறியும்—(இந்தச் செய்தியை) உலக முழுதும் அறியும், கேட்டறிந்து—நீ கேட்டுணர்ந்து, ஈனம் தவிர்ப்பாய் என்கின்றார்—உன் இழிவை நீக்குவாயாக என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

வானம்-ஆகாசம், அது பரமாகாசமாகிய முத்திக்காயிற்று; எனது மானங் கெடுத்தீர் என்பதற்கு என் பெருமையைக் கெடுத்தீர் என்று வேறு மொருபொருள் கூறிக்கொள்க. தவர்-தவத்தையுடையவர், இவர் தாருகவனத் திருடியர். இவர் மான்விட்டது-பிக்ஷாடநராய்ச் சென்று அவர் மனைவியர் கற்பழித்த இறைவரைக் கொல்லும்பொருட்டு அபிசார யாகஞ்செய்து அந்த யாகக்குண்டத்திற் பிறந்த மானை யேவினது. ஊனம்-குற்றங்கள், அவை காம வெகுளி மயக்கங்கள், இவற்றை முக்குற்றமென்பர்.

80. ஞானம் படைத்த யோகியர்வாழ் நகரா மொற்றி நலத்தீர்மா
லேனம்புடைத்தீ ரணையென்பீ ரென்னை யுவந்திப்பொழுதென்றே
னூனந் தவிர்த்த மலர்வாயி னுள்ளே நகைசெய் திஃதுரைக்கே
மீனம் புகன்றா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஞானம் படைத்த—ஞானத்தைப் பெற்ற, யோகியர் வாழ்—யோகியர் வாழ்கின்ற, நகர்ஆம்—நகராகிய, ஒற்றி—திருவொற்றியூரிலெழுந்தருளிய, நலத்தீர்—நல்லவரே, மால்எனம்

புடைத்தீர்—திருமாலாகிய வராகத்தைப் புடைத்தவரே, என்னை உவந்து—என்னை விரும்பி, இப்பொழுது—இப்பொழுது, அணை என்பீர்—அணையென்பவரே, என்றேன்—என்று சொன்னேன், (அதற்கு இவர்) ஊனம்தவிர்த்த—குற்றமற்ற, மலர்வாயினுள்ளே நகைசெய்து—தாமரைமலர்போலும் வாய்க்குள்ளே நகைத்து, இஃது உரைக்கேம்—ஈதோர் வார்த்தை சொல்லுகின்றோம், (என்னெனின்) ஈனம்புகன்றாய் என்கின்றார்—இழிவான சொல்லைச் சொன்னாய் என்று சொல்லுகின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

ஞானம்படைத்த என்பதில் படைத்த என்பதற்கேற்ப ஞானம் என்பதற்கு ஞானச்செல்வமென்றுரைத்துக்கொள்க. மால் என்-மயக்கமேன், அம்பு உடைத்தீர்-(கண்ணில்) நீரையுடையவளே, மலர்-செவ்வல்லிமலர் எனினுமாம். வாயினுள்ளே நகைசெய்தல்-புன்னகைசெய்தல், என்னையுவந்திப்பொழுது அணையென்பீரென்றேன் என்றது உபரிசுரதம் அல்லது உபரிலீலையென்பர் வடநூலார். (தலைவன்செய்த லீலைகளெல்லாம் தலைவியும் செய்து புணர்வது)

81. கருமையளவும் பொழிலொற்றிக் கணத்தீர் முனிவர்கலக்கமறப்
பெருமை நடத்தி னீரென்றேன் பிள்ளை நடத்தி னானென்றார்
தரும மலவிவ் விடையென்றேன் றரும விடையு முண்டென்பா
லிருமை விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கரு மை அளவும்—கரிய மேகத்தையளாவிய, பொழில்—சோலைசூழ்ந்த, ஒற்றி கணத்தீர்—திருவொற்றியூரி லெழுந்தருளிய பூத கணத்தை யுடையவரே, முனிவர் கலக்கம் அற—முனிவரது மனக்கலக்கமொழியும்படி, பெருமை நடத்தினீர்—பெருமையாகிய நடனஞ் செய்தவரே, என்றேன்—என்று சொன்னேன், (அதற்கு இவர்) பிள்ளை நடத்தினான் என்றார்—(நான் நடத்தவில்லை) பிள்ளை நடத்தினானென்று சொன்னார், (அதற்குமேல்) இவ்விடை தருமம்அல்ல என்றேன்—இந்த விடை தருமமல்லவென்று சொன்னேன், (அதற்கு இவர்) இருமை விழியாய்—இரண்டு கருங்கண்களை யுடையவளே, எம்பால்—எம்மிடத்தில், தருமவிடையும் உண்டு என்கின்றார்—தருமவிடையுமுண்டென்று சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

கருமையளவும் என்பதற்குக் கருநிறத்தையுடைய எனினுமாம். கணத்தீர் என்பதற்குச் சிவகணத்தையுடையவரே என்றலுமொன்று. முனிவர்-பதஞ்சலி வியாக்கிரபாதர். பெருமை நடத்தினீர் என்றதற்கு பெரிய ஆட்டுக்கடாவை நடத்தினவரே என்று சொன்னதாகப் பொருள்கொண்டு அதற்கு விடையாக பிள்ளை நடத்தினனென்றார்; மை-ஆடு, பிள்ளை-முருகன். இப்பொருட்கு முனிவர் என்றது நாரதமுனிவரை. தருமமல விவ்விடை-இப்படி விடைகூறல் தர்மமல்ல என்ற தலைவிக்கு தருமவிடையுமுண்டு என்றது தருமவுருவாகிய இடபமும் உண்டு என்றபடி. மைவிழி-மையெழுதிய கண் எனினுமாம்.

82. ஒசிய விடுகு மிடையாரை யொற்றி யிருந்தே மயக்குகின்ற
வசியர் மிகநீ ரென்றேனெம் மகன்கா ணென்றார் வளர்காமப்
பசிய தொடையுற் றேனென்றேன் பட்ட மவிழ்த்துக் காட்டுதியே
லிசையக் காண்பே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஒசிய இடுகும் இடையாரை—ஒடியும்படி சிறுத்த இடையையுடையவராகிய மாதரை, ஒற்றி இருந்தே—திருவொற்றியூரிலிருந்துகொண்டே, மயக்குகின்ற—மயங்கப்பண்ணுகிற, நீர்—தேவரீர், மிக வசியர் என்றேன்—மிகுதியாக வசியஞ்செய்தலையுடையீர் என்று சொன்னேன், (அதற்கு இவர் நாமல்ல) எம்மகன் என்றார்—எம்மகன்தான் வசியன் என்றார், (அதற்குமேல் நான்) வளர்காமம்—வளர்கின்ற காமமாகிய, பசியதொடை உற்றேன் என்றேன்—பசியமாலையை யுடையேனென்றேன், (அதற்கு இவர்) பட்டம் அவிழ்த்து காட்டுதியேல்—பட்டத்தை யவிழ்த்துக் காட்டுவையாயின், இசைய காண்பேம் என்கின்றார்—பொருந்தப் பார்ப்போம் என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

ஒசிதல்-ஒடிதல், இடுகுதல்-சிறுத்தல். வசியர்-வசியஞ்செய்பவர், வசியர் குலத்திற்பிறந்தவர், மகன்-முருகன். பசியதொடை-பசுமையாகிய மாலை-பசுமையாகிய் தொடை. பட்டம்-ஆடை. காமப்பசியதொடையுற்றேன் என்பதற்கு காமனது பசிய மலர்த்தொடையுடையேன் என்றுங் காமமாகிய பசியோடு ஐயத்தையுமுடையேன் என்றும் வேறுபொருள் தோன்றுதல் காண்க. ஒற்றியிருந்தே-விலகியிருந்தே.

83. கலையாளுடையீரொற்றிநின்றீர் காமமளித்தீர்களித்தணைவீர்
மலையா ளுமது மனையென்றேன் மருவின் மலையா ளல்லளென்று
ரலையாண் மற்றை யவளென்றே னறியி னலையா ளல்லளுனை
யிலையா மணைவ தென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) கலை ஆள் உடையீர்—கலைகள் முழுதும் ஆளுதலை யுடையீர், ஒற்றி நின்றீர்—திருவொற்றியூரில் நிலைத்திருப்பவரே, காமம் அளித்தீர்—காமத்தைக்கொடுத்தீர், களித்து அணைவீர்—மகிழ்ந்தணைவீர், உமது மனை மலையாள் என்றேன்—உமதுமனைவி மலையாளென்று சொன்னேன், (அதற்கு இவர்) மருவின்—பொருந்தினால், மலையாள் அல்லள் என்றார்—மலையாளல்லளென்று சொன்னார், மற்றையவள்—மற்றொரு மனையாள், அலையாள் என்றேன்—அலையாளென்று சொன்னேன், (அதற்கு இவர்) அறியின்—அறிந்தால், அலையாள் அல்லள்—அலையாளல்லள், (ஆதலால்) உன்னையாம் அணைவது இல்லை—உன்னையாம் சேர்வதில்லை, என கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கலையாளுடையீர் என்பதில் கலை-கல்லை யென்பதன் இடைக் குறியாகக் கொண்டு மலையை யாளுதலையுடையீர் எனினுமாம். மலை-கைலாயமலை; கலை வேத முதலிய கலைகள் எனினுமாம். ஒற்றிநின்றீர்—விலகிநின்றீர்; காமம் அளித்தீர்-விருப்பத்தை யுண்டாக்கினீர்; மலையாள்-மலையிற் பிறந்தவள், கோவிக்க மாட்டாள். மலையாள் அல்லள்-மலையுருவினளல்லள், கோவிக்காதவளல்லள், அலையாள்-அலைகளையுடைய நீருருவினள் (கங்கை), வருத்தமாட்டாள், அலையாளல்லள்-நீருருவினளல்லள், வருத்தாதவளல்லள். இலையாமணைவது என்பதற்கு யாமிருவரும் சேர்வது எமது வீட்டையே யென்று முரைக்கலாம்; எம் வீடு ஒற்றியூர்; உன்வீடு உன்மனையே.

84. சீலம் படைத்தீர் திருவொற்றித் தியாகரேநீர்திண்மையிலோர்
சூலம் படைத்தீ ரென்னென்றேன் றூன்று மூலகுய்ந் திடவென்று
ராலங் களத்தீ ரென்றேனீ யாலம் வயிற்று யன்றோநல்
லேலங் குழலா யென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) சீலம் படைத்தீர்—நல்லொழுக்கத்தைப் படைத்த வரே, திருவொற்றி தியாகரே—திருவொற்றியூரி லெழுந்தருளிய

தியாகராயரே, நீர்—தேவரீர், திண்மையிலோர் சூலம் படைத்தீர் என் என்றேன்—பலமுள்ள ஒரு சூலத்தைப் படைத்தீர் அதற்குக் காரணம் யாதென்று கேட்டேன், (அதற்கு இவர்) (அதுபடைத்தது) தோன்றும் உலகு உய்ந்திட என்றார்—உண்டாயிருக்கிற உலகம் உய்யும் பொருட்டே யாமென்றார். (அதற்குமேல் நான்) ஆலம்களத்தீர் என்றேன்—விஷத்தைக் கண்டத்திலுடையீர் என்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) நல் ஏலம் குழலாய்—நல்ல மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடையாளே, நீ ஆலம் வயிற்றாய் அன்றோ—நீ ஆலம்வயிற்றையுடையை யன்றோ, என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

திண்மையிலோர் சூலம்படைத்தீர் என்பதற்கு பலமுள்ள ஒரு சூலம் படைத்தீர் என்னெனப்பொருள் கொள்ளுங்கால் உலகுய்ய என்பதற்கு உயர்ந்தோராகிய சாதுக்களுய்யும் பொருட்டு என்றும், பலமாகிய மேகத்தில் ஒப்பற்ற சூலுண்டாக நீரைப்படைத்தீர் என்னெனப்பொருள் கொள்ளுங்கால் உலகுய்ய என்பதற்கு உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும் பொருட்டு என்றும் விடையமைத்துக்கொள்க. திண்மையில் என்பதற்கு பலமில்லாத என்றுரைத்தலுமாம். இரண்டாமர்த்தத்திற்கேற்ப திண்மையிலோர் சூலம் என்பதனை திண், மையில், ஓர், சூல், அம், எனப் பிரித்துக் கொள்க. திண்மையிலோர் சூலம் படைத்தீர்-பலமில்லாதோரேந்துஞ் சூலத்தை யேந்தினீர், பலத்தால் ஒருசூல மேந்தினீர் என்றுமுரைக்கலாம்; ஆலங்களத்தீர் என்பதற்கு விஷத்தைக் கண்டத்திற் படைத்தீர் என்றும் அதற்கு விடையாக ஆலம் வயிற்று யன்றோ என்பதற்கு ஆலிலைபோலும் அழகிய வயிற்றை யுடையை யன்றோ வென்றும் பொருள். ஏலம்-மயிர்ச்சாந்து-அதாவது மாதர் கூந்தலிற் பூசப்படுவதோர் வாசனைப் பண்டம்.

85. ஞால நிகழும் புகழொற்றி நடத்தீர் நீர்தா னாட்டமுறும்
பால ரலவோ வென்றேனம் பாலர் பாலைப் பருவத்திற்
சால மயல்கொண் டிடவருமோர் தனிமைப் பால ரியாமென்றே
யேல முறுவல் புரிகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.)ஞாலம் நிகழும்புகழ்—உலகமுழுதும் வியாபித்த புகழையுடைய, ஒற்றி நடத்தீர்—திருவொற்றியூரில் நடநஞ் செய்பவரே, நீர் தான்—தேவரீர்தான்—நாட்டம் உறும்பாலர் அலவோ

என்றேன்—நாட்ட முறும் பாலரல்லவோ வென்று சொன்னேன், (அதற்கு இவர்) ஐம்பாலர்—ஐம்பாலர், பாலைப்பருவத்தில்—இளமைப் பருவத்தில், சால—மிகுதியாக, மயல் கொண்டிடவரும்—மையல்கொள்ளும்படி வருகிற, ஓர் தனிமைப்பாலர் யாம் என்று—ஒரு தனிமைப்பாலர் நாமென்று சொல்லி, ஏலமுறுவல் புரிகின்றார்—அந்தச்சொற்கிணங்க நகைக்கின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

நீர்தானுட்டமுறும் பாலர் என்பதற்கு நீர் தான் விளையாடலைச்செய்கிற பாலர் என்றும், நீர்தான் கண்ணோடு கூடிய நெற்றியை யுடையவர் என்றும், ஐம்பாலர் என்பதற்கு ஐவகையாகிய மயிர்முடியை யுடையவர் என்றும், ஐந்து பாலரையுடையீர் என்றும் ஓர் தனிமைப்பாலர் என்பதற்கு தனிமையாகிய ஒருபாலர் என்றும் பொருளுரைத்துக்கொள்க. நீர்தானுட்டமுறும் பாலர் என்பதனை நீர்தான் ஆட்டமுறும் பாலர் எனவும் நீர்தான் நாட்டமுறும் பாலர் எனவும் பிரித்து, நீர் விளையாட்டுடைய பாலியர் என்றும் நீர் கண்ணோடு கூடிய நெற்றியை யுடையீர் என்றும் பொருள் கூறிக்கொள்க. பாலம்-நெற்றி, நாட்டம்-கண், பாலர்-பாலியர், நெற்றியையுடையவர். ஐம்பா லாவன-முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்பன ; இவற்றுள், மயிரையுச்சியில் முடித்தல் முடியென்றும், பக்கத்தில் முடித்தல் கொண்டை யென்றும், பின்னே செருகல் சுருள் என்றும், சுருட்டி முடித்தல் குழல் என்றும், பின்னி விடுதல் பனிச்சை யென்றும் கூறப்படும். நாம் ஒரு பாலர் நீ ஐம்பாலுடையாயென்றிறைவர் கூறினர்.

86. வண்மை தருவீ ரொற்றிநகர் வாழ்வீ ரென்னை மருவீரென்
னுண்மை யறியீ ரென்றேன்யா முணர்ந்தே யகல நின்றதென்றார்
கண்மை யிலரோ நீரென்றேன் களமை யுடையேங் கண்மையுற
லெண்மை நீயே யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) வண்மை தருவீர்—எல்லாச் செல்வங்களையும் தருபவரே, ஒற்றி நகர் வாழ்வீர்—திருவொற்றியூரில் வாழ்பவரே, என்னை மருவீர்—என்னையணைவீர், என் உண்மை அறியீர்—என் உண்மையை யறியீர், என்றேன்—என்று நான் சொன்னேன், (அதற்கு இவர்) யாம் உணர்ந்தே—நாம் அறிந்தே, அகல நின்றது என்றார்—ஒற்றி நின்றது என்று சொன்னார், (அதற்குமேல் நான்) நீர் கண்மை இலரோ என்றேன்—நீர் தாக்ஷிண்ய மில்லாதவரோ

வென்றேன், (அதற்கு இவர்) களமை உடையேம்—யாம் களமையுடையோம், எண்மை நீயே—ஏழையாகிய நீயே, கண்மை உறல் என்கின்றூர்—கண்மையை யுடையை யென்கின்றூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

வண்மை பண்பாகுபெயர். உண்மை-மெய், மனத்திலுள்ள அன்பு; கண்மை-கண்ணேட்டம் (தாக்ஷிண்யம்). களமையுடையேம்-கண்டத்தில் கருமையுடையேம், கண்மையுறல்-கண்களின் மையெழுதப் பெற்றிருத்தல், எண்மை-பண்பாகு பெயர், மருவீர்-அணையீர், அணைவீராக. தலைவி கண்மையிலரோநீர் என்றதற்குத் தலைவர், யாம் கணமையிலேம், களமையுடையேம் என்றூர், ஒற்றி நின்றது-விலகிநின்றது, களமை கண்டத்திற் கருமை, நஞ்சுண்டதனுலுண்டாகிய கருநிறம், கள்ளத்தனம் என்பதுமோர் சொன்னயம், கள்ளத்தனமாவது தலைவியோடு கபடமாகப் பேசுதல்.

87. தவந்தங்கியசீரொற்றிநகர்தனைப்போனினைத்தென்மனையடைந்
ருவந்தென் மீதிற் றேவர்திரு வுள்ளந் திரும்பிற்றேவென்றேன் [தீ
சிவந்தங்கிட நின்னுள்ளமெம்மேற் றிரும்பிற் றதனைத்தேர்ந்தன்றே
யிவர்ந்திங் கணைந்தா மென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) தவம் தங்கிய சீர்—தவமானது தங்கப்பெற்ற சிறப்பினையுடைய, ஒற்றி நகர்தனைப்போல் நினைத்து—திருவொற்றி நகரம்போல நினைத்து, என்மனை அடைந்தீர்—என் வீட்டை யடைந்தீர், என்மீதில்—என்மேல், உவந்து—சந்தோஷித்து, தேவர் திருவுள்ளம் திரும்பிற்றே என்றேன்—தேவரீருடைய திருவுள்ளம் திரும்பியதோ என்றேன், (அதற்கு இவர்) சிவம் தங்கிட—(உனக்கு) நன்மையுண்டாகும்படி, நின் உள்ளம்—உன் மனமானது, எம்மேல் திரும்பிற்று—எம்மீது திரும்பியது, அதனைதேர்ந்து அன்றே—அதையறிந்தல்லவா, இவர்ந்து இங்கு அணைந்தாம் என்கின்றூர்—விரும்பியிங்கே வந்தோமென்று சொல்லுகின்றூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

தவம்தங்கிய என்றதனுல் தவஞ்செய்வோர் தங்கிய என்பது பெறப்படும். தவம்-தலைமை யெனினுமாம். நகர்தனை யென்பதில் தன் சாரியை. ஒற்றிநகர்தனைப் போனினைத் தென்மனையடைந்தீர் என்றதனுல் என்மனையையும் ஒற்றிநகர்போலச் சிறந்த இடமாக நினைத்தெழுந்தருளினீர் என்றதாயிற்று. சிவம்-சுபம்,

மோக்ஷம் எனினுமாம். இவர்தல்-நடத்தல் எனினும் பொருந்தும். தலைவி கடவுளை நோக்கி தேவரீரது திருவுள்ளம் என்மீது திரும்பிற்றோ வென்றதற்கு விடையாக இறைவரும் தலைவியை நோக்கி, உன்னுள்ளம் எம்மீது திரும்பினமையால் யாம் உன்னை விரும்பி வந்தோமென்றருளினார் என்பது திரண்ட பொருள்.

88. ஒன்னார் புரமூன்றெரிசெய்தீ ரொற்றி யுடைநீ ரும்முடைய
பொன்னார்சடைமேல்வெள்ளெருக்கம்பூவைமிலைந்தீரென்னென்
னின்னா ரளகத் தணங்கேநீ னெட்டி மிலைந்தா யிதிலதுகீ [ழே
ழென்னா ருலக ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஒன்னார்புரமூன்று—பகைவரது முப்புரங்களையும், எரி செய்தீர்—எரித்துவிட்டவரே, ஒற்றி உடை நீர்—திருவொற்றியூருடைய நீர், உம்முடைய—உமது பொன்ஆர் சடைமேல்—பொன்போலுஞ் சடையின்மீது, வெள்ளருக்கம்பூவைமிலைந்தீர்—வெள்ளெருக்கம் பூமாலையைச் சூடினீர், என் என்றேன்—இது என்னவென்று கேட்டேன், (அதற்கு இவர்) அணங்கே—பெண்ணே, நின் ஆர் அளகத்து—உனது நிறைந்த கூந்தலின் கண், நீநெட்டிமிலைந்தாய்—நீநெட்டிப் பூவைத்தரித்தாய், இதில்—இந்த நெட்டிப்பூவினும், அது—அந்த எருக்கம்பூவானது, கீழ் என்னார் உலகர்—கீழானதென்று சொல்லமாட்டார் உலகத்தார், என்கிறார் — என்று சொல்லுகிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

பொன்ஆர்சடை என்பதற்கு அழகு நிறைந்தசடை, பொன்னிறமுள்ளசடை, பொன்னிறமாகிய கொன்றைமலரணிந்தசடை, திருமகள்போலுங் கங்கையணிந்தசடை என்றுரைத்தலுமாம். வெள்ளெருக்கம்பூவைமிலைந்தீர் என்பதற்கு விடையாக நீ நெட்டிமிலைந்தாயென்று தலைவர் சொல்லியது, இறைவர் தலைவிமீது ஆசை மிகுதியால் மடலூர்தற்குறியாக எருக்கம்பூமிலைந்தாரென்றும், தலைவி இறைவர்மீது ஆசைமிகுதியால் அவரது பிரிவில் ஒப்பனை செய்யாமையால் கூந்தல் சடையாயிருந்ததென்றும் விளக்குதற்கு. உலகத்தார் நெட்டிப் பூவினும் எருக்கம்பூ மேலானதென்று சொல்வார்கள் என்பது கருத்து. மிலைதல்-அணிதல், அணங்கு-தெய்வப்பெண்.

89. கனிமா னிதழி முலைச்சுவடு களித்தீ ரொற்றிக் காதலர்நீர்
தனிமா னேந்தி யாமென்றேன் றடங்கண் மடந்தாய் நின்முகமும்
பனிமா னேந்தி யாமென்றார் பரைமான் மருவி னீரென்றே
னினமான் மருவி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கனிமான்—கோவைக்கனிபோன்ற, இதழி—அதரத்தை யுடையவளாகிய உமாதேவியின், முலைச்சுவடு—தனச்சுவட்டை, களித்தீர்—மகிழ்ந்தவரே, ஒற்றிகாதலர்—திருவொற்றியில் விருப்பமுள்ளவரே, நீர்—தேவரீர், தனிமான் ஏந்தி ஆம் என்றேன்—ஒப்பற்ற மானைத் தாங்குவோராமென்று சொன்னேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) தடம்கண்மடந்தாய்—பெருங் கண்களையுடைய பெண்ணே, நின்முகமும்—உன்முகமும், பனிமான்ஏந்திஆம் என்றார்—பனித்தலையுடைய மானைத் தாங்குதலுடையதாமென்றார், (அதற்குமேல் நான்) பரைமான் மருவினீர் என்றேன்—பரையாகிய மானைப்பொருந்தினீர் என்று சொன்னேன், (அதற்கு இவர்) இனமான்மருவி என்கின்றார்—நீ இனமானைப் பொருந்தினவள் என்கின்றார், இதுதான் சேடி யென்னேடீ, எ-று.

இதழுக்குவமையாகப் புணர்க்கப்பட்டதனால் கனியென்றது இங்குக்கோவைக்கனியைக் குறித்தது. இதழி-இதழையுடையவள். கனிமானிதழி முலைச்சுவடு களித்தீர் என்றதனால் கம்பாநதியில் காமாக்ஷியம்மை இறைவரைப்பூசித்த செய்தி தோன்றுகின்றது. காதலர்-அண்மைவிளி, என்மீது காதலுள்ளவரே எனினுமாம். தனிமான்-ஒரு மான். ஏந்தி-ஏந்துவோன். மடந்தாய்-மடப்பத்தையுடையவளே யெனினுமாம். பனித்தல்-துள்ளுதல், பனிமானேந்தி-குளிர்ச்சியாகிய சந்திரன். சந்திரனிடத்து மானுண்மையால் அவனுக்கு மானேந்தி என்றொரு பெயர், மான் என்றது கண்களை. பரை-சத்தி, மான்மருவி-மயக்கத்தைப்பொருந்தினவள், இனம்-கூட்டம், மிகுதி.

90. சிறியேன் றவமோ எனைப்பெற்றார்செய்ததவமோ வீண்டடைந்தீ
ரறியேனொற்றி யடிகேளிங் கடைந்த வாறென்னினைத்தென்றேன்
பொறிநே ருனது பொற்கலையைப் பூவார் கலையாக் குறநினைத்தே
யெறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) சிறியேன் தவமோ—சிறியேனது தவப்பயனாலோ, என்னை பெற்றார்செய்ததவமோ—என்னைப் பெற்றவர்கள் செய்த தவப்பயனாலோ, ஈண்டு அடைந்தீர்—இவ்விடத்திற்கெழுந்தருளினீர், அறியேன்—அறிந்திலேன், ஒற்றி அடிகேள்—திருவொற்றியூர்க் கடவுளே, இங்கு அடைந்த ஆறு—இவ்விடத்திற்கெழுந்தருளின வரலாறு, என் நினைத்து என்றேன்—என்ன நினைத்தோ என்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) எறிவேல்விழியாய்—எறியப் படுகிற வேற்படைபோன்ற கண்களையுடையவளே, பொறிநேர்—திருமகளைநிகர்த்த, உனது—உன்னுடைய, பொற்கலையை—பொன் ஆடையை, பூ ஆர் கலை ஆக்குறநினைத்தே—பூவாராடையாக்கும் பொருட்டேயாம், என்கின்றார்—என்று சொல்லுகின்றார், இது தான் சேடி யென்னேடீ. எ-று.

தவம் என்றது தவப்பயனை. பொறி-திருமகள். பொற்கலை-பொற்றொழிலமைந்த ஆடை. பூவார்கலை என்பதற்கு பூத்தொழிலமைந்த ஆடை, (மன்மத பாணங்களாகிய) மலர்கள் நிறைந்த ஆடை, பூமியின்மேல் நழுவிவீழ்கின்ற ஆடை, பூவாதவரது ஆடை-பூமியிலுள்ளாரது ஆடை. திருமகள், கலைமகள் இருவரும் பூவை யிடமாக வுடையவர்களாதலால் அவர்க்குப் பூவார் என்றுபெயர். கலை-ஆடை, உன்ஆடையைப்பறித்து, அவ்விருவர்க்குங் கொடுத்து விட நினைந்தேன் என்பது கருத்து.

91. அளிக்குங் குணத்தீர் திருவொற்றி யழக ரேநீ ரணிவேணி
வெளிக்கொண்முடிமேலணிந்ததுதான் விளியாவிளம்பத்திரமென்
றேன்,விளிக்குமிளம்பத்திரமுமுடி மேலே மிலைந்தாம்விளங்கிழைநீ
யெளிக்கொண் டுரையே லென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ

(இ-ள்.) அளிக்கும் குணத்தீர்—காக்குங் குணமுள்ளவரே, திருவொற்றி அழகரே—திருவொற்றியூரிலெழுந்தருளிய அழகரே, நீர் அணிவேணி—கங்கையணிந்த சடாபாரத்தோடு கூடிய, வெளிகொள் முடிமேல்—ஒளியைக்கொண்ட சிரசின்மேல், அணிந்தது—நீர் தரித்திருப்பது, விளியா—அழியாத, இளம்பத்திரம் என்றேன்—இளம்பத்திரமே யாமென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) விளங்கிழை—பிரகாசிக்கிற ஆபரண மணிந்த பெண்ணே, விளிக்கும்—அழிகின்ற, இளம்பத்திரமும்—இளம் பத்திரத்தையும், முடிமேலே—எமது முடிமேலே, மிலைந்தாம்—

சூடினேம், நீ எளிக்கொண்டு உரையேல் என்கின்றூர்—நீ யெளிதா யெண்ணிப் பேசாதே யென்கிறூர், இதுதான் சேடி யென் னேடீ. எ—று.

அளிக்குங்குணம்-அருட்குணம். விளியா-பேசாத, விளிக் கும்-பேசுகிற, பத்திரம்-இலே, இறகு. (குரண்டாசுரனது இறகு.) குரண்டம்-கொக்கு, இந்தக் கதையை இலிங்கபுராணத்திற் காண லாம், வெளி-ஒளி. விளங்கிழை-வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

92. வாசங் கமழு மலர்ப்பூங்கா வனஞ்சூ ழொற்றி மாநகரீர்
நேசங் குறிப்ப தென்னென்றே னீயோ நாமோ வுரையென்றூர்
தேசம் புகழ்வீர் யானென்றேன் றிகழ்தைத் திரிதித் திரியேயா
மேசங் குறிப்ப தென்கின்றூ ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வாசம் கமழும்—வாசனை வீசுகின்ற, மலர் பூங்கா வனம்சூழ்—மலர்களையுடைய பூஞ்சோலைகள் சூழ்ந்த, ஒற்றிமா நகரீர்—திருவொற்றியூரென்கிற பெருநகரத்தை யுடையவரே, நேசம் குறிப்பது என் என்றேன்—அன்பு பாராட்டுவது என்ன வென்றேன், (அதற்கு இவர்) நீயோ நாமோ உரைஎன்றூர்—நீயோ யாமோ சொல்லென்றூர், (அதற்குமேல் நான்) தேசம் புகழ்வீர்—உலகத்தாரால் புகழப்படுகின்றவரே, யான் என்றேன்—நானென்று சொன்னேன், (அதற்கு இவர்) திகழ்—விளங்குகின்ற, தைத்திரி தித்திரியேயாமேசங் குறிப்பது என்கின்றூர்—தைத்திரிதித் திரியேயாமேசங் குறிப்பது என்று சொல்லுகின்றூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

பூங்காவனம் என்பதை ஒரு சொல்லாக்காமற் பிரித்து இரண்டு சொற்களாக்கி, பூங்கா-பூஞ்சோலையானது, வனம்சூழ்-அழகாகச்சூழ்ந்திருக்கிற என்றுரைத்தலுமாம்.

93.பேசுங்கமலப்பெண்புகழும்பெண்மையுடையபெண்களெல்லாங்
கூசும் படியிப் படியொற்றிக் கோவே வந்த தென்னென்றேன்
மாசுந் தரிநீ யிப்படிக்கு மயங்கும் படிக்கு மாதருனே
யேசும் படிக்கு மென்கின்றூ ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஒற்றி கோவே—திருவொற்றியூருக்குத் தலைவரே, பேசும்—சொல்லப்படுகிற, கமலப்பெண்—தாமரையில் வாழ்கின்ற பெண்ணாகிய திருமகளும், புகழும்—புகழ்தற்குரிய, பெண்மையுடைய—பெண்மைக்குணங்களையுடைய, பெண்கள் எல்லாம்—மாதரெல்லாரும், கூசும்படி—நாணும்படி, இப்படிவந்தது என் என்றேன்—இந்தக்கோலமாக வந்ததென்ன வென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) மா சுந்தரி—பேரழகையுடையவளே, நீ இப்படிக்கு மயங்கும்படிக்கும்—நீ யிவ்வாறு மயங்கும்பொருட்டும், மாதர் உன்னை யேசும்படிக்கும்—பெண்கள் உன்னைவையும் பொருட்டுமேயாம், என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

பேசும்-யாவராலும் புகழ்ந்து பேசப்படுகிற. கமலம் எனப் பொதுப்படக் கூறினமையால், வெண்கமலம் செங்கமலம் என்னுமிரண்டையுங் கொள்ளலாம், கொள்ளவே கலைமகளாலும் திருமகளாலும் புகழப்படுகின்ற என்று பொருள் கூறலாம்; பெண்மை-பெண்மைக்குணங்கள், அவை நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என நான்கு. இப்படி-இந்தப்படி (நிர்வாணமாக), இப் படிக்கு இந்தப்பூமியில், இறைவரது நிர்வாணகோலத்தைக்கண்டு தலைவி மயங்கித்தானும் ஆடையிழந்து நிர்வாணமானதைப்பார்த்த மாதர் வசினார்களென்பதை யுணர்த்தற்கு, நீயிப்படிக்கு மயங்கும்படிக்கு மாதருனை யேசும்படிக்கு மென்கின்றார் என்றது.

94. கோடியாலெயில்சூழொற்றியிடங்கொண்டீரடிகள்குருவுருவாம்
படியா லடியி லிருந்தமறைப் பண்பை யுரைப்பீ ரென்றேனின்
மடியா லடியி லிருந்தமறை மாண்பை வகுத்தா யெனிலதுநா
மிடியா துரைப்பே மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) கொடி ஆல்—கொடியாடைகள் அசையாநின்ற, எயில் சூழ்—மதில்சூழ்ந்த, ஒற்றி—திருவொற்றியூரை, இடம் கொண்டீர்—இடமாகக் கொண்டவரே, அடிகள்—தேவரீர், குரு உரு ஆம்படி—குருரூபமாகும்படி, ஆல் அடியில் இருந்த—ஆலமரத்தின் கீழிருந்த, மறை பண்பை—ரஹஸ்யத்தின் தன்மையை, உரைப்பீர் என்றேன்—சொல்லுவீரென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) நின்—உனது, மடி—மடிப்பையுடைய, ஆல் அடியில் இருந்த—ஆலிலையின் கீழிருந்த, மறை—மறைப் பொருளின்,

மாண்பை—பெருமையை, வகுத்தாய் எனில்—வகுத்துச்சொல்லு வையாயின், அது—நீ கேட்ட அந்த மறைப்பொருளின் தன் மையை, நாம்—யாம், இடியாது உரைப்பேம்—இடியாமற் சொல்லுவோம், என்கின்றார்—என்று சொல்லுகின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

ஆல்-அசைதல், குருவரு என்றது-தக்ஷிணாமூர்த்தத்தை. ஆலடியில்-கல்லாலமரத்தின்கீழ். மறைப்பண்பு-வேதப்பொருளின் மேன்மை. அதாவது பிரமப்பொருளின் பெருமை. மடிஆல்-மடிப்பையுடைய ஆலிலை. அதாவது வயிறு, அதனடியிலிருந்த மறை-அதன்கீழிருக்கிறமர்மஸ்தானமாகிய நிதம்பம் (அல்குல்). இடியாதுரைத்தல்-சொல்லாமற் சொல்லுதல், மௌனமா யிருந்தே யுணர்த்தல். இவ்வாறன்றி இடித்துச்சொல்லாமல் அன்போடு சொல்லுதல் எனினுமாம்.

95. என்னே ருளத்தி லமர்ந்தீர்நல் லெழிலா ரொற்றி யிடையிருந்தீ ரென்னே யடிகள் பலியேற்ற லேழ்மை யுடையீர் போலுமென்றே னின்னே கடலி னிடைநீபத் தேழ்மை யுடையாய் போலுமென வின்னே யங்கொண் டுரைக்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) என் நேர் உள்ளத்தில் அமர்ந்தீர்—எனது செம்மையாகிய மனத்தில் அமர்ந்திருப்பவரே, நல் எழில் ஆர்—மிக்க அழகு வாய்ந்த, ஒற்றி இடை இருந்தீர்—திருவொற்றியூரின்கண் இருந்தவரே, அடிகள்—தேவரீர், பலியேற்றல் என்னே—பிக்ஷையேற்பது யாதுகாரணத்தாலோ, எழ்மை உடையீர் போலும் என்றேன்—எளிமையுடையீராக்கும் என்று சொன்னேன், (அதற்கு இவர்) இன்னே—இப்பொழுதே, கடலினிடை—கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில், நீ பத்து எழ்மை உடையாய் என—நீ எம்மிலும் பத்துப் பங்கு எளிமையுடையவளாக்கும் என்று, இன் நேயம் கொண்டு உரைக்கின்றார்—இனிதாகிய அன்புகொண்டு சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

என்னேருளத்தில் என்பதை என் ஏர் உளத்தில் எனப் பிரித்து, எனது அழகிய மனத்தில் என்றுமுரைக்கலாம். மனத்துக் கழகாவது இறைவர் அதனிடத்தமர்ந்திருத்தல்; எழ்மை-வறுமை; இன்னே நீபத்தேழ்மையுடையாய்போலும், என்றிறைவர்சொன்னது என்னை யிகழ்ந்த பாவமேலீட்டால் இப்பொழுதே என்னினும்

பத்துப்பங்காகிய வறுமையையடைந்து பிக்ஷையேற்பாய்போலும் என்றதாயிற்று.

96. நல்லார் மதிக்கு மொற்றியுளீர் நண்ணு முயிர்க டொறுநின்றீ
ரெல்லா மறிவீ ரென்னுடைய விச்சை யறியீர் போலுமென்றேன்
வல்லா யறிவின் மட்டொன்று மனமட் டொன்று வாய்மட்டொன்
றெல்லா மறிந்தே மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) நல்லார் மதிக்கும்—நல்லோரால் மதிக்கப்படுகிற ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, நண்ணும்—உலகத்திற்பொருந்திய, உயிர்கள்தொறும் நின்றீர்—எல்லாவுயிர்களிடத்தும் வியாபித்து நின்றவரே, எல்லாம் அறிவீர்—நீர் எல்லாவற்றையும் அறிவீர், என்னுடைய இச்சை அறியீர்போலும் என்றேன்—எனது விருப்பத்தை மாத்திரம் அறிந்திலீர்போலும் என்று கேட்டேன், (அதற்கு இவர்) வல்லாய்—சொல்லில் வல்லவளே, அறிவின்மட்டு ஒன்று—அறிவினிடத்தொன்று, மனமட்டு ஒன்று—மனத்தினிடத்தொன்று, வாய்மட்டு ஒன்று—வாயினிடத்தொன்று, (ஆகிய) எல்லாம்—எல்லாவற்றையும், அறிந்தேம் என்கின்றார்—அறிந்தோம் என்று சொல்லுகிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

நல்லார் என்றது ஞானியரை. அழகுள்ள மாதரை யெனினுமாம் உயிர்கடொறு நிற்றல்-அந்தர்யாமித்வம், சர்வவியாபகத்வம் எனினுமாம். எல்லாமறிதல்-சர்வஜ்ஞத்வம். என்னுடைய விச்சை எனது விச்சையென்றுகொண்டு இறைவர், ஒரு விச்சையன்று அறிவின்விச்சை, மனத்தின்விச்சை, வாயின்விச்சை என்கிற எல்லா விச்சைகளையும் அறிந்திருக்கிறோமென்றார். வல்லாய் என்றது வாக்குசாதுரியமுடையவளே என்றபடி. அறிவு மனம் வாய் என்பவற்றில் நிகழ்வனயாவு மறிந்திருக்கிற எனக்கு உன் மனவிச்சையொன்றையறிதல் அருமையோ வென்பது கருத்து. உன்னறிவிற்றோன்றுவதொன்றும் மனத்திற் கருதுவதொன்றும் வாயினாற் சொல்வதொன்றுமாயிருக்கின்றதெனினுமாம்.

97. மறிநீர்ச் சடையீர் சித்தெல்லாம் வல்லீ ரொற்றி மாநகரீர்
பொறிசேருமதுபுகழ்பலவிற்பொருந்துங்குணமேவேண்டுமென்றே
குறிநேரமதுவிற்குணத்தின் குணத்தா யதனல் வேண்டுற்றா [ன்
யெறிவேல் விழியா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) மறிநீர் சடையீர்—தடுக்கப்பட்டநீராகிய கங்கையைத்தரித்தசடையையுடையவரே, சித்து எல்லாம் வல்லீர்—சித்துக்களெல்லாவற்றிலும் வல்லவரே, ஒற்றிமாநகரீர்—திருவொற்றிமாநகரத்தையுடையவரே, பொறிசேர்—பொறிசேர்ந்த, உமது புகழ் பலவில்—உமது புகழ் பலவற்றுள்ளும், பொருந்தும்குணமே வேண்டும் என்றேன்—பொருந்துங்குணமே எனக்குவேண்டுமென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) குறிநேர் எமது வில்குணத்தின் குணத்தாய் அதனால்—குறிக்கப்பட்ட எமது விற்குணத்தின் குணத்தையுடையை யாதலால், வேண்டுற்றாய்—வேண்டுகின்றாய், எறிவேல்விழியாய் என்கின்றார்—எறியப்படுகிற வேல்போலுங்கண்களையுடையவளே யென்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

மறித்தல்-தடுத்தல், சித்தெல்லாம் வல்லீர் என்றது எல்லாம் வல்ல சித்தரே யென்றபடி; பொறிசேர்-அடையாளமாகக் குறிக்கப்பட்ட, அறிவோடுகூடிய; பொருந்துங்குணம்-சேருங்குணம் (புணருங்குணம்). பலவின் பொருந்தும் குணம்-பலாக்கனிபோல இனிமையாகிய குணம். குறி-குறிப்பாயாக (நினைப்பாயாக), நேர்-நேராகிய, எமது வில்குணத்தின் குணத்தாய்-எமது வில்லாகிய பொன்னின் குணத்தினும் நற்குணமுடையவளே என்றுயர்த்தியும், எமது வில்லின் நாணாகிய பாம்பின் குணத்தை யுடையவளே யென்றிழித்துங் கூறியவாறு காண்க.

98. ஊரூரிருப்பீரொற்றிவைத்தீ ரூர்தான் வேறுண் டோவென்றே
னோரூர் வழக்கிற் கரியையிறை யுன்னி வினவு மூரொன்றே
பேரூர் தினையூர் பெரும்புலியூர் பிடவூர் கடவூர் முதலாக
வேறூ ரனந்த மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஊர் ஊர் இருப்பீர்—ஊரூராய்த் தங்கியிருப்பவரே, ஊர்தான் ஒற்றிவைத்தீர்—ஊர்தான் ஒற்றியாகவைத்துவிட்டீரே, வேறு உண்டோ என்றேன்—வேறோர் ஊருளதோவென்றேன், (அதற்கு இவர்) ஓர் ஊர் வழக்கிற்கு அரியை—ஒரு ஊரைக்குறித்து வழக்கிடவும் நீ அரியை, இறை உன்னி வினவும்—எமது விடையைப்பெறக்கருதி நீ வினவுகிற, ஊர் ஒன்றோ—ஊர் ஒன்றுதானோ, பேரூர்—பேரூர், தினையூர்—தினையூர், பெரும்புலியூர்—பெரும்புலியூர், பிடவூர்—பிடவூர், கடவூர்—கடவூர், முதலாக—முதலாக,

ஏர் ஊர் அனந்தம் என்கின்ருர்—அழகியவூர்கள் முடிவில்லனவா யிருக்கின்றன என்கிருர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

ஒருவூரையு முடையளல்லள் என்பது தோன்ற ஓரூர் வழக்கிற் கரியை என்ருர். இறை-மறுமொழி; தலேவி வேறு ஊருண்டோ என்றதற்கு இறைவர் உனக்கு ஒரு வூருமில்லே, எமக்கு அளவற்ற வூர்களிருக்கின்றன வென்ருர் என்பது கருத்து. ஒற்றிவைத்தீர்-அடகுவைத்தீர், விலக்கி வைத்தீர். ஒற்றியை இடமாக வைத்துக்கொண்டீர்.

99. விழியொண் ணுதலீ ரொற்றியுளீர் வேதம் பிறவி யிலரென்றே மொழியுநுமைத்தான் வேயீன்ற முத்த ரெனலிங்கென்னென்றேன் பழியின் றணங்கே யவ்வேய்க்குப் படுமுத் தொருவித் தன்றதனு லிழியும் பிறப்போ வென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) விழி—கண்ணேடுகூடிய, ஒள் நுதலீர்—அழகிய நெற்றியையுடையவரே, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, பிறவி இலர் என்று—பிறப்பில்லாதவரென்று, வேதம்மொழியும் நும்மை—வேதங்கள்சொல்லாநின்றவும்மை, இங்கு—இவ்வுலகில், வேய் ஈன்ற முத்தர் எனல் என் என்றேன்—வேயீன்ற முத்தர் என்று சொல்லுதற்குக்காரணம் யாதென்று கேட்டேன், (அதற்கு இவர்) அணங்கே—பெண்ணே, பழி அன்று—(அப்படிச் சொல்லுதல் பழிப்பல்ல, அவ்வேய்க்கு படும் முத்து—அந்தவேயிலுண்டாகும்முத்து, ஒருவித்து அன்று—ஒருவிதையல்ல, அதனுல்—ஆதலால், இழியும்பிறப்போ—அது ஓரிழிபிறப்போ (அன்று), என்கின்ருர்—என்கிருர், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

விழியொண்ணுதலீர் என்றது நெற்றிக்கண்ணேயுடைய ஈசரே என்றபடி, வேய்-மூங்கில், வேயீன்ற முத்தர்-மூங்கிலாற் பெறப்பட்ட முத்தாயிருப்பவர், மூங்கிலில் முத்துப்பிறப்பதியற்கை, வேயீன்ற முத்தர் வரலாறு திருநெல்வேலிப்புராணத்தில் விரிவாய்க்காணலாம். ஒன்றினின்றுண்டாவதும் தான் ஒன்றையுண்டாக்குவதும் ஆகிய தொழில்களுளவாயின் அது பிறப்பு எனப்படும், முத்து மூங்கிலி னின்றுண்டாயிற்றேயன்றித் தான் வேறொரு மூங்கிலேயாயினும் முத்தையாயினு முண்டாக்காதாதலால் இது பிறவியெனப்படாது என்று இறைவர் கூறித் தமக்குப் பிறப்பில்லே யென்பதை வற்புறுத்தினுர்.

100. விண்ணார் பொழில்சூ ழொற்றியுளீர் விளங்குந்தாமமிகுவாசத்
தண்ணார்மலர்வேதனையொழிக்கத் தருதல்வேண்டுமெனக்கென்றே
பண்ணார் மொழியா யுபகாரம் பண்ணாப் பகைவரேனுமிதை [ன்
யெண்ணா ரெண்ணா ரென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) விண் ஆர் பொழில் சூழ்—ஆகாயத்தைத் தொடுகின்ற சோலை சூழ்ந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, விளங்கும் தாமம்—விளங்குகின்ற மாலையாகத்தொடுத்த, மிகுவாசம்—மிக்கமணமுள்ள, தண் ஆர் மலர்—குளிர்ச்சிபொருந்தியமலரை, வேதனை ஒழிக்கத்தருதல்வேண்டும் எனக்கு என்றேன்—என்வேதனையொழிக்கும்படி எனக்குத்தரல்வேண்டுமென்றேன், (அதற்கு இவர்) பண் ஆர் மொழியாய்—பண்போலுஞ்சொல்லையுடையவளே, உபகாரம்பண்ணா—உபகாரம் செய்யாத, பகைவர் ஏனும்—பகைவராயினும், இதை—இந்தக்காரியத்தை, எண்ணார் எண்ணார் என்கின்றார்—நினையார் நினையார் என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

தாமம்-மாலை ; மலர்வேதனை யென்பதற்குத் தலைவி கருத்து மன்மதபாணங்களாகிய மலர்கள் செய்கிற துன்பம் என்பது. இறைவர்கொண்ட கருத்து-தாமரை மலரையுடைய பிரமனை யென்பது; இப்படிப் பொருள்கொண்ட இறைவர், பிரமன் உலகத்தைப் படைப்பவனாயிருக்கிறானே, அவனை யழித்தல் தருமமன்று ; இந்த எண்ணத்தைப் பகைவருங் கொள்ளமாட்டார் ; ஆதலால் யாம் அது செய்யோமென்றாராயிற்று, எண்ணார் எண்ணார் என்ற அடுக்கு வற்புறுத்தற் பொருளது.

101. செம்பான்மொழியார் முன்னரெனைச் சேர்வீரென்கோதிரு
வொற்றி, யம்பார்சடையீருமதாடலறியேனருளல்வேண்டுமென்றே
வம்பார்முலையாய்காட்டுகின்றா மன்னும் பொன்னாரம்பலத்தே [ன்
யெம்பால் வாவென் றுரைக்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) செம்பால் மொழியார் முன்னர்—செவ்வியபால்போலும் இன்சொல்லையுடையவராகிய மாதர்க்கெதிரே, என்னை சேர்வீர் என்கோ—என்னை யணைவீரென்று சொல்லுவேனோ, திருவொற்றி—திருவொற்றியூரிலுள்ள, அம்பு ஆர் சடையீர்—கங்கை தங்கிய சடையை யடையவரே உமது ஆடல் அறியேன்—உமது

திருவிளையாடலை யறிந்திலேன், அருளல்வேண்டும் என்றேன்—அருள்செய்தல் வேண்டுமென்றேன், (அதற்கு இவர்) வம்பு ஆர் முலையாய்—கச்சணிந்த தனங்களை யுடையவளே, காட்டுகின்றோம்—(எமது ஆடலை) காட்டுகின்றோம், மன்னும்—நிலைபெற்ற ஆர் பொன் அம்பலத்தே—அரிதாகிய பொன்னம்பலத்தில், எம்பால் வா என்று உரைக்கின்றார்—எம்மிடத்து வருவாயாக வென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

செம்பால் என்பதில் செம்மை இனிமைப்பொருளது. ஆடல்-கூத்து. தலைவி ஆடலறியேன் என்றதற்குத் தலைவர் பொன்னம்பலத்துக்கு வந்தால் காட்டுவோம் என்பது கருத்து.

102. மைக்கோண்மிடற்றீ ரூரொற்றிவைத்தீருண்டோமனையென்றேன், கைக்கணிறைந்ததனத்தினுந்தங்கண்ணினிறைந்தகணவரையே, துய்க்குமடவார்விழைவரெனச்சொல்லும்வழக்கீதறிந்திலையோ வெய்க்கு மிடையா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) மை கொள் மிடற்றீர்—கருநிறத்தைக்கொண்ட கண்டத்தையுடையவரே, ஊர் ஒற்றி வைத்தீர்—ஊரை யொற்றிவைத்தீர், மனை உண்டோ என்றேன்—(உமக்கு) மனையுண்டோவென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) எய்க்கும் இடையாய்—மெலிந்த இடையையுடையவளே, துய்க்கும் மடவார்—(போக சுகத்தை) அநுபவிக்கிற மாதர்கள், கைக்கண்நிறைந்த தனத்தினும்—கையில் நிறைந்திருக்கிற பொருளைப்பார்க்கிலும், தம்கண்ணில்நிறைந்த கணவரையே—தமது கண்களுக்கு நிறைந்த கணவரையே, விழைவர் என சொல்லும் வழக்கு ஈது—விரும்புவார்கள் என்று சொல்லுகிறவழக்காகிய இதனை, அறிந்திலையோ—அறிந்தாயில்லையோ, என்கின்றார்—என்று சொல்லுகின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

மை-நஞ்சுண்டதனுண்டாகிய கருநிறம். மனை-வீடு, மனைவி. எய்க்குமிடை-முலைப்பாரத்தால் மெலிந்த இடை; கைநிறைந்த பொருளைப்பார்க்கிலும் கண்ணிறைந்த கணவன் சிறந்தவன் என்பது உலக வழக்காகிய பழமொழி; ஊரை யொற்றிவைத்துவிட்டீரே இப்படிப்பட்ட வறியராகிய வுமக்கு மனைவியுண்டோ என்று தலைவி கேட்டதற்கு விடையாக இறைவர் கைக்கணிறைந்த தனத்தினுந் தங் கண்ணினிறைந்த கணவரையே மடவார் விழைவ

எனச் சொல்லும் வழக்கீ தறிந்திலேயோ என்றிறைவர் கூறினர். இதனுல் நீயென் வறுமையை நோக்காமல் உன்போக சுகத்தை விரும்பி எம்மைப் புணர்வாயாக என்னும் கருத்துப் பெறப் பட்டது.

103. ஆறு முகத்தார்தமையீன்ற வைந்துமுகத்தா ரிவர்தமைநான்
மாறு முகத்தார் போலொற்றி வைத்தீர் பதியை யென்னென்றே
ஞறு மலர்ப்பூங் குழனீயோ நாமோ வைத்த துன்மொழிமன்
றேறு மொழியன் றென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஆறுமுகத்தார் தமைஈன்ற—ஆறுமுகங்களையுடைய வராகிய முருகக்கடவுளைப்பெற்ற, ஐந்து முகத்தார்—ஐந்து முகங் களையுடையவராகிய, இவர்தமை --இவரை, நான்—யான், மாறு முகத்தார்போல்—பகைவரைப்போல, பதியை ஒற்றி வைத்தீர்— ஊரை ஒற்றிவைத்தீர் என்என்றேன்—என்னென்று கேட்டேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) நாறும்—பரிமளிக்கின்ற, மலர்— மலர்களை யணிந்த, பூ குழல்—பொலிவாகிய கூந்தலை யுடைய, நீயோநாமோ வைத்தது—நீயோநாமோ பதியை ஒற்றிவைத்தது, உன்மொழி—உன் சொல்லானது, மன்று ஏறும்மொழி அன்று— சபைக்கேறும் சொல்லன்று, என்கின்ரூர்—என்று சொல்லுகிரூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

ஆறுமுகத்தார் தமையீன்ற வைந்துமுகத்தார் என்றது அதி சயோக்தி. மாறுமுகத்தார்-மாறுபட்டமுகத்தையுடையவர் (பகை வர்). பதி-இடம். (ஒற்றியூர்) கணவன். மன்றேறுமொழி யன்று என்றது-நியாயசபைக்கேறு மொழியன்றென்றபடி. பூங்குழல்- அழகியகூந்தல் எனினுமாம். பூங்குழல் அண்மை விளியென்றலு மொன்று. பதியையொற்றி வைத்தல்-கணவனை விலக்கிவைத்தது. பதியை ஒற்றிவைத்தீர் என் என்ற தலைவிக்கு விடையாக நீதான் பதியை யொற்றிவைத்தது என்றிறைவர் கூறினர் என்பது கருத்து.

104. வள்ளன்மதியோர் புகழொற்றி வள்ளாலுமது மணிச்சடையின்
வெள்ள மகண்மேற் பிள்ளைமதி விளங்க லழகீ தென்றேனின்
னுள்ள முகத்தும்பிள்ளைமதி யொளிகொண் முகத்தும் பிள்ளைமதி
யெள்ள லுடையா யென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) வள்ளல் மதியோர்புகழ்—பேரறிவுடையோர்கள் புகழாநின்ற, ஒற்றிவள்ளால்—திருவொற்றிவள்ளலே, உமது மணி சடையின்—உமது அழகிய சடையிலுள்ள, வெள்ளமகள்மேல்—கங்கையின்மேல், பிள்ளைமதி விளங்கல் ஈது அழகு என்றேன்—பிள்ளைமதி பிரகாசிப்பதாகிய இது அழகாயிருக்கிற தென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) எள்ளல் உடையாய்—இகழ்ச்சிக் கிடமாயுள்ளவளே, நின் உள்ளமுகத்தும் பிள்ளைமதி—உன் மனத் திலும் பிள்ளை மதியே, ஒளிகொள் முகத்தும் பிள்ளைமதி—ஒளியைக்கொண்ட முகத்திலும் பிள்ளைமதியே, என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

வள்ளல்-பெருமை, ஔதார்யம். மதி-அறிவு, இறைவர் மோக்ஷ ஸாம்ராஜ்யமாகிய பெருஞ்செல்வத்தைத் தம்மையடுத்தார்க்கு வரையாது கொடுப்பவராதலால் வள்ளால் என்றாள்; வெள்ளமகள்-கங்கையாகிய பெண்; மேல்-ஏழனுருபு இடப்பொருளது, கங்கையாகிய பெண்ணிடத்தும்; பிள்ளைமதி-பாலசந்திரன். உள்ள முகத்தும் பிள்ளைமதியென்றது மனத்திலும் சின்னபுத்தி, ஒளி கொள் முகத்தும் பிள்ளைமதி-ஒளியைக்கொண்டமுகத்திலும் அர்த் தசந்திரன், (அஷ்டமீசந்திரன்;) இது நெற்றியைக் குறித்தது, கங்கைக்கு ஒரு பிள்ளைமதி உனக்கு இரண்டு பிள்ளைமதி யென்றா ராயிற்று.

105. உள்ளத் தனையே போலன்ப ருவக்குந் திருவா ழொற்றியுளீர்
கள்ளத் தவர்போ லிவணிற்குங் கரும மென்னீ ரின்றென்றேன்
மெள்ளக் கரவு செய்வோநாம் வேடமெடுத்தோ நின்சொனினை
யெள்ளப் புரிந்த தென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) அன்பர்—அன்பர்கள், உள்ளத்து—தம்மனதில், அன்னையேபோல் உவக்கும்—தாயைப்போலவே யெண்ணிவிரும்பு கிற, திருவாழ் ஒற்றியுள்ளீர்—செல்வப்பெருக்கு நிறைந்த ஒற்றி யூரிலுள்ளவரே, கள்ளத்தவர்போல்—திருடரைப்போல, நீர் இவண் நிற்கும் கருமம் என் என்றேன்—நீர் இங்கே நிற்கும் காரியம் என்னவென்றேன், (அதற்கு இவர்) நாம் மெள்ளகரவு செய் வோம்—யாம் மெள்ளக் களவுசெய்வோம், வேடம் எடுத்தோம்—(அதற்கென்றே இந்த) வேடம் பூண்டோம், நின்சொல்—உன் சொல்லை, நின்னை—உன்னை, எள்ளப்புரிந்தது—இகழச்செய்தது, என்கின்றார்—என்கிறார். இதுதான் சேடி என்னேடீ. எ—று.

அன்பருவக்குமொற்றியுள்ளீர் என்றியையும். திருவாழ்-செல்வந்தங்கிய, இலக்குமி வாழ்கின்ற. கள்ளத்தவர்-சோரர். கள்ளத்தவவேடம்பூண்டோர் (இவர் ராவண சந்நியாசிபோல்வார்) கரவுசெய்வோம்-திருடுவோம், மறைவோம். வேடம்-திருட்டு வேஷம், கபடசந்நியாசிவேஷம். கள்ளத்தவர்போல் என்ற தலைவி வார்த்தையைப் பற்றுக்கோடாகக்கொண்டு யாம் கள்ளத்தவர் போல் வேடம் பூண்டது உன்னைத் திருடுவதற்கேயா மென்றிறைவர் விடை விடுத்தாராயிற்று.

106. அச்சையடுக்குந்திருவொற்றி யவர்க்கோர்பிச்சைக்கொடுமென் றேன், விச்சையடுக்கும்படி நம்பான் மேவினோர்க்கிவ்வகிலநடைப் பிச்சை யெடுப்பேமலதுன்போற் பிச்சைக்கொடுப்பே மலவென்றே யிச்சை யெடுப்பா யுரைக்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) அச்சை அடுக்கும்—உயிர்களை யடுத்திருக்கிற, திருவொற்றி யவர்க்கு—திருவொற் றூரை யுடையவருக்கு, ஓர் பிச்சை கொடும் என்றேன்—ஒருபிச்சை கொடும் என்று சொன்னேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) விச்சை அடுக்கும்படி—ஞானமுண்டாகும்படி, நம்பால் மேவினோர்க்கு—எம்மிடத்தை யடைந்தவர்க்கு, இ—இந்த, அகிலநடை—உலக நடையாகிய, பிச்சை எடுப்பேம் அல்லது—பிச்சையெடுப்போமேயன்றி, உன் போல்—உன்னைப்போல, பிச்சை கொடுப்பேம் அல்ல என்று—பிச்சைகொடுப்போமல்லோமென்று, இச்சை எடுப்பாய் உரைக்கின்றார்—இச்சையெடுப்பாகச் சொல்லுகின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

அச்சையடுத்தல்-எல்லா உயிர்களிலும் நிறைந்திருத்தல், இது சர்வவியாபகத்வம், சர்வாந்தர்யாமித்வம் எனினுமாம். திருவொற்றியவர்க்கு-திருவொற்றியூரரை நோக்கி, திருவொற்றியவர்க்கு என்றேன் எனவியையும். விச்சை-வித்தை, ஞானம். பிச்சைக்கொடும் என்ற தலைவி வார்த்தைக்கு விடையாக இறைவர் யாம் பிச்சையெடுப்பதன்றி உன்னைப்போல பிச்சைகொடுப்போமல்லேம் என்றார். பிச்சை-பிக்ஷையென்றும், காமமயக்கத்தை யென்றும், அகிலநடைப்பிச்சை-உலகநடையாகிய பைத்தியத்தை யென்றும் உரைத்துக்கொள்க. அகிலநடைப் பிச்யையெடுப்பேம் என்றது-உலகநடைப் பைத்தியத்தை வாங்கிவிடுவோம் என்றபடி.

பிச்சு-பித்து, பிச்சையெடுப்பேம்-பிச்சைக்கொடுப்பேம். இவ்விரண்டும் செய்வோம் என்றதாகவுமுரைக்கலாம். இச்சையெடுப்பு-இச்சையாயும் எடுப்பாயு முரைத்தல்.

107. அள்ளற்பழனத் திருவொற்றி யழக ரிவர்தம் முகநோக்கி [ன்
வெள்ளச்சடையீருள்ளத்தேவிருப்பேதுரைத்தாற் றருவலென்றே
கொள்ளக்கிடையாவலர்குமுதங்கொண்டவமுதங்கொணர்ந்தின்னு
மெள்ளத் தனைதா வென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ—ள்.) அள்ளல் பழனம்—சேற்றையுடைய வயல்கள்சூழ்ந்த, திருவொற்றி அழகர்—திருவொற்றியூரழகராகிய, இவர் முகம் நோக்கி—இவரது முகத்தைப் பார்த்து, வெள்ளச்சடையீர்—கங்கையைத்தரித்த சடையையுடையவரே உள்ளத்தே—தேவரீர் திருவுள்ளத்திலேயுள்ள, விருப்பு ஏது—விருப்பம் யாது, உரைத்தால்—சொன்னால், தருவல் என்றேன்—தருவேனென்று சொன்னேன், (அதற்கு இவர்) கொள்ளக்கிடையா—பெறக்கிடைக்காத, அலர் குமுதம் கொண்ட அமுதம் கொணர்ந்து—அலர் குமுதங்கொண்ட அமிர்தத்தைக்கொண்டுவந்து, இன்னும் எள் அத்தனை தா என்கின்றார்—இன்னம் எள்ளளவு கொடு என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

இவர் தம் முகம் என்பதில் தம் சாரியை. வெள்ளம்-பெருக்கு, கங்கைப்பெருக்கு. விருப்பு-விரும்பும்பொருள், விருப்பேதுரைத்தாற் றருவல் என்ற தலைவியை நோக்கி இறைவர் அலர் குமுதங்கொண்ட அமுதம்-விரிந்த அடுப்பிற் சமைத்த சோறு என்றும், செவ்வல்லி மலர்போலும் வாயமுதம் என்றும் இருபொருள்படச் சொன்னார். குமுதம் அடுப்பிற்கும் செவ்வல்லி மலருக்கும் பேர். வாய்க்கு உவமையாகுபெயர். எள்ளத்தனை-எள்ளளவு, இன்னும் என்றதனால், முன்னும் தலைவியின் குமுத அமுதமுண்டவரென்றது விளங்குகின்றது. தலைவி தந்தாளென்பதும் தோன்றுகின்றது.

108. விஞ்சுநெறியீ ரொற்றியுளீர் வியந்தீர் வியப்பென்னிவணென்
றேன், கஞ்ச மிரண்டு நமையங்கே கண்டு குவிந்த விரிந்திங்கே
வஞ்ச விருதா மரைமுகையை மறைக்கின் றனநின் பால்வியந்தா
மெஞ்ச லறநா மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) விஞ்சும் நெறியீர்—மேலான நெறியையுடையவரே, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, வியந்தீர்—வியப்படைந்தீர், இவண்—இவ்விடத்தில், வியப்பு என் என்றேன்—வியப்பாவது யாது என்றேன், (அதற்கு இவர்) கஞ்சம் இரண்டு—இரண்டு கஞ்சங்கள், அங்கே நம்மை கண்டு—அங்கே எம்மைப் பார்த்து, குவிந்த—கூம்பின, இங்கே—இங்கே, விரிந்து—மலர்ந்து, வஞ்சம்—கொடுமையுள்ள, இரு தாமரை முகையை மறைக்கின்றன—இரண்டு தாமரை யரும்புகளை மறையாநின்றன, (இது நிகழ்வது எங்கேயெனின்) நின்பால்—உன்னிடத்தேயாம், (இதைக் கண்டே) நாம்—யாம், எஞ்சல் அற—குறைவற, வியந்தாம் என்கின்றார்—வியந்தோமென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

விஞ்சுநெறி-மேலான ஒழுக்கநெறி. வியத்தல்-ஆச்சரியப்படுதல். கஞ்சம்-தாமரைமலர், கஞ்சமிரண்டு என்றது தாமரை மலர்போலும் இரண்டு கைகளை, குவிந்த என்றது அஞ்சலி செய்த போது குவிந்தன என்றபடி. இருதாமரை முகையென்றது இரண்டு தாமரை யரும்புபோலுந் தனங்களை, வஞ்சம்-கொடுமை, இது ஆடவரைக் கொலைசெய்யுங் கொடுமை, மாயஞ்செய்தல் எனினுமாம். அங்கே நம்மைக் கண்டு அஞ்சலித்த கைகள் இங்கே நம்மைக்கண்டு நாணத்தால் தனங்களை மறைக்கின்றன என்றார்.

109. அளியா ரொற்றி யுடையாருக் கன்ன நிரம்ப விடுமென்றே
னளியார் குழலாய் பிடியன்ன மளித்தாற் போது மாங்கதுநின்
னொளியார் சிலம்பு சூழ்கமலத் துளதாற் கடகஞ் சூழ்கமலத்
தெளியார்க் கிடுநீ யென்கின்றாரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) அளி ஆர்—அருள்நிறைந்த, ஒற்றி உடையாருக்கு—திருவொற்றியூரை யுடையவருக்கு, அன்னம்—அன்னத்தை, நிரம்ப இடும் என்றேன்—மிகுதியாக இடுங்களென்று (உங்களை நோக்கி) சொன்னேன், (அதற்கு இவர்,) அளி ஆர் குழலாய்—வண்டுகள் நிறைந்த கூந்தலையுடையவளே, பிடி அன்னம் அளித்தால்போதும்—பிடியன்னம் கொடுத்தால்போதும், அது—அது, நின்—உனது, ஒளி ஆர் சிலம்புசூழ்—ஒளிபொருந்திய சிலம்பு சூழ்ந்த, கமலத்து உளது—கமலத்திலுள்ளது, கடகம் சூழ் கமலத்து—கடகஞ்சூழ்ந்த கமலத்தினால், நீ எளியார்க்கு இடு என்

கின்றூர்—நீ எளியவர்க் கிடுவாயாக என்கிறூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

அளியார் ஒற்றியுடையார்-அருள்வடிவினராகிய ஒற்றியூருடையார் எனினுமாம். அன்ன நிரம்பவிடும் என்றது சேடி முதலானவரை நோக்கி. கூந்தலில் வண்டுகள் மொய்ப்பது தேன் மணம் என்பவற்றை விரும்பியென்க. தலைவி தன் சேடி முதலானுரை நோக்கி அளியா ரொற்றியுடையாருக்கன்ன நிரம்பவிடும் என்றதைக் கேட்ட இறைவர், எனக்கு அதிகம் வேண்டியதில்லை பிடியன்னம் தந்தாற் போதும் என்று சொல்லி அந்தப் பிடியன்னம் உன் ஒளிபொருந்திய சிலம்புசூழ்ந்த கமலத்திலுள்ளது என்றும், உன் கடகம் சூழ்ந்த கையால் எளியவர்க்கு அன்னமிடு என்றும் கூறினர். பிடி அன்னம்-பெண் யானை, அன்னம் இவற்றின் நடை போலும் நடை; சிலம்புசூழ் கமலம்-பாதம், கடகஞ்சூழ் கமலம்-கை, பிடியன்னம்-பிடிசோறு. பிடியன்னத்தை உன் காலால் எனக்குக் கொடு, மிகுதியாகிய அன்னத்தை உன் கையால் எளியவர்க்கிடு என்பது கருத்து.

110. விச்சைப்பெருமா னெனுமொற்றி விடங்கப்பெருமானீர்முன்
னம், பிச்சைப்பெருமானின்றுமணப் பிள்ளைப்பெருமானுமென்றே
னச்சைப் பெறுநீ யம்மணப்பெண் ணுகி யிடையி லையங்கொள்
ளிச்சைப் பெறும்பெண் ணென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) விச்சை பெருமான் என்னும்—ஞானத்தை யருள் செய்கிற பெருமான் என்று சொல்லப்படுகிற, ஒற்றி விடங்கப் பெருமான்—திருவொற்றியூரில் எழுந்தருளிய விடங்கப் பெருமானே, நீர்—தேவரீர், முன்னம்—முன்னே, பிச்சை பெருமான்—பிச்சைப் பெருமானுயிருந்தீர், இன்று—இப்பொழுது, மணப் பிள்ளை பெருமான் ஆம் என்றேன்—மணப்பிள்ளையாகிய பெருமானுரா யிருக்கிறீர் என்றேன், (அதற்கு இவர்) அச்சைபெறும் நீ—அழகாகிய உடம்பைப் பெற்ற நீ, அம்மணப் பெண் ஆகி—அம்மணப்பெண்ணுகி, இடையில்—இடையிலே, ஐயம் கொள்—ஐயத்தைக் கொண்ட, இச்சைபெறும் பெண் என்கின்றூர்—இச்சையைக்கொண்ட பெண்ணுகின்றூய் என்கிறூர், இதுதான் சேடி என்னேடீ. எ—று.

விச்சை-வித்தை, ஞானம், பிச்சை-பிக்ஷை. பெருமான்-பெருமையை யுடையோன். மணப்பிள்ளை-மணக்கோலங்கொண்ட

மாப்பிள்ளை- அச்சு-உடம்பு. அம்மணப்பெண்-அழகிய கலியாணப் பெண், அம்மணமாகிய பெண், நிருவாணப்பெண். இடையில்- நடுவில், அரையில். ஐயம்கொள்-பிச்சையைக்கொண்ட, பைத்தி யத்தைக்கொண்ட, பிச்சு-பித்து, பைத்தியம். இச்சை-போகவிருப் பம், அம்மணப்பெண்ணுதற்குக் காரணம் என்மீதுள்ள விருப்பமே யென்றார்.

111. படையம்புயத்தோன் புகழொற்றிப் பதியீரரவப்பணிசுமந்தீர்
புடையம்புயத்திலென்றேன்செம் பொன்னேகொடையம்புயத்தினு
நன், னடையம்புயத்துஞ் சுமந்தனைநீ நானு வரவப் பணிமற்று
மிடையம் புயத்து மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) படை—உலகத்தைப் படைக்கின்ற, அம்புயத் தோன்—தாமரை மலரிலிருக்கிற பிரமன், புகழ்—புகழ்கின்ற, ஒற்றிப்பதியீர்—திருவொற்றியூரையுடையவரே, புடை—பருத்த, அம்புயத்தில்—அழகிய புயத்தில், அரவப்பணி சுமந்தீர் என் றேன்—அரவப்பணியைச் சுமந்தீர் என்று சொன்னேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) செம்பொன்னே—செம்பொன்போல் வாளே, கொடை அம்புயத்தினும்—கொடையம் புயத்திலும், நல் நடை அம்புயத்தும்—நல்லநடையம் புயத்திலும், நீ நானு அரவப் பணி சுமந்தனை—நீ நானுவிதமான அரவப்பணிகளைச் சுமந்தாய், (அதுவேயுமன்றி) மற்றும்—மேலும், இடை அம்பகத்தும் என் கின்றார்—இடையம்பகத்தும் சுமந்தாய் என்கின்றார், இதுதான் சேடி யென்னேடீ.எ-று.

அம்புயம்-தாமரை, அம்புயத்தோன்-தாமரை மலரிலிருப்ப வன். அரவப்பணி-பாம்பாகிய ஆபரணம், புடைத்தல்-பருத்தல். செம்பொன்னே-செந்நிறமுள்ள திருமகளை நிகர்த்தவளே எனினு மாம். அம்புயம்-அழகியதோள். கொடை அம்புயம்-கொடுத்தலை யுடைய தாமரை, அது கை, நடை அம்புயம்-நடத்தலையுடைய தாமரை, அது பாதம், அரவப்பணி-ஒலியையுடைய மேகலை முத லிய ஆபரணங்கள், இடை அம்பகம்-இடையைச்சார்ந்த அழகிய பகம், பகம்-நிதம்பப்பிரதேசம், அல்குல், அரவம்-ஒலி.

112. கூம்பாவொற்றியூருடையீர் கொடும்பாம் பணிந்தீரென்னென்
றே, னோம்பா துரைக்கிற்பார்த்திடினுள்ளூன்னில்விடமேற்றுன்னி
டைக்கீழ்ப், பாம்பாவதுவே கொடும்பாம்பெம்பணிப்பாம்பதுபோற்
பாம்பலவென்,றேம்பாநிற்பவிசைக்கின்றாரிதுதான்சேடிஎன்னேடீ

(இ-ள்.) கூம்பா—அழியாத, ஒற்றியூருடையீர்—திருவொற்றியூரை யுடையவரே, கொடும்பாம்பு அணிந்தீர்—கொடுமையாகிய பாம்பை யணிந்திருக்கிறீர், என் என்றேன்—இதற்குக் காரணம் யாதென்று கேட்டேன், (அதற்கு இவர் என்னை நோக்கி பெண்ணே) ஓம்பாது உரைக்கில்—விரும்பாமற் சொன்னாலும், பார்த்திடின்—பார்த்தாலும், உள் உன்னில்—மனத்தால் நினைத்தாலும், விடம் ஏற்று—விஷமேறப்பண்ணுகிற, உன்—உனது, இடைக்கீழ்—அரையின் கீழேயுள்ள, பாம்பு ஆவதுவே—பாம்பாவதே, கொடும்பாம்பு—கொடிய பாம்பாகும், எம் பணி பாம்பு—எமது ஆபரணமாகிய பாம்பு,அதுபோல் பாம்பு அல்லஎன்று—(உன் இடைக்கீழுள்ள) அந்தப்பாம்பு போலக் கொடும்பாம் பல்லவென்று, ஏம்பா நிற்ப இசைக்கின்றார்—மனம்வருந்தும்படி சொல்லுகின்றார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

கூம்பல்-குவிதல், அதாவது அழிதல். கொடும்பாம்பு-துன்பஞ்செய்யும் பாம்பு, ஓம்பல்-விரும்பல், இடைக்கீழ்பாம்பு-அரையின் கீழுள்ள அல்குற் பாம்பு, பணி-ஆபரணம், ஏம்பல்-களித்தல் எனினுமாம். கொடும்பாம்பணிந்தீர் என்று தலைவி சொன்னதற்கு விடையாக இறைவர் எமது பணிப்பாம்பு உன் இடைக்கீழ்ப்பாம்பு போலச் சொன்னாலும் பார்த்தாலும் நினைத்தாலும் விஷமேறப் பண்ணுகிற கொடும்பாம் பன்றென்றார்.

113. புயல்சூழொற்றியுடையீரென் புடையென்குறித்தோபோந்த தென்றேன், கயல்சூழ்விழியாய்தனத்தவரைக்காணவிரப்போரெதற்கென்றார்,மயல்சூழ்தனமிங் கிலையென்றேன்மறையாதெதிர்வைத் திலையென்ற,வியல்சூழறமன்றென்கின்றாரிதுதான்சேடிஎன்னேடீ.

(இ-ள்.) புயல்சூழ்—மேகஞ்சூழ்ந்த, ஒற்றி உடையீர்—திருவொற்றியூரை யுடையவரே, என் குறித்தோ—யாது நினைத்தோ, என்புடை போந்தது என்றேன்—என்னிடம் வந்ததென்று கேட்டேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) கயல் சூழ் விழியாய்—சேல்மீன் போலும் விழியை யுடையவளே, இரப்போர்—யாசிப்பவர், தனத்தவரை காணல்—தனத்தாரைக்காணுதல், எதற்கு என்றார்—எதன்பொருட்டு என்றார், (அதற்கு நான்) மயல்சூழ் தனம்—(யாவருக்கும்) விருப்பத்தைச்செய்கிற தனமானது, இங்கு இல்லை என்றேன்—இங்கே யில்லையென்று சொன்னேன், (அதற்கு

மேல் இவர்) மறையாது எதிர்வைத்து—மறைக்காமல் எதிரே வைத்து, இல்லை என்றல்—இல்லையென்று சொல்லுதல், இயல்சூழ் அறம் அன்று என்கின்றார்—நல்லொழுக்கத்தை யுண்டாக்குகிற தருமநூலின் துணிபு அன்றென்கிறார்—இதுதான் சேடி யென் னேடீ. எ—று.

புயல்சூழ்தல்-மேகங்கள் மாளிகைகளின் மேலுஞ் சோலை களின் மேலுஞ் சூழ்ந்திருத்தல் ; புடை-ஏழாவதனிடபப் பொரு ளது, குறித்தல்-நினைத்தல், தனத்தவர்-தனமுடையவர், கொங்கை களையுடையவர். பொன்னும் கொங்கையும் யாவர்க்கும் விருப் பத்தை யுண்டாக்கலால், மயல்சூழ் தனம் என்றது. அறம்-தரு மம், அது அதைச்சொல்லுகிற நூலுக்காயிற்று.

114. நடவாழ் வொற்றி யுடையீர்நீர் நாக மணிந்த தழகென்றேன்
மடவா யதுநீர் நாகமென மதியே லயன்மால் மனநடுங்க
விடவா யுமிழும் படநாகம் வேண்டிற் காண்டி யென்றேயென்
னிடவா யருகே வருகின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) நடவாழ்—நடநவாழ்க்கையுள்ள, ஒற்றி உடையீர்—திருவொற்றியூருடையவரே, நீர் நாகம் அணிந்தது—நீர் நாகத்தை யணிந்தது, அழகு என்றேன்—அழகாயிருக்கிற தென்றேன், (அதற்கு இவர்) மடவாய்—பெண்ணே, அது நீர் நாகம் எனமதி யேல்—அது நீர் நாகமென்று நினையாதே, அயன் மால்—பிரமனும் திருமாலும், மனம் நடுங்க—மனம் நடுங்கும்படி, விடவாய் உமி ழும்—வாயினால் விடத்தை யுமிழ்கின்ற, படநாகம்—படநாக மாகும், வேண்டின்—வேண்டுவையாயின், காண்டி என்று—காண் பாயாகவென்று, இடவாய்—எனது இடப்பக்கத்தில், அருகே வரு கின்றார்—கிட்ட வருகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

நடம்-நடநம், நீர்நாகம்-நீர்ப்பாம்பு. படநாகம்-படத்தை யுடைய நல்லபாம்பு, நீர்நாகம் அணிந்தது-தேவரீர் பாம்பணிந்தது, இது தலைவி கருத்து, நீர்ப்பாம்பணிந்தது இறைவர் கருத்து.

115. கோடா வொற்றியுடையீர்நுங் குலந்தான்யாதோ கூறுமென்
றேன், வீடார் பிரம குலந்தேவர் வேந்தர் குலநல் வினைவசியப்
பாடார் குலமோர் சக்கரத்தான் பள்ளிக் குலமெல் லாமுடையே
மேடார் குழலா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) கோடா—அழியாத, ஒற்றி உடையீர்—திருவொற்றியூரை யுடையவரே, நும்குலம் தான் யாதோ கூறும் என்றேன்—உமது குலந்தான் எதுவோ சொல்வீரென்றேன், (அதற்கு இவர்) வடு ஆர் குழலாய்—பூவினையணிந்த கூந்தலையுடையாளே, வீடு ஆர் பிரமகுலம்—வீடடைதற்குரிய பிரமகுலம், தேவர் வேந்தர்குலம்—தேவர் அரசர் இவர்கள் குலம், நல்வினை—சற்கருமத்தையுடைய, வசியர்—வைசியரது, பாடு ஆர் குலம்—பெருமைபொருந்திய குலம், ஓர் சக்கரத்தான் பள்ளிக்குலம்—ஒப்பற்ற சக்கரப்பள்ளிக்குலம் (ஆகிய), எல்லாம் உடையேம்—இந்தக் குலங்களெல்லா முடையேம், என்கின்றூர்—என்கிறூர், இதுதான் சேடி யென்னேடீ. எ—று.

கோடல்-வளைதல், அது இங்கு அழிவுக்காயிற்று. குலம் என்பதற்குத் தலைவி பொருள்கொண்டது சாதி. அதற்கு இறைவர் கோயில் எனப் பொருள் கொண்டு, பிரமன் முதலிய எல்லா வுயிர்களின் மனமாகிய கோயிலில் வாழ்வோம் என்று விடை கூறினர். சக்கரத்தான் பள்ளி-சக்கரத்தானுகிய பள்ளி, திருமால். பள்ளி-சயநத்திருக்கோலத்தை யுடையவன்.

116. நலமா மொற்றி யுடையீர்நீர் நல்ல வழக ராணுலுங்
குலமே துமக்கு மாலையிடக் கூடா தென்றே னின்குலம்போ
லுலகோ துறுநங் குலமொன்றோ வோரா யிரத்தெட் டுயர்குலமிங்
கிலகா நின்ற வென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) நலம் ஆம்—நன்மை வளர்கின்ற, ஒற்றிஉடையீர்—திருவொற்றியூரையுடையவரே, நீர்—தேவரீர், நல்ல அழகர் ஆனலும்—சிறந்த அழகுள்ளவரேயாயினும், உமக்கு குலம் எது—உமக்குச் சாதியேது, மாலையிடக்கூடாது என்றேன்—உமக்கு மாலையிடத் தகாது என்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) நின் குலம்போல்—உன்குலம்போல, உலகு ஓதுறும்—உலகமானது துதிக்கப்பெற்ற, நம்குலம் ஒன்றோ—எமது குலம் ஒன்றுதானே, (அன்று) ஓர் ஆயிரத்து எட்டு—ஓராயிரத்தெட்டாகிய, உயர் குலம்—உயர்ந்த குலங்கள், இங்கு—இவ்வுலகில், இலகாநின்ற என்கின்றூர்—விளங்கா நின்றன என்கிறூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

தலைவி, திருவொற்றியூரரே உமக்குக் குலம் எது உமக்கு மாலையிடக்கூடாது என்றதற்கு இறைவர் தலைவியை நோக்கி

உனக்கு ஒரு குலம், எமக்கு இவ்வுலகில் ஆயிரத்தெட்டுக் குலமுண்டு என்று விடை கூறினர். குலம் என்பதற்குத் தலைவி சாதியென்று பொருள்கொண்டாள்; இறைவர் கோயில் எனப் பொருள் கொண்டார். சிவஸ்தலம் ஆயிரத்தெட்டு என்பது பிரசித்தம்.

117. மதிலோற்றியினீர் நும்மனையாண் மலையின் குலநும்மைந்தருளோர், புதல்வர்க்கானைப் பெருங்குலமோர் புதல்வர்க்கிசையம்புலிக் குலமா, மெதிராற்றருள்வீர்நுங்குலமிங்கெதுவோவென்றேன்மனைவியருள், ளிதுமற்றொருத்திக்கென்கின்றா ரிதுதான்சேடி என்னேடீ.

(இ-ள்.) மதில் ஒற்றியினீர்—மதில் சூழ்ந்த ஒற்றிநகரையுடையவரே, நும்மனையாள்—உமது மனையுவள், மலையின்குலம்—மலைக் குலம், நும்மைந்தருள்—உமது புதல்வருக்குள்ளே, ஓர் புதல்வருக்கு—ஒரு புதல்வனுக்கு, ஆனைபெருங்குலம்—பெரிய யானைக் குலம், ஓர் புதல்வர்க்கு—ஒரு புதல்வனுக்கு, இசை—கீர்த்தியையுடைய, அம்புலிகுலம் ஆம்—அழகிய புலிக்குலமாகும், எதிர் அற்று அருள்வீர்—நிகரற அருள்செய்பவரே, நும்குலம் இங்கு எதுவோ என்றேன்—உமது குலம் இவ்விடத்து எதுவோ என்றேன், (அதற்கு இவர்) மனைவியருள்—எமது மனைவியர்க்குள்ளே, மற்று ஒருத்திக்கு—மற்றொரு மனைவிக்கு, இது என்கின்றார்—நீ சொன்ன இதுதான் என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

பார்வதி மலையரையன் புதல்வியாதலால் நும்மனையாள் மலையின் குலம் என்றும், விநாயகர்க்கு யானை முகமாதலால் உம் மைந்தருளோர் புதல்வர்க்கானைப்பெருங்குலம் என்றும், முருகர் உக்கிரகுமாரபாண்டியனாய் அவதரித்தது சந்திரகுலமாதலால் ஓர் புதல்வர்க்கிசை யம்புலிக்குலம் என்றும் தலைவி கூறினள்; அம்புலி-சந்திரன், அழகிய புலி. நுங்குலமிங்கெதுவோ வென்றதற்கு இறைவர், உமது குலம் எதுகுலமோ வென்று வினவினதாகக் கொண்டு ஆம் எம்மனைவி மற்றொருத்திக்குச் சந்திரகுலமே யென்று விடை கூறினர். எது குலத்தில் அவதரித்த கண்ணனும் ஓர் மனைவியென்றார்.

118. தேமாம்பொழில்சூழொற்றியுளீர் திகழுந்தகரக்காற்குலத்தைப் பூமா நிலத்தில் விழைந்துற்றீர் புதுமை யிஃதும் புகழென்றே னுமாகுலத்திலரைக்குலத்துள் ளணைந்தேபுறமற்றரைக்குலங்கொண் டேமாந் தனைநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) தேமாம் பொழில்சூழ்—தேமா மரச் சோலைசூழ்ந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, திகழும்—விளங்குகின்ற, தகரக்கால் குலத்தை—தகரக்காற் குலத்தை, பூமாநிலத்தில்—அழகிய பெரிய வுலகத்தில், விழைந்து உற்றீர்—விரும்பியடைந்தீர், புதுமை—புதுமையாயிருக்கிறது, இஃதும் புகழ் என்றேன்—இதுவும் உமக்குப் புகழாமென்றேன், (அதற்கு இவர்) ஆமா குலத்தில்—ஆமா குலத்திலே, அரைக்குலத்துள் அணைந்து—அரைக்குலத்துள்ளே சேர்ந்து, புறம்—வெளியில், மற்ற அரைக்குலம் கொண்டு—மற்ற அரைக்குலத்தைக் கொண்டு, நீ ஏமாந்தனை என்கின்றார்—நீ ஏமாந்தா யென்கிறார், இதுதான் சேடியென்னேடீ. எ-று.

தேமா-தித்திப்பு மாமரம். தகர்-ஆடு. தகரக்கால் என்பதில் அ சாரியை. தகரக்கால்-ஆட்டுக்கால். குலம்-கோயில். கோயில்-சிதம்பரம், சிதம்பரத்தில் ஆடுகிற காலைவிரும்பி யெடுத்தீர் என்பது. இது தலைவி சொல்லியது. அதற்குத் தலைவர் சொல்லுகிறார், ஆமா குலத்துள் அணைந்து-ஆம் ஆகுலத்தை உள்ளே வைத்துக்கொண்டு. ஆகுலம்-துன்பம். அரைக்குலம்-அரைச்சாதி. மாகுலம்-பெரியவீடு. வீட்டிலிருந்துகொண்டு ஏமாந்தாய், ஏமாந்தனை-இன்பங்கொண்டிருக்கிறாய். நீ காற்குலங்கொண்டனை யென்ற தலைவிக்கு விடையாகத் தலைவர், நீ உள்ளே அரைக்குலத்தையும் புறத்தே யரைக்குலத்தையுங்கொண்டு ஏமாந்தனை யென்றார்.

119. அனஞ்சூ ழொற்றிப் பதியுடையீ ரகில மறிய மன்றகத்தே
மனஞ்சூழ் தகரக் கால்கொண்டீர் வனப்பா மென்றே னுலகறியத்
தனஞ்சூ ழகத்தே யணங்கேநீ தானுந் தகரத் தலைகொண்டாய்
இனஞ்சூ ழழகா மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) அன்னம் சூழ்—அன்னங்கள் சஞ்சரிக்கிற வயல்கள் சூழ்ந்த, ஒற்றிப்பதி உடையீர்—திருவொற்றித் தலத்தையுடையவரே, அகிலம் அறிய—உலகறியும்படி, மன்று அகத்தே—மன்றிணிடத்தே, மனம்சூழ்—மனம்விரும்புகிற, தகரக்கால் கொண்டீர்—தகரக்காலைக் கொண்டீர், வனப்பு ஆம் என்றேன்—இது அழகாமென்று சொன்னேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) அணங்கே—பெண்ணே, உலகு அறிய—உலகறியும்படி, தனம்சூழ் அகத்தே நீ தானும்—தனம்பொருந்திய அகத்தையுடைய நீயும், தகரத்தலைகொண்டாய்—தகரத்தலையைக்கொண்டாய், இனம்சூழ்

அழகு ஆம் என்கின்றூர்—மிக்க அழகா மென்கிறூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

அன்னம் சூழ்தற்கிடமாகிய வயல் வருவிக்கப்பட்டது. அன்னம்-சோறளித்தலாகிய தயாவிருத்தி யெனினுமாம். மன்று அகத்தே-பொற்சபையில், மன்று-சபை, அம்பலம் ; தகரக்கால் கொண்டீர்-ஆட்டுக்காலைக் கொண்டீர். நடனஞ் செய்யும் பாதத்தைக் கொண்டீர், இது தலைவி சொல்லியது, இதற்கு விடையாக இறைவர், நீதானுந் தகரத்தலைகொண்டாய்-நீயும் தகரத்தலையைக் கொண்டனை, மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடையாய் என்று விடை கூறினர். தனஞ்சூழ் அகத்தே யணங்கே-செல்வமிகுத்த வீட்டுப் பெண்ணே, தனங்கள் நெருங்கிய மார்பையுடைய பெண்ணே. தகரக்கால் கொண்டாயென்ற தலைவிக்கு விடை தகரத்தலை கொண்டாய் என்பது, தகரம்-ஆடு, மயிர்ச்சாந்து.

120. பங்கே ருகப்பூம்பணையொற்றிப் பதியீர் நடுவம்பரமென்னும்
அங்கே யாட்டுக் காலெடுத்தீ ரழகென் றேனவ் வம்பரமேல்
இங்கே யாட்டுத் தோலெடுத்தா யாமொன் றிரண்டு நீ யென்ருல்
லெங்கே நின்சொல் லென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) பங்கேருகப்பூ—தாமரைமலர்கள் மலர்கின்ற, பணை—வயல்கள்சூழ்ந்த, ஒற்றிப்பதியீர்—திருவொற்றிப் பதியையுடையவரே, நடு அம்பரம் என்னும் அங்கே—நடுவம்பரமென்று சொல்லப்பட்ட அவ்விடத்தே—ஆட்டுக்கால் எடுத்தீர்—ஆட்டுக்காலையெடுத்தீர், அழகு என்றேன்—இது அழகாயிருக்கின்றதென்றேன், (அதற்கு இவர்) அ அம்பரம்மேல் இங்கே—அந்த அம்பரத்தின் மேலாகிய இவ்விடத்தே, ஆட்டுத்தோல் எடுத்தாய்—ஆட்டுத் தோலையெடுத்தனை, யாம் ஒன்று—யாம் ஒன்று, நீ இரண்டு—நீ இரண்டு, என்ருல்—என்னுமிடத்து, நின் சொல் எங்கே—உன் வார்த்தை யெங்கேநிற்கும், என்கின்ரூர்—என்று சொல்லுகின்ரூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

பங்கேருகம்-தாமரை, இது வடசொல். சேற்றிலுண்டாவது என்பது பொருள். பண்ணை-வயல், இது இடைக்குறையாய் பணை யென வந்ததெனினுமாம். நடு அம்பரம்-சிதம்பரம், விராட்புருடனுக்கு இதயஸ்தாநமாதலால் சிதம்பரம் நடுவம்பரம் எனப்பட்டது. ஆட்டுக்கால்-ஆடுகிறகால், நடநபாதம். ஆட்டுத்தோல்—

அசைதலையுடைய யானைக்கொம்பு. தோல்-யானை, அது முதலாகு பெயராய்க் கொம்பையுணர்த்திற்று. யாம் ஒன்று-யாம் எடுத்தது ஆட்டுக்காலொன்று. நீ இரண்டு-நீ யெடுத்தது ஆட்டுத்தோலிரண்டு. யானைக்கொம்பு என்றது-யானைக்கொம்புபோன்ற தனத்தை. அம்பரமேல்-ஆகாயத்தின்மேல், ஆகாயம்-இடை.

121. மாணப் புகழ்சே ரொற்றியுளீர் மன்றூர் தகர வித்தைதனைக் காணற்கினிநான்செயலென்னேகருதியுரைத்தல்வேண்டுமென்றேன், வேணச்சுறுமெல்லியலேயாம் விளம்பு மொழியவ் வித்தையுனக் கேணப் புகலு மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) மாண—மிகுதியாக, புகழ்சேர்—புகழ் சேர்ந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, மன்று ஆர்—அம்பலத்திற் பொருந்திய, தகரவித்தை தன்னை—தகர்வித்தையை, காணற்கு—காண்பதற்கு, இனி—இனிமேல், நான் செயல் என்னே—நான் செய்வது யாதோ, கருதி—ஆலோசித்து, உரைத்தல் வேண்டும் என்றேன்—சொல்லவேண்டுமென்றேன், (அதற்கு இவர்) வேள் நச்சுறும்—மன்மதனும் விரும்புகிற, மெல்லியலே—பெண்ணே, யாம் விளம்பும் மொழி—யாம் சொல்லிய மொழிகளே, அவ் வித்தை—அந்த வித்தையை, உனக்கு ஏணப்புகலும் என்கின்றார்—உனக்கு உறுதியுண்டாகச் சொல்லும் என்கிறார், இதுதான் சேடியென்னேடீ. எ-று.

மாண்-மிகுதி, பெருமை, தகரவித்தை-தகராலயத்தின் பெருமை, யாம் விளம்பும் மொழியென்றது வேதம் உபநிஷத்து என்பவை. எண்-உறுதி, பெருமை; தகரவித்தையைச் சொல்ல வேண்டுமென்ற தலைவியை நோக்கி இறைவர் தகரவித்தையின் பெருமையை எம்மால் சொல்லப்பட்ட வேதோபநிஷத்துக்களே உமக்குச் சொல்லுமென்றார்.

122. நல்லாரொற்றி யுடையீர்யா னடக்கோவெறும்பூவணையணைய வல்லா லவனும் முடன்வருகோ வணையா தவலத் துயர்துய்க்கோ செல்லாவென்சொன்னடவாதோ திருக்கூத்தெதுவோவெனவிடைக, ளெல்லா நடவா தென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) நல்லார்—நல்லோர் வாழ்கின்ற, ஒற்றி உடையீர்—திருவொற்றியூரை யுடையவரே, வெறும்பூ அணை அணைய—

வெறுமையாகிய புஷ்ப சயநத்தைப் பொருந்துதற்கு, யான் நடக்கோ—நான் போகட்டுமா, அல்லால்—அன்றி, அவண்—அவ் விடத்திற்கு, நும்முடன் வருகோ—உம்முடன் வரட்டுமா, அணையாது—வராமல், அவலத்துயர் துய்க்கோ—அவலமாகிய துன்பத்தை அநுபவிக்கட்டுமா, செல்லா என் சொல் நடவாதோ—செல்லாத என் சொல் செல்லாதோ, திருக்கூத்து எதுவோ என—தேவரீர் திருக்கூத்து யாதோ வென்று நான் கேட்க, விடைகள் எல்லாம் நடவாது என்கின்றார்—விடைகள் யாவும் நடவாதென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

வெறும்பூவணை-தேவரீரில்லாத வெறும்புஷ்ப சயநம். அவலம்-அழிவு, அணையாது-தேவரீரை யணையப்பெறாமல் ; நடவாது-செல்லாது, நடந் வாது ; விடைகள்-மறுமொழிகள், வெறும் பூவணை யணைய யான் நடக்கோ என்பது முதலாகிய தலைவி கேள்விகளுக்கு இறைவர் விடைகளெல்லாம் நடவாது என ஒரு மறு மொழி கூறி முடித்தார். கேள்விகளுக்கெல்லாம் இறைவர் கூறிய மறுமொழியில் விடைகள் அடங்கியிருக்கின்றன, உய்த்துணர்ந்து கொள்க.

123. ஆட்டுத் தலைவர் நீரொற்றி யழகீ ரதனாற் சிறுவிதிக்கோ
ராட்டுத் தலைதந் தீரென்றே னன்றா லறவோ ரறம்புகல
வாட்டுத் தலைமுன் கொண்டதனா லஃதே பின்ன ரளித்தாமென்
றீட்டுத் தரமீந் தருள்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஆட்டுத் தலைவர் நீர்—ஆட்டுத்தலைவர் தேவரீர், ஒற்றி அழகீர்—திருவொற்றியூரழகரே, அதனால்—ஆதலால், சிறு விதிக்கு—தக்கனுக்கு, ஓர் ஆட்டுத்தலை தந்தீர் என்றேன்—ஆட்டுத் தலையைக் கொடுத்தீர் என்றேன், (அதற்கு இவர்) அன்று—அக் காலத்தில், ஆல்—ஆலடியில், அறவோர்—ததீசி முனிவர், அறம் புகல—தருமத்தை உபதேசிக்க, (கேட்டு) ஆட்டுத்தலை முன் கொண்டதனால்—ஆட்டின் தலையை முன்னே கொண்டதனால், அஃதே—அந்த ஆட்டுத்தலையையே, பின்னர்—பின்னும், அளித் தாம் என்று—(சிறுவிதிக்கு) கொடுத்தோமென்று, ஈட்டு உத்தரம் ஈந்தருள்கின்றார்—பெருமையாகிய மறுமொழி சொல்லி யருளு கிறார், இதுதான்சேடி என்னேடீ. எ-று.

ஆட்டுத்தலைவர்-ஆடலுக்குத் தலைவர், நடராஜர். ஆட்டுத் தலை-மேஷத்தின் தலை, அறவோர்-துறவறம் பூண்டவர், ஆட்டுத் தலை-ஆட்டுகின்ற தலை, ததீசி முனிவர் தர்மோபதேசம் செய்யக்

கேட்டுத் தலையை யசைத்தான் என்பது கதை. தலைவி இறைவரை நோக்கி, நீர் சிறுவிதிக்கு ஆட்டுத்தலையைக் கொடுத்ததற்குக் காரணம் யாதென்று கேட்க, அதற்கு விடையாக இறைவர் சிறுவிதியானவன் முற்காலத்தில் தனக்கு ததீசிமுனிவர் தர்மோபதேசம் செய்ததைக்கேட்டு ஆட்டுத்தலையைக் கொண்டானுதலால் அதனையே அவனுக்குத் தந்தோம் என்றார்.

124. ஒற்றிப்பெருமானுமைவிழைந்தாரூரில்வியப்பொன்றுண்டிரவிற், கொற்றக்கமலம்விரிந்தொருகீழ்க்குளத்தேகுமுதங்குவிந்ததென்றேன், பொற்றைத்தனத்தீர் நுமைவிழைந்தார்புரத்தேமதியந்தேய்கின்ற, தெற்றைத்தினத்துமென்கின்றாரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஒற்றிப்பெருமான்—திருவொற்றியூரிலிருக்கும் பெருமானே, உம்மை விழைந்தார்—உம்மை விரும்பினவரது, ஊரில்—புரத்தில், வியப்பு ஒன்று உண்டு—ஒரு வியப்புண்டு, (என்னெனின்) இரவில்—இராக்காலத்தில், கொற்றக்கமலம் விரிந்து—வெற்றிக் கமலம் மலர்ந்து, ஒரு கீழ்குளத்தே—ஒரு கீழ்க்குளத்திலுள்ள, குமுதம் குவிந்தது என்றேன்—குமுதம் குவிந்தது என்று சொன்னேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) பொற்றை தனத்தீர்—மலைபோலும் தனத்தை யுடையவரே, நும்மை விழைந்தார் புரத்தே—உம்மை விரும்பினவரது புரத்தில், எற்றைத்தினத்தும்—எந்நாளிலும், மதியம் தேய்கின்றது—மதியம் தேயாநின்றது, என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

விழைதல்-விரும்புதல், அன்புசெய்தல். விழைந்தாரூரில் என்பதை விழைந்த ஆரூரில் எனப் பிரித்து விரும்பின ஆரூரில் என்றுரைக்க. வியப்பு-அதிசயம். கொற்றக்கமலம் விரிந்தது என்றது வெற்றியையுடைய தாமரைமலர்போலும் திருவடி விரிந்ததைக் குறித்தது. அதாவது சுந்தரமூர்த்திநாயனர் பொருட்டுப் பரவையிடத்துத் தூதுசென்றபோது திருவடித்தாமரையை மலர்த்தி நடந்தது. கீழ்க்குளம் என்றது நெற்றியை, அதை யடுத்திருப்பதாகிய குமுதம் குவிந்தது என்க. குமுதம் குவிந்ததாவது செவ்வல்லி மலர்போலும் திருவாய் குவித்துத் தூதுரைத்தது. பொற்றைத்தனம்-மலைபோலப் பருத்த கொங்கை, மலைபோலக் குவிக்கப்பட்ட பொருள். புரத்தே மதியம்-உடலில் மதியம், சரீரத்தினுள்ளிருக்கிற அறிவு. தேய்தல்-குறைதல். மாதர் விருப்பத்தால்

மதி குறைதல் இயற்கையென்பது. மதியம்-இதில் அம் சாரியை, அழகு எனினுமாம்.

125. இடஞ்சே ரொற்றி யுடையீர்நீ ரென்ன சாதி யினரென்றேன்
தடஞ்சேர் முலையாய் நாந்திறலாண் சாதி நீபெண் சாதியென்றார்
விடஞ்சேர்களத்தீர்நும்மொழிதான் வியப்பாமென்றேனயப்பானின்
னிடஞ்சேர் மொழிதா னென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) இடம்சேர் ஒற்றி உடையீர்—இடமகன்ற திருவொற்றியூரை யுடையவரே, நீர்—தேவரீர், என்ன சாதியினர் என்றேன்—என்ன சாதியார் என்று கேட்டேன், (அதற்கு இவர்) தடம் சேர் முலையாய்—மலைபோலுந்தனத்தை யுடையவளே, நாம் திறல் ஆண்சாதி—யாம் வெற்றியுள்ள ஆண்சாதி, நீ பெண் சாதி—நீ பெண்சாதி, என்றார்—என்று சொன்னார், (அதற்குமேல் நான்) விடம்சேர்களத்தீர்—நஞ்சுபொருந்திய கண்டத்தை யுடையவரே, நும்மொழி—நுமதுசொல், வியப்புஆம் என்றேன்—ஆச்சரியமாயிருக்கிற தென்றேன், (அதற்கு இவர்) நயப்பால்—(என்னிடத்து) விருப்பத்தால், நின் இடம்சேர் மொழிதான்—உன்னிடத்திலுண்டாகிற சொல்லே, வியப்பாயிருப்பது என்கின்றார்—ஆச்சரியமாக இருக்கின்றது என்கின்றார். இதுதான் சேடி என்னேடீ. எ-று.

நீர் என்ன சாதியினர் என்று தலைவி கேட்டதற்கு விடையாகத் தலைவர் யாம் ஆண்சாதி யென்றார். அம்மட்டிலமையாது நீ பெண்சாதி யென் றுங் கூறினர். பெண்சாதி யென்பது மனைவி யெனவும் பொருள்படும். விடஞ்சேர் களத்தீர் நும்மொழிதான் வியப்பாம் என்று தலைவி சொன்னசொல் மனத்தில் விஷமும் வாயில் நயமொழியும் உடையீர் என்னும் பொருளை யுட்கொண்டது. நின்னிடஞ்சேர் மொழிதான் நயப்பால் என்று தலைவர் கூறினது உன்மொழி தான் விரும்புதற்குரியபால்போலிருக்கின்றது என்பதை யுட்கொண்டது. இதில் உன்மனம் வஞ்சமனம் என்பதும் அடக்கம். களத்தீர் என்பது கள்ளத்தீர் என்பதின் இடைக்குறையாய்க்கொண்டு கள்ளத்தை யுடையவரே யெனினுமாம். கள்ளம்-வஞ்சனை, கபடம்.

126. உடையாரென்பா ருமையொற்றி யுடையீர் பணந்தானுடையீரோ, நடையாயேற்கின்றீரென்றே னங்காய்நின்போலொருபணத்தைக்,கடையாரெனக்கீழ்வைத்தருமைகாட்டேம்பணிகொள்பணங்கோடி, யிடையாதுடையேமென்கின்றா ரிதுதான்சேடி என்னேடீ.

(இ-ள்.) ஒற்றி உடையீர்—திருவொற்றியூரை யுடையவரே, உம்மை—தேவரீரை, உடையார் என்பார்—உடையவரென்று சொல்லுவார், (உலகத்தார்), பணந்தான் உடையீரோ—(அப்படி) பணத்தைத்தான் உடையீரோ, (அப்படி பணக்காரரானால்) நடையாய் ஏற்கின்றீர் என்றேன்—கால் நடையாய் இரந்து திரிகிறீரே என்று கேட்டேன், (அதற்கு இவர்) நங்காய்—பெண்ணே, நின் போல்—உன்னைப்போல, ஒரு பணத்தை—ஒரு பணத்தை, கடையார் என—கீழ் மக்கள்போல, கீழ்வைத்து—கீழே புதைத்து வைத்து, அருமை காட்டேம்—அருமை காட்ட மாட்டோம், பணிகொள்—பணிகொள்ளுதற்குரிய, பணம் கோடி—கோடி பணத்தை, இடையாது உடையோம் என்கின்றார்—குறையாமல் உடையே மென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

உடையார் எனப்பொதுப்படக் கூறினமையால் பணமுதலிய எல்லாவற்றையு முடையவர். என்பார் என்பதற்கு எழுவாயாகிய உலகத்தார் என்பது வருவிக்கப்பட்டது. பணம்-திரவியம், பாம் பின் படம். பணமுடையார் வாகநாதிகளுடைய ராதலால் நடக்க மாட்டார் என்பது தோன்ற நடையா யேற்கின்றீர் என்றது. நின் போலொருபணத்தை யென்பதில் பணம் திரவியமென்றும் பாம் பின் படம்போலும் நிதம்பமென்றுங் கொள்க. கீழ்மக்கள் பண முடையராயின் அதைத்தாமும் அநுபவியாது பிறர்க்கு மீயாது மண்ணின்கீழ்ப்புதைத்து வைத்தல் இயற்கையன்றோ, அதுபோல நீயும் உன்பணத்தை அரையின்கீழ்ப் புதைத்து வைத்து அருமை காட்டுகின்றாய். அப்படி யாம் செய்யோம், உனக்கு வேண்டு மானால் பணிகொள்-ஆபரணங்களைக்கொள், பணங்கோடி-பணத் தைக்கொள், இவையெல்லாம் எம்மிடத்திற் குறையாதுடையோம் என்றிறைவர் கூறினார். புதைத்தல்-மூடுதல்.

127. என்னாருயிர்க்குப்பெருந்துணையாமெங்கள்பெருமானீரிருக்கு
நன்னா டொற்றி யன்றோதா னவில வேண்டு மென்றுரைத்தேன்
முன்னா ளொற்றி யெனினுமது மொழித லழகோ தாழ்தலுயர்
விந்நா னிலத்துண் டென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) என் ஆர் உயிர்க்கு—என் அரியவுயிருக்கு, பெருந் துணை ஆம்—பெருந்துணையாகிய, எங்கள் பெருமான்—எம்பெரு மானே, நீர் இருக்கும்—தேவரீர் இருக்கிற, நல்நாடு—நல்ல வூர்,

ஒற்றி அன்றோ—ஒற்றியல்லவா, நவிலவேண்டும் என்று உரைத்தேன்—சொல்லவேண்டு மென்று சொன்னேன், (அதற்கு இவர்) முன்நாள்—முற்காலத்தில், ஒற்றி எனினும்—ஒற்றியாயினும், அது மொழிதல் அழகோ—அதைச்சொல்லுதல் (உனக்கு) அழகாமோ, தாழ்தல்—தாழ்தலும், உயர்வு—உயர்தலும், இ—இந்த, நானிலத்து உண்டு என்கின்றார்—உலகத்தில் யாவர்க்கும் இயல்பாயுண்டு என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

உயிரிற்சிறந்தபொருள் வேறொன்றின்மையால் ஆருயிர் எனப்பட்டது "என்னினும்மினியானொருவன்னுளன்" என்ற மேலோர் திருவாக்கின்படியே இறைவன் உயிர்க்குயிராயிருப்பவனாதலால் "என்னாருயிர்க்குப் பெருந்துணையாமெங்கள் பெருமான்" என்று தலைவி கூறினாள். ஒற்றி-ஒற்றியூர், ஒற்றி வைக்கப்பட்டது, அடகுவைக்கப்பட்டது இவ்வுலகில் தாழ்வும் உயர்வும் எல்லார்க்கு மியல்பாயிருப்பதை யறிந்திருந்தும் நீ இவ்வாறு சொல்லுதல் அழகல்லவென்றிறைவர் கூறினார். அழகோ என்பதில் ஒகாரம் எதிர்மறை. நானிலம்-நான்கு நிலம், அவையாவன, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. நிலமைந்தாயிருக்க நானிலம் என்றது பாலைக்கு நிலமின்மையான்.

128. பெருந்தாரணியோர்புகழொற்றிப்பெருமானிவர்தம்முகநோக்
கி, யருந்தா வமுத மனையீரிங் கடுத்த பரிசே தறையுமென்றேன்
வருந்தா திங்கே யருந்தமுத மனையா ளாக வாழ்வினொடு
மிருந்தா யடைந்தே மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) பெரு தாரணியோர்—இந்தப் பெரிய வுலகத்தார், புகழ்—புகழ்கின்ற, ஒற்றிபெருமான்—திருவொற்றிப் பெருமானாகிய, இவர் முகம் நோக்கி—இவரது முகத்தைப்பார்த்து, அருந்தா—உண்ணக் கிடைக்காத, அமுதம் அனையீர்—அமுதம் போல்பவரே, இங்கு அடுத்த பரிசு எது—இங்கே வந்த காரியம் யாது, அறையும் என்றேன்—சொல்லு மென்றேன், (அதற்கு இவர்) வருந்தாது—வருந்தாமல், இங்கே—இவ்விடத்தே, அருந்து அமுதம் அனையாள் ஆக—உண்ணுதற் குரிய அமுதம் போல்பவளாக, வாழ்வினோடும் இருந்தாய்—செல்வப் பெருக்கோடிருந்தாய், (அதனால்) அடைந்தேம் என்கின்றார்—வந்தோம் என்கிறார், இது தான் சேடி யென்னேடீ. எ-று.

அருந்தமுதமனையாளாக என்பதற்கு அருந்துதற்குரிய அமுதம்போல்பவளே நீ யெமக்கு மனைவியாக என்று வேறுபொருள் தோன்றுதல் காண்க. அமுதம் உவமையாகுபெயர்; அண்மைவிளி; வாழ்வு-கருவியாகுபெயர்; வாழ்விற்குக் காரணமாதலால்; அமுதம் சாவாமைக்கேதுவாகிய தேவருணவு. இதன் பூர்வரூபம் அம்ருதம். அருந்தாவமுதம்-நஞ்சாகிய வுணவையுடைய, அனையீர்-அத்தன்மையீர், எனினுமாம். இதனால் நஞ்சுண்டு தேவரைக் காத்ததுபோல என் விரகத்துன்பத்தை நீக்கி என்னைக்காத்தருள வேண்டுமென்னும் பொருளுந் தொனிக்கின்றது.

129. செம்மை வளஞ்சூழொற்றியுளீர் திகழாக்கரித்தோலுடுத்தீரே
யும்மை விழைந்த மடவார்களுடுக்கக் கலையுண் டோவென்றே
னெம்மையறியாயொருகலையோவிரண்டோவனந்தங்கலைமெய்யி
லிம்மையுடையே மென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) செய்மை வளம்சூழ்—செம்மையாகிய வளங்கள் யாவும் நிறைந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலுள்ளவரே, திகழா-விளங்காத, கரித்தோல்உடுத்தீரே-யானைத்தோலையுடுத்தீரே, உம்மை விழைந்த மடவார்கள் உடுக்க—உம்மை விரும்பின மாதர்கள் உடுத்துக்கொள்ள, கலை உண்டோ என்றேன்—கலையுளதோவென்று கேட்டேன், (அதற்கு இவர்) எம்மை அறியாய்—எம்மையறியமாட்டாய், ஒருகலையோ இரண்டோ—ஒருகலையோ இரண்டு கலையோ, இம்மை—இம்மையில், மெய்யில்—மெய்யாகவே, அநந்தம் கலை உடையேம் என்கின்றார்—அநந்தமாகிய கலைகளையுடையோம் என்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

செம்மை-மேன்மை, வளம்-நீர்வளம் நிலவளம் முதலிய வளங்கள், அன்றி மிக்க செல்வப்பெருக்கு எனினுமாம், கரித்தோல்-யானைத்தோல். கரித்துணி. நீரே கரித்தோலுடுத்தீரே உம்மை விரும்பின மாதருடுக்க ஆடையுண்டோவென்ற தலைவிக்கு மறுமொழியாக இறைவர் எமக்கு ஒன்றிரண்டு கலைகளோ வுள்ளன, அநந்தம் கலைகளுண்டென்றார். கலையென்பதற்குத் தலைவி கொண்டபொருள் ஆடை, இறைவர் கொண்ட பொருள் அமிசம். அநந்தம்-முடிவில்லன. ஆயிரத்தெட்டு என்றலும் பொருந்தும். கலை-பிரகாசம், சாஸ்திரம் எனினுமமையும்.

130. கற்றைச் சடையீர் திருவொற்றிக் காவலுடையீ ரீங்கடைந்தீ
ரிற்றைப் பகலே நன்றென்றே னிற்றை யிரவே நன்றெமக்குப்
பொற்றைத் தனத்தாய் கையமுதம் பொழியா தலர்வாய்ப்புத்தமுத
மிற்றைக் களித்தா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) கற்றை சடையீர்—கற்றையாகிய சடையையுடைய வரே, திருவொற்றி காவல் உடையீர்—திருவொற்றிக்காவலையுடை யவரே, ஈங்கு அடைந்தீர்—இவ்விடத்திற்கு வந்தீர், இற்றைப் பகலே நன்று என்றேன்—இன்றைப்பகலே நன்மையாம் என் றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) பொற்றைத்தனத்தாய்—மலைபோலுந் தனமுடையவளே, எமக்கு இற்றை இரவே நன்று—இன்றை இரவே நன்மையாகும், (ஏனெனின்) இற்றைக்கு—இன் றைக்கு, கை அமுதம் பொழியாது—கை யமுதத்தைச் சொரியா மல், அலர் வாய்—செவ்வல்லிமலரிலுண்டாகிய, புது அமுதம்—புதிய அமிர்தத்தை, அளித்தாய்—தந்தாயாதலால், என்கின்றார்—என்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கற்றைச்சடை—சடைக்கற்றை யெனினுமாம். காவல்-காத் தற்றொழில் பகல்-பகற்காலம், இரவு-இராக்காலம், பொற்றை-மலை, தனம்-பொருள், கொங்கை. கையமுதம்-கையாற்பெய்யுஞ்சோறு, அலர் வாய்புத்தமுதம்-விரிந்த செவ்வல்லிமலர்போலும் வாயிலுண் டாகிய அதராமிர்தம், மலரிலுள்ள புதிய அமிர்தம், வாயமுதம்-மொழித்தேன் எனினுமாம், நீ வாய்மலர்ந்து பேசின இந்த இராக் காலமே யெமக்கு நன்றென்றபடி ; கையமுதம் பொழியாது வா யமுதம் அளித்தாய் என்பதற்கு கைக்கின்ற நஞ்சாகிய அமுத முண்ட எமது வாய்க் கசப்பொழியும்படி தித்திக்கின்ற உன் வாயமுதங் கொடுத்தாய் என்று மோர்பொருள் தோன்றுதல் காண்க.

131. கற்றீரொற்றீர்முன்பொருவான் காட்டிற் கவர்ந்தோர்நாட்டில் வளை, விற்றீரென்றன்வளைகொண்டீர்விற்கத்துணிந்தீரோவென்றே ன், மற்றீர்ங்குழலாய்நீயெம்மோர் மனையின்வளையைக்கவர்ந்துகளத் திற்றீ தணிந்தா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) கற்றீர்—எல்லாக்கலைகளையும் கற்றவரே, ஒற்றீர்—திருவொற்றியூரரே, முன்பு—முற்காலத்தில், ஒருவான்காட்டில்—ஒரு பெரிய காட்டில், வளை கவர்ந்து—வளையலைத்திருடிவந்து, ஓர் நாட்டில்—ஒரு தேசத்தில், விற்றீர்—விற்று விட்டீர், (இப் பொழுது) என்றன் வளைகொண்டீர்—என் வளையையும் கவர்ந்து கொண்டீர், (இதனையும்) விற்கத் துணிந்தீரோ என்றேன்—விற் கத்துணிந்தீரோ என்று கேட்டேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) ஈர்ங்குழலாய்—குளிர்ச்சியுடைய கூந்தலையுடையவளே

நீ—நீ, எம்மனையின் வளையை கவர்ந்து—எமது மனையாள் வளையைத் திருடி, களத்தில் அணிந்தாய்—கழுத்தி லணிந்து கொண்டாய், தீது—(இது) தீமையாம், என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான்சேடி யென்னேடீ. எ-று.

முன்பொருவான் காட்டிற் கவர்ந்தது பூர்வகாலத்தில் தாருகா வனத்திருடியர் மனைவியர் கைவளையைக் கவர்ந்தது. நாட்டில் வளைவிற்றது பாண்டிநாட்டு மதுரைப்பதியில் வளையல் விற்றது. முன்பு என்றதனால் இப்பொழுது என்பது வருவிக்கப்பட்டது. என்றன் வளையல்கொண்டீர் என்றது தலைவி கைவளையல் கழன்று விழச்செய்தது. மயிர்ச்சாந்துபூசிக் குளிர்ந்திருத்தலால் ஈர்ங்குழலாய் என்றார். எம்மோர் மனையின் வளையைக் கவர்ந்து களத்திற் றீதணிந்தாய் என்றது, எமது மனைவியருளோர் மனைவி திருமால், அவர் கைவளை பாஞ்சஜந்யமென்னும் சங்கு; அதனழகைக்கவர்ந்து உன் கழுத்தி லமைத்திருக்கிறாய், களத்தில்-கள்ளத்தில் என்பதனிடைக்குறை; கள்ளம்-திருட்டுத்தனம்; கைவளையைக் கவர்ந்து கழுத்திலணிந்தாய், உன் அறியாமை யிருந்தவாறென் என்றாராயிற்று.

132. உடுக்கும்புகழாரொற்றியுளா ருடைதா வென்றார்திகையெட்டு
முடுக்கும்பெரியீரெதுகண்டோ வுரைத்தீ ரென்றேன்றிகைமுழுது
முடுக்கும் பெரிய வரைச்சிறிய வொருமுன் றானை யான்மூடி
யெடுக்குந் திறங்கண் டென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) உடுக்கும் புகழார்—தம்மைச்சூழ்ந்த புகழையுடையவர், ஒற்றி உள்ளார்—திருவொற்றியூரி லெழுந்தருளியிருப்பவர், (அவர் வந்து) உடைதா என்றார்—உடைதருகவென்றார், (அதற்கு நான் அவரை நோக்கி) திகை எட்டும்—எட்டுத் திக்குகளையும், உடுக்கும் பெரியீர்—உடுக்கின்ற பெரியவரே, எது கண்டோ உரைத்தீர் என்றேன்—எதைப்பார்த்துச் சொன்னீர் என்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) திகை முழுதும் உடுக்கும் பெரியவரை—திக்குகளெல்லாவற்றையும் உடுக்கின்ற பெரியவரை, சிறிய—சிறியதாகிய, ஒரு முன்றானையால் மூடி—ஒரு முன்றானையைக்கொண்டு மறைத்து, எடுக்கும் திறம் கண்டு என்கின்றார்—எடுக்கும் திறத்தை நோக்கியே என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

உடுக்கும் புகழார்-(திகம்பராராதலால்) புகழையே ஆடையாக வுடுத்தவர், எனினுமாம். ஒற்றியுளார் ஒற்றியிருப்பவர், விலகி யிருப்பவர் என்றலும் பொருந்தும், உடை-உடுக்கை-ஆடை, திசை முழுதும் உடுக்கும் பெரியவரை-திசை முழுதும் ஆடையாக வுடுத்த பெரியோரை, (எம்மை) முழுதும் தேமல படரப்பெற்ற பெரிய தனங்களை, சிறியவொரு முன்றானையால் மூடி யெடுத்தலாவது சிறியவொரு முன்றானையைக் கொண்டு மறைத்தெடுத்தல் ; திசை முழுதும் உடுக்கும் பெரியவரை-எல்லாத்திக்குகளையு மறைக்கின்ற பெரிய மலைகளை ; திசை முழுது முடுக்கும் பெரியவரைச் சிறிய வொரு முன்றானையால் மூடவல்லையாதலால் திசைமுழுதுமுடுத்த எமக்கும் உடைதரல் வேண்டுமென்றா ரிறைவர்.

133. காவா யொற்றிப் பதியுடையீர் கல்லா னைக்குக் கரும்பன்று
தேவாய் மதுரை யிடத்தளித்த சித்த ரலவோ நீரென்றேன்
பாவா யிருகல் லானைக்குப் பரிவிற் கரும்பிங் கிரண்டொருநீ
யீவா யிதுசித் தென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) காவாய்—சோலைகள் சூழ்ந்த, ஒற்றிப்பதி உடையீர்—திருவொற்றித் தலத்தையுடையவரே, தேவாய் மதுரை இடத்து—தெய்வத்தன்மையமைந்த தென்மதுரையில, அன்று—அக்காலத்தில், கல் ஆனைக்கு கரும்பு அளித்த—கல்லானைக்குக் கரும்பைத்தந்த, சித்தர் நீர் அலலவோ என்றேன்—சித்தர்நீரன்றோ வென்றேன், (அதற்கு இவர்) பாவாய்—பெண்ணே, ஒரு நீ—ஒப்பற்ற நீ, இங்கு—இவ்விடத்தில், பரிவின்—அனபோடு, இரு கல்லானைக்கு—இரண்டு கல்லானைகளுக்கு, இரண்டு கரும்பு ஈவாய்—இரண்டு கரும்புகளைக் கொடுக்கிறாய், இது சித்து என்கின்றார்—இதுதான் சித்து என்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கா-சோலை, கால்வாயின் சிதைவாகிய காவாய் எனக்கொண்டு நீர்வடங் கூறினதெனினுமாம். "கல்லானைக்குக் கரும்பன்று தேவாய் மதுரையிடத்தளித்த சித்தர்" என்றது தென்மதுரைக் கற்களிறுக்கிக்களித்த சித்தரை, தே-அழகு எனினுமமையும். பாவாய்-பிரதிமைபோல்பவளே, பாவை-உவமையாகுபெயர். இரு கல்லானை-இரண்டு மலைபோன்ற யானை. கல்-மலை, இது தனங்களைக் குறித்தது, கல்-மாணிக்கம், வயிரம் முதலிய ரத்நங்களையு முணர்த்தலால் ரத்நாபரணங்களை யணிந்த தனமெனக்கோடலு

மாம் யானை தனத்துக்காயினது உவமையாகுபெயர், யானை முதலாகுபெயராய்த் தன் சினையாகிய கொம்பையுணர்த்திற்றென்றலுமாம் ; அக்கொம்பும் தனத்துக்குவமையாதலால், இரண்டு கரும்பு என்றது இருதோள்களை. தலைவி யிறைவரைக்கண்டு தன்னிரு கையாலுந் தனங்களை மறைத்தாளென்பது கருத்து நாம் ஒரு கல்லானைக்கு ஒரு கரும்பளித்தோம் ; நீ இரு கல்லானைக்கு இருகரும் பளித்தாயாதலால், என் சித்தினும் உன் சித்துப் பெரிதாமென்றதாயிற்று.

134. ஊட்டுந்திருவாழொற்றியுளீ ருயிரையுடலாஞ்செப்பிடைவைத்
தாட்டுந் திறத்திர் நீரொன்றே னணங்கே யிருசெப் பிடையாட்டுந்
தீட்டும் புகழன் றியுமுலகைச் சிறிதோர் செப்பி லாட்டுகின்றா
யீட்டுந் திறத்தா யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஊட்டும்—எல்லாவின்பங்களையும் நுகரப்பண்ணுகிற, திருவாழ்—திருமகள் வாழ்கின்ற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, உயிரை—உயிர்ப்பொருளை, உடல் ஆம்—உடம்பாகிய, செப்பிடை வைத்து—செப்பில் வைத்து, ஆட்டும்திறத்தீர்—ஆட்டுகிற வல்லமையுடையீர், நீர் என்றேன்—நீரென்று சொன்னேன், (அதற்கு இவர்) அணங்கே —பெண்ணே, உலகை—உலகத்தை, இரு செப்பிடை ஆட்டும்—இரண்டு செப்பில் வைத்தாட்டுகிற, தீட்டும் புகழ் அன்றியும்—எழுதிவைத்தற்குரிய புகழே யன்றியும், சிறிது ஓர் செப்பில் ஆட்டுகின்றாய்—சிறிதாகிய ஒரு செப்பில் வைத்தும் ஆட்டுகின்றாய், (ஆதலால் நீயே) ஈட்டும் திறத்தாய்—சேர்க்கப்பட்ட வல்லமையுடையவளா யிருக்கிறாய், என்கின்றார்—என்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

திருவாழ் என்பதற்குச் செல்வம் நிலைபெற்றிருக்கிற என்றுரைப்பினுமாம். தலைவி இறைவரை நோக்கி உயிராகிய பொருளை உடம்பாகிய செப்பிற்பொதிந்துவைத்தாட்டாநின்றாய் என்றதற்கு இறைவர், பெண்ணே நீ யிரண்டு செப்பில் உலகமுழுதுமடக்கி யாட்டுதலேயன்றி ஒரு சிறிய செப்பிலுமடக்கி யாட்டுகின்றனையாதலால் என்னினும் நீ சமர்த்தை யென்றார். இருசெப்பு-இருசிமிழ் போன்ற இரண்டு தனங்கள், சிறிதோர்செப்பு-சிறிதாகிய ஒரு சொல், செப்பு-முதனிலைத்தொழிலாகுபெயர், நீ யிருசெப்பா

லும் ஒரு செப்பாலும் உலகையாட்டுகின்ருயென்று ரிறைவர் என்க.

135. கந்தவனஞ்சூழொற்றியுளீர்கண் மூன்றுடையீர்வியப்பென்றே
வந்தவெமைத்தான்பிரிபோதுமற்றையவரைக்காண்போதுஞ் [ன்
சந்த மிருங்கண் ணிருமூன்றுந் தருநான் கொன்றுந் தானடைந்தா
யிந்த வியப்பென் னென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) கந்தம்—மணம்பொருந்திய, வனம்சூழ்—பூஞ்சோலைகள்சூழ்ந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, கண் மூன்று உடையீர்—மூன்று கண்களையுடையவரே, வியப்பு என்றேன்—இது வியப்பாமென்றேன், (அதற்கு இவர்) வந்த எம்மை பிரிபோதும்—இந்த வந்த நம்மைப் பிரிகிறகாலத்திலும், மற்றையவரைக்காண்போதும்—மற்றவர்களைக் காணும் காலத்திலும், சந்தம் மிகும்—அழகுமிகுந்த, கண் இருமூன்றும்—ஆறுகண்ணும், தரும்—தருகின்ற, நான்கு ஒன்றும்—ஐந்தும், அடைந்தாய்—நீயடைந்தாய், இந்த வியப்பு என் என்கின்ரூர்—இந்த வியப்பு யாது என்கிரூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

கந்தம் என்னும் விசேடணத்தால் வனம் பூஞ்சோலையையுணர்த்திற்று. கந்தவனம்-சந்தனச்சோலை யெனினுமாம். எம்மைப் பிரியும்போது கண்ணிரு மூன்று அடைந்தாய் என்பதற்கு எம்மைப்பிரியுங் காலத்தில் பிரிவாற்ருமையால் கண்ணில் ஆறுபோல நீரைப்பெருக்குகிருய் என்றும் மற்றையவரைக்காண்போது நான் கொன்று அடைந்தாய் என்பதற்கு பிறரைக்கண்டகாலத்தில் அஞ்சுகின்ருய் என்றும் உரைத்துக்கொள்க. ஐந்து-அஞ்சு; இது முதனிலைத் தொழிற்பெயராய் அஞ்சுதல் என்ருகும். எம்மைப் பிரியும்போதும் மற்றையவரைக்காண்போதும் கண்ணிருமூன்றும் நான்கொன்று அடைந்தாய் என்றது முறைநிரனிறை; தலைவியிறைவரைநோக்கி நீர் மூன்று கண்களையுடையவராதல் வியப்பாமென்றதற்கு விடையாக இறைவர் யாம் மூன்று கண்ணுடையேமாதல் வியப்பன்று நீ ஆறும் ஐந்துமாகிய கண்களையுடையையாதல் வியப்பென்ருரென்பது கருத்து.

136, ஆழி விடையீர் திருவொற்றி யமர்ந்தீ ரிருவர்க் ககமகிழ்வான்
வீழி யதனிற் படிக்காசு வேண்டி யளித்தீ ராமென்றேன்
வீழி யதனிற் படிக்காசு வேண்டா தளித்தா யளவொன்றை
யேழி லகற்றி யென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஆழிவிடையீர்—சக்கரத்தைத்தாங்கிய இடபத்தையுடையவரே, திருவொற்றி அமர்ந்தீர்—திருவொற்றியூரிலமர்ந்திருப்பவரே, இருவர்க்கு—இருவருக்கு, அகம் மகிழ்வான்—மனமகிழும்பொருட்டு, வீழியதனில்—திருவீழி மிழலையில், படிக்காசு—படிக்காசை, வேண்டி அளித்தீர் ஆம் என்றேன்—விரும்பித்தந்தருளினீராமென்றேன், (அதற்கு இவர்) வீழியதனின்—வீழியினுல், படிக்காசு—படிக்காசை, வேண்டாது—விரும்பாமல், எழில் அளவு ஒன்றை அகற்றி—எழிலே அளவொன்றை நீக்கி, அளித்தாய்—கொடுத்தாய், என்கின்றூர்—என்கிறூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

இறைவரேறுவது மால்விடையாதலால் ‘ஆழிவிடையீர், என்றூர். இருவர் என்றது. அப்பரையும் சம்பந்தரையும்; வீழி-ஓர் திருப்பதி, படிக்காசு-படிச்செலவுக்குக் கொடுக்கும்பணம். மூன்றுமடியிலுள்ள வீழியென்பதனைக் குறுக்கலாக்கி விழியெனக்கொண்டு, (விழியினுல்) படிக்கு ஆசு அளித்தாய் எனப் பிரித்து உலகத்துக்குத் துன்பத்தையுண்டாக்கினுய் எனப்பொருளுரைத்துக்கொள்க. எழில் அளவொன்றையகற்றி யென்றது எழில் என்பதில் ஒரு மாத்திரையளவைக்குறைத்தால் எழில் என்றூகும். எழில்-அழகு-(அழகைநீக்கி) வீழியதனுல் என்பதற்கு வீழிக்கனி போலும் அதரத்தினுல் என்றுரைத்தலுமாம். வீழி உவமையாகு பெயர், வேண்டி வேண்ட வென்பதன் திரிபெனினுமாம்.

137. உற்றவிடத்தேபெருந் துணையாமொற்றிப்பெருமானும்புகழைக்
கற்ற விடத்தே முக்கனியுங் கரும்புமமுதுங் கயவாவோ
மற்ற விடச்சீ ரென்னென்றேன் மற்றை யுபய விடமுமுத
லெற்ற விடமே யென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) உற்ற இடத்தே—(உயிர்களுக்கு ஒரு துன்பம்) நேரிட்ட காலத்தில், பெருந்துணை ஆம்—பெரிய துணையாகிய, ஒற்றிபெருமான்—திருவொற்றியூர்ப் பெருமானே, நம்புகழை—உமது புகழை, கற்ற இடத்தே—கற்றளவிலே, முக்கனியும்—முக்கனிகளும், கரும்பும்—கரும்பும், அமுதும்-அமிர்தமும், கயவாவோ—கசக்கமாட்டாவோ, மற்ற இடம் சீர் என் என்றேன்—மற்றையரிடத்துப் புகழென்ன சிறப்புடைத்தென்றேன், (அதற்கு இவர்) மற்றை உபய இடமும்—மற்றை இரண்டிடத்துமுள்ள

புகழ்கள், முதல் எற்ற—முதலேயொழிக்க, விடமே என்கின்ருர்—விடமேயாமென்கிருர், இதுதான்சேடி யென்னேடீ. எ-று.

முக்கனி-வாழை மா பலா என்பன; கயவாவோ என்பத னீற்றே காரம் எதிர்மறை; மற்றவிடச்சீர் என்பதில் சீர் புகழ்ப் பொருளது, உபயம்-இரண்டு, முக்கனி கரும்பு என்றது முக்கனிச் சாற்றையும் கருப்பஞ்சாற்றையும்.

138. யான்சேய்தவத்தின் பெரும்பயனே யென்னுரமுதேயென்று ணையே,வான்செயாசேதிருவொற்றி வள்ளால்வந்ததென்னென்றே ன்,மான்செய்விழிப்பெண்ணேநீயாண்வடிவானதுகேட்டுள்ளம்விய ந், தேன்கண் டிடவே யென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) யான் செய் தவத்தின் பெரும்பயனே—நான் செய் தவத்தின் பெரும்பேறே, என் ஆர் அமுதே—எனது அரிய அமிர் தமே, என் துணேயே—என்னுயிர்த் துணேயே, வான்செய் அரசே—மேலாகிய அரசனே, திருவொற்றி வள்ளால்—திரு வொற்றியூர் வள்ளலே, வந்தது என் என்றேன்—நீர் வந்ததற்குக் காரணம் யாதென்று கேட்டேன் (அதற்கு இவர்) மான்செய் விழி பெண்ணே—மானின் கண்போலுங் கண்களேயுடைய பெண்ணே, நீ ஆண்வடிவானது கேட்டு—நீ ஆணுருவானதைக் கேட்டு, உள் ளம் வியந்தேன் கண்டிடவே—மனமகிழ்ந்து உன்னேக் காணும் பொருட்டே யாம், என்கின்ருர்—என்கிருர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

பயனே யென்னுது பெரும்பயனே யென்றது முக்கரணங் களுக்கு மெட்டாத பரம்பொருளே எதிர்வந்தது நோக்கி, அமு தென்றது நாவிற்கேயன்றிக் கண் செவி மனம் என்பவற்றிற்கு மினிதாதல் நோக்கியென்க. வான்செய் அரசே என்பதற்கு மேன்மையைச் செய்கின்றதென்றும், சிதாகாயத்தில் அரசுசெய்ப வனே என்றும் உரைத்தலுமாம். மான்செய் என்பதில் செய் உவம வுருபு. ஆண்வடிவுக்கு நம்பியென்று பெயர். நீ யென்னே நம்பி யிருக்கிருயென்று கேள்விப்பட்டு வந்தேனென்றிறைவர் கூறினர். வியந்தேன் முற்றெச்சம்.

139. கருணேக்கடலேயென்னிரண்டுகண்ணேமுக்கட்கரும்பேசெவ் வருணப்பொருப்பேவளரொற்றி வள்ளன் மணியேமகிழ்ந்தணேயத் தருணப் பருவ மிஃதென்றேன் றவிரன் றெனக்காட் டியதுன்ற னிருணச் சளக மென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) கருணை கடலே—அருட்கடலே, என் இரண்டு கண்ணே—என்னிருகண்ணே, முக்கண் கரும்பே—முக்கண்களை யுடைய கரும்பே, செவ்வருணப் பொருப்பே—செந்நிற முள்ள மலையே, வளர் ஒற்றி வள்ளல் மணியே—வளராநின்ற திருவொற்றி யூரிலுள்ள வள்ளன்மையுடைய மாணிக்கமே, மகிழ்ந்து அணைய—(என்னை) மகிழ்ந்து தழுவுதற்கு, தருணப்பருவம் இஃது என்றேன்—தருணமாகிய பருவம் இதுவென்று சொன்னேன், (அதற்கு இவர்) உன்றன்—உனது, இருள் நச்சு—இருளும் விரும்புகின்ற, அளகம்—(உன்) கூந்தலானது, தவிர்—விடு, அன்று—(தருணப்பருவம்) அல்ல, எனக்காட்டியதீ—என்று காட்டிற்று, என்கின்றார்—என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

அளவுபடாக்கருணையென்றதற்கு கருணைக்கடல் என்றும், அறமறங்களைப் பகுத்துணர்த்தலால் இரண்டு கண்ணேயென்றும் சொல்லுந்தோறும் இனித்தலால் கரும்பு என்றும் பிரமவிட்டுணுக்களுக் கறியவொண்ணாது நின்றமையால் செவ்வருணப் பொருப்பே என்றும் கூறினாள். செவ்வருணப்பொருப்பு-சோணசைலம். முக்கண் இறைவர்க்குக்கொள்ளுங்கால் மூன்று கண்கள் என்றும், கரும்புக்குக் கொள்ளுங்கால் மூன்று கணுக்கள் என்றும் பொருள் கொள்க. மணி-சிந்தாமணியெனினுமாம். சிந்தாமணிக்கு வள்ளன்மையாவது வேண்டுவார் வேண்டியாங்குக்கொடுத்தல். தலைவி என்னை யணையத் தருணப்பருவ மிஃதென்றதற்கு விடையாக இறைவர் நீ தருணப்பருவ முடையையல்லை விருத்தப்பருவ முடையையென்று உனது நரைத்த கூந்தலே யெமக்குச் சொல்லா நின்றதென்றார்.

140 காவி களங்கொள்கனியேயென்கண்ணுண்மணியேயணியேயென், னாவித்துணையே திருவொற்றியரசேயடைந்ததென்னென்றேன் பூவிற் பொலியுங் குழலாய்நீ பொன்னினுயர்ந்தா யெனக்கேட்டுன் னீவைக் கருதி யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) காவி களம் கொள் கனியே—கருங்குவளை மலர் போலும் கண்டத்தைக் கொண்ட கனியே, என் கண்ணுள் மணியே—என் கண்ணினுள்ளிருக்கிற மணியே, அணியே—எனக்கு ஆபரணமே, என் ஆவி துணையே—என் உயிர்த்துணையே, திருவொற்றி அரசே—திருவொற்றியூர்க்கரசனே, அடைந்தது என் என்றேன்—நீர் வந்தது எதைக்கருதி யென்று கேட்டேன்,

(அதற்கு இவர்) பூவின் பொலியும் குழலாய்—மலர்களாற் பொலிவடைந்திருக்கிற கூந்தலையுடையவளே, நீ பொன்னின் உயர்ந்தாய் எனக்கேட்டு—நீ பொன்னின் உயர்ந்திருக்கிறாயென்று கேள்விப்பட்டு, உன் ஈவைக்கருதி என்கின்றார்—உன் ஈகையைக்கருதி என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

கருங்கண்டம் என்றதற்குக் காவிக்களம் என்றாள். பூவிற் பொலியுங்குழல்-அழகோடு விளங்குகின்ற கூந்தல் எனினுமாம். பொன்னினுயர்தலாவது-திருமகளழகினும் சிறந்த அழகுடையளாய் விளங்குதல், செல்வத்தாற் சிறந்திருத்தல், ஈவு-கொடை, வரையாது கொடுத்தல், கலவியின்பத்தைக் கொடுத்தல்; ஒற்றியரசே நீர் வந்ததென்னென்று தலைவி கேட்டதற்கு விடையாகத் தலைவர், நீ பொன்னினுயர்ந்தாய் எனக் கேட்டுவந்தேன் நீ பொன் கொடுத்தால், ஒற்றியூரை மீட்டுக்கொண்டு சுகமாக வாழ்வோமென்றார்.

141. கண்ணுமனமுங்களிக்குமெழிற்கண்மூன்றுடையீர்கலையுடையீ
நண்ணுந்திருவா மொற்றியுளீர் நடஞ்செய் வல்லீர்நீரென்றேன் [ர்
வண்ண முடையாய் நின்றனைப்போன்மலர்வாய்நடஞ்செய்வல்லோ
மோ, வெண்ண வியப்பா மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்) நீர்—தேவரீர், கண்ணும்—கண்களும், மனமும்—மனதும், களிக்கும்—மகிழ்தற்கேதுவாகிய, எழில்—அழகையுடைய, கண்மூன்று உடையீர்—மூன்று கண்களையுடையீர், கலை உடையீர்—(சந்திர) கலையுடையீர், நண்ணும்—பொருந்திய, திருவாழ்—திருமகள் வாழ்கின்ற, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியிலுள்ளீர், நடம் செய்வல்லீர்—நடநஞ்செய்வதில் வல்லீர், என்றேன்—என்று சொன்னேன், (அதற்கு இவர்) வண்ணம் உடையாய்—அழகையுடையவளே, நின்றனைப்போல்—உன்னைப்போல, மலர்வாய் நடம் செய்வல்லோமோ—மலர்போலும் வாய்நடநஞ்செய்ய வல்லோமோ, எண்ண—(உன் மலர்வாய் நடத்தை) எண்ணுமிடத்து, வியப்பு ஆம் என்கின்றார்—வியப்புண்டாகின்றதென்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

மலர்வாய்-தாமரை மலர்போலும் வாய், செவ்வல்லிமலர் போலும் வாய், வாய்நடம்-வாய், வம்பு வியப்பு-ஆச்சரியம், கலை-கலைத்தோல் எனினுமாம்; அன்றி வேதாகம முதலிய எல்லாக்

கலைகளையுங் கோடலுமாம், மலர்வாய் நடம்-தாமரை மலரினிடத்து நடனம் என்றலு மொன்று.

142. தாங்கும்விடைமே லழகீரென் றன்னைக்கலந்துந்திருவொற்றி
யோங்குந் தளியி லொளித்தீர்நீ ரொளிப்பில் வல்லீ ராமென்றேன்
வாங்கு நுதலாய் நீயுமெனை மருவிக் கலந்து மலர்த்தளியி
லீங்கின் றொளித்தா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) தாங்கும் விடைமேல் அழகீர்—சுமக்கின்ற இடபத்தின் மேலிருக்கிற அழகரே, என்றன்னை கலந்தும்—என்னைச் சேர்ந்தும், திருவொற்றி—திருவொற்றியூரில், ஓங்கும்—உயர்ந்த, தளியில் ஒளித்தீர்—கோயிலில் ஒளித்தீர், (ஆதலால்) நீர்—தேவரீர், ஒளிப்பில் வல்லீர் ஆம் என்றேன்—ஒளிப்பதில் வல்லீராவீரென்றேன், (அதற்கு இவர்) வாங்கு நுதலாய்—வளைந்த நெற்றியையுடையவளே, நீயும் என்னை மருவிக் கலந்தும்—நீயும் என்னைப் பொருந்திக் கூடியும், மலர்தளியில்—தாமரை மலராகிய கோயிலில், ஈங்கு இன்று ஒளித்தாய் என்கின்றார்—இங்கே யின்று ஒளித்தனை யென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

அழகீர்-முன்னிலைவிளி, ஒளித்தல்-மறைதல், ஒளிப்பு-தொழிற்பெயர், வாங்குநுதல்-வளைந்த புருவம் எனினுமாம். மலர்த்தளியிலொளித்தாய் என்றதனால் திருமகளென்றெண்ணினார்போலும். தளி-கோயில், தலைவி திருவொற்றியோங்குந் தளியிலொளித்தீர் என்றதற்கு விடையாக இறைவர், பெண்ணே யாம் திருவொற்றித் தளியிலொளித்தோம், நீயும் மலர்த்தளியிலொளித்தாயென்றார். மலர்த்தளி-இதயதாமரைமலர்க்கோயில்.

143. அம்மை யடுத்த திருமேனி யழகீ ரொற்றி யணிநகரீ
ரும்மை யடுத்தோர் மிகவாட்ட முறுத லழகோவென் றுரைத்தேன்
நம்மை யடுத்தாய் நமையடுத்தோர் நம்போ லுருவ ரன்றெனிலே
தெம்மை யடுத்த தென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) அம்மை அடுத்த திருமேனி—எமது தாயாகிய உமாதேவிபொருந்திய திருமேனியையுடைய, அழகீர்—அழகரே, ஒற்றி—திருவொற்றி யென்கிற, அணிநகரீர்—அழகிய நகரத்தையுடையவரே, உம்மை அடுத்தோர்—தேவரீரை யடுத்தவர்கள், மிக வாட்டம் உறுதல்—மிகவாட்டத்தை யடைவது, அழகோ என்று

உரைத்தேன்—அழகாமோவென்று சொன்னேன், (அதற்கு இவர்) நம்மை அடுத்தாய்—எம்மை யடுத்தவளே, நமை அடுத்தோர்—எம்மையடுத்தவர்கள், நம்போல் உருவர் அன்று எனில்—எம்போ லுருவினரல்லராயின், எம்மை யடுத்ததேது—எம்மைச் சேர்வது ஏது, என்கின்ருர்—என்கிருர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

அம்மை-லோகமாதாவாகிய உமாதேவி, அழகிற்றலைமைபெற் றவள் எனினுமாம். திருமேனியென்றது திருமேனியிலோர் கூறு கிய இடப்பாகத்தை, மிகவாட்டம் என்பது மிகவும் வருத்தம் என் பது தலைவி பொருள். இதற்கு இறைவர் மிக ஆட்டம் எனப் பொருள்கொண்டு நம்மையடுத்தோரெல்லாரும் எம்மைப்போலவே யாட்டமடைதல்வேண்டும், அப்படியாகாவிடின் எம்மை யடுத்த தற்குப் பயன்யாது, எனப்பொருள்கொண்டார், எம்மைப்போலாட் டங்கொள்ளுதலாவது எம்மைப்போலுருவங்கொள்ளுதல், அதா வது சாரூப பதவியையடைதல்.

144. உண்களுண் மகிழ்வா லளிமிழற்று மொற்றி நகரீ ரொருமூன்று
கண்க ளுடையீ ரென்காதல் கண்டு மிரங்கீ ரென்னென்றேன்
பண்கொண்மொழியாய்நின்காதல் பன்னுண்சுவைசெய்பழம்போலு
மெண்கொண் டிருந்த தென்கின்ரு ரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) உண்—உண்ணப்பட்ட, மகிழ்வால்—(கள்ளின்) களிப்பால், அளி மிழற்றும்—வண்டுகள் ஆரவாரிக்கிற, ஒற்றி நகரீர்—திருவொற்றி நகரையுடையவரே, ஒரு மூன்றுகண்கள் உடையீர்—ஒரு முக்கண்களையுடையவரே, என்காதல் கண்டும்—என் ஆசையைக்கண்டும், இரங்கீர்—இரங்கிலீர், என் என்றேன்—(இதற்குக் காரணம்) யாதென்றேன், (அதற்கு இவர்) பண்கொள் மொழியாய்—பண்களினியல்பைக் கொண்ட இன் சொல்லை யுடையாளே, நின்காதல்—உன் ஆசையானது, பல்நாள்சுவை செய்பழம் போலும்—பல நாளும் இன் சுவையைத்தருகிற பழம்போல, எண் கொண்டு இருந்தது என்கின்ருர்—மதிப்பைக்கொண்டிருந்ததென் கிருர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கள் மகிழ்வு-கள்ளுண்டகளிப்பு. பன்னுள்சுவை செய்பழம் போலும் என்பதற்கு, பலநாளும் சுவைத்து வெறுத்த கனியை நிகர்க்கும் எனவும், பற்கள் கூசுதற்குரிய புளிஞ்சுவையைத்தருகிற

புளியம்பழம்போலும் எனவும் பொருளுரைத்துக்கொள்க. என் காதல்கண்டு மிரங்கீர் என்ற தலைவி வார்த்தைக்கு விடையாக இறைவர் உன்காதல் பலநாளு முண்டு வெறுத்த பழம்போல வெறுப்புடையதென்றும், பற்கள் கூசுதற்குரிய புளியம்பழம் போலப் பற்றற்றதென்றும் கூறினர்.

145. வணங்கேழிலங்குஞ்செஞ்சடையீர் வளஞ்சேரொற்றிமாநகரீர் குணங்கேழ்மிடற்றோர்பாலிருளைக் கொண்டீர்கொள்கையென்னெ ன்றே,னணங்கேயொருபாலன்றிநின்போலைம்பாலிருள்கொண்டிடச் சற்று, மிணங்கேமிணங்கேமென்கின்றா ரிதுதான்சேடி என்னேடீ.

(இ-ள்.) வண்ணம் கேழ் விளங்கும்—அழகும் நிறமும் விளங்குகிற, செஞ்சடையீர்—செஞ்சடையை யுடையவரே, வளம்சேர் ஒற்றிமாநகரீர்—எல்லா வளங்களும் சேர்ந்த திருவொற்றியூரென்கிற பெரிய நகரத்தை யுடையவரே, குணம் கேழ்மிடற்று—நன்னிறமமைந்த கண்டத்தின், ஓர்பால்—ஒரு பக்கத்தில், இருளை கொண்டீர்—இருட்டைக்கொண்டிருக்கிறீர், கொள்கை என் என்றேன்—நுமது கோட்பாடு யாதென்றேன், (அதற்கு இவர்) அணங்கே—பெண்ணே, ஒருபால் அன்றி—ஒருபாலிலன்றி, நின் போல்—உன்னைப்போல, ஐம்பால்—ஐம்பாலிலும், இருள்கொண்டிட—இருட்டைக்கொண்டிருக்க, சற்றும்—சிறிதும், இணங்கேம் இணங்கேம் என்கின்றார்—இணங்கமாட்டோம் இணங்கமாட்டோம் என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

வணங்கேழ் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. குணம்-இங்கு நன்மைமேற்று, ஓர் பால்-ஒரு பக்கம், ஐம்பால்-ஐந்துபகுதியையுடைய மயிர்முடி (கூந்தல்), இருள்கொண்டிடல்-இருண்டிருத்தல், கறுத்திருத்தல்.

146. கரும்பி லினியீ ரென்னிரண்டு கண்க ளனையீர் கறைமிடற்றீர் பெரும்பையணியீர்திருவொற்றிப் பெரியீ ரெதுநும் பெயரென்றே னரும்பண் முலையாய் பிறர்கேட்க வறைந்தா லளிப்பீரெனச்சூழ்வ ரிரும்பொ னிலையே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கரும்பில்—கரும்பினும், இனியீர்—இனியவரே, என் இரண்டு கண்கள் அனையீர்—என்னிரு கண்களை நிகர்த்தவரே, கறைமிடற்றீர்—விஷ கண்டத்தையுடையவரே, பெரும் பை அணி

யீர்—பெரிய பாம்பையுடையவரே, திருவொற்றி பெரியீர்—திருவொற்றியூரிலுள்ள பெரியவரே, நும் பெயர் எது என்றேன்—நும் பெயர் யாதென்றேன், (அதற்கு இவர்) அரும்பு அண் முலையாய்—அரும்புபோலு முலையை யுடையாளே, பிறர்கேட்க—அந்நியர்கேட்கும்படி, அறைந்தால்—சொன்னால், அளிப்பீர் என—தருவீரென்று, சூழ்வர்—வந்து உலகத்தார் சுற்றிக்கொள்வார், இரும் பொன் இல்லையே என்கின்றார்—பெரிய பொன் என்னிடத்திலில்லையே யென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

கரும்பில் என்பதில்-இல் ஐந்தாவதன் உறழ்பொருளது. பெரும் பை யென்பதில்-பை சினையாகுபெயராய்ப் பாம்பை யுணர்த்திற்று; பை-படம். அணி-ஆபரணம், அரும்பு-கோங்கரும்பு, தாமரையரும்புகளை யுணர்த்தும், அண்-உவமையுருபு. அரும்பண் முலையாய் என்பதற்கு-அரும்பினுருவத்தைப் பொருந்திய என்றுரைப்பினுமாம். என் பேர் தியாகன், இதை வெளிப்படச் சொன்னால் உலகத்தார் வந்து சுற்றிக்கொள்வர். நீ மாத்திரம் அறிந்ததாயிருக்கட்டும் என்றாராயிற்று.

147. நிலையைத் தவறார்தொழுமொற்றி நிமலப் பெருமானீர்முன்ன
மலையைச் சிலையாக் கொண்டீர்நும் மாவல் லபமற் புதமென்றேன்
வலையத் தறியாச் சிறுவர்களு மலையைச் சிலையாக் கொள்வர்களீ
திலையற் புதந்தா னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) நிலையை தவறார்—தமது உண்மை நிலையினின்றும் தவறாதவர்கள், தொழும்—வணங்குகின்ற, ஒற்றி—திருவொற்றியூரிலுள்ள, நிமலப்பெருமான்—நின்மலனாகிய பெருமானே, நீர்—தேவரீர், முன்னம்—முற்காலத்தில், மலையை—மேருமலையை, சிலையா—வில்லாக, கொண்டீர்—கைக்கொண்டீர், நும்—நுமது, மாவல்லபம்—பெரிய வல்லமையானது, அற்புதம் என்றேன்—ஆச்சரியமாயிருக்கிறதென்றேன், (அதற்கு இவர்) வலயத்து—பூமண்டலத்தில், அறியா சிறுவர்களும்—அறியாத சிறுபிள்ளைகளும், மலையை சிலையா கொள்வார்கள்—மலையைச் சிலையாகக்கொள்வார்கள், ஈது அற்புதம் இல்லை என்கின்றார்—இதில் ஒரு ஆச்சரியமில்லை யென்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

நிலை-மெய்ஞ்ஞானநிலை. தவறார்-தவறாதவராகிய ஞானியர். தொழுதல்-வழிபடுதல். நிமலன்-மலரஹிதன். அற்புதம்-அத்புதம்

என்னும் வடமொழித்திரிபு. வலயம் என்பது எதுகையின்பம் நோக்கி வலையம் என்றாயிற்று. வலயம் மண்டலம். தலைவி இறைவரை நோக்கி, நீர் முற்காலத்தில் மலையைச் சிலையாக்கொண்டீர் நுமது பேராற்றல் அற்புதமென்றதற்கு விடையாக இறைவர், இவ்வாறு நான் கொண்டது ஒரு அற்புதமன்று; உலகத்திற் சிறுவர்களும் மலையைச் சிலையாகக் கொள்வார்கள் என்றார். மலையைச் சிலையா என்பதற்குத் தலைவிகொண்ட பொருள் மலையை வில்லாக என்பது, இறைவர்கொண்ட பொருள் மலையை மலையாக என்பது.

148. உதையச்சுடரே யனையீர்நல் லொற்றி யுடையீ ரென்னுடைய
விதயத்தமர்ந்தீரென்னெண்ண மறியீரோவென் றேன்
சுதையிற்றிகழ்வாயறிந்தன்றே துறந்துவெளிப்பட் டெதிரடைந்தா
மிதையுற் றறிநீ யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) உதையச்சுடரே அனையீர்—உதயகாலத்துச் சூரியனை நிகர்த்தவரே, நல் ஒற்றி உடையீர்—நன்மையாகிய திருவொற்றியூரை யுடையவரே, என்னுடைய இதயத்து அமர்ந்தீர்—எனது இருதயத்தில் அமர்ந்திருப்பவரே, என் எண்ணம் அறியீரோ என்றேன்—என் எண்ணத்தை அறியமாட்டீரோ என்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) சுதையின் திகழ்வாய்—அமுதம் போல விளங்குகின்றவளே, அறிந்து அன்றே—(உன் எண்ணம்) அறிந்தேயல்லவா, துறந்து வெளிப்பட்டு—துறந்து புறப்பட்டு, எதிர் அடைந்தாம்—உனக்கெதிரே வந்தோம், இதை—இந்தச் செய்தியை, நீ உற்று அறி என்கின்றார்—நீ மனம் பொருந்தி யாராய்ந்தறிவாயாக என்கிறார், இதுதான் சேடிஎன்னேடீ. எ-று.

உதயம் என்பது உதையம் என எதுகையின்பம்நோக்கித் திரிந்து வந்தது. உதையச்சுடர்-பாலசூரியன். சுதையிற் றிகழ்வாய் என்பதற்கு மின்கொடிபோலப் பிரகாசிப்பவளே என்றுரைப்பினுமாம். சுதை-மின்னல். தலைவி என் எண்ணமறியீரோ என்றதற்கு விடையாக இறைவர் உன் எண்ணமறிந்தன்றே எதிரடைந்தாம் இதை உற்றறியென்றார்; எண்ணம் அறியீரோ என்பதற்குத் தலைவிகொண்டபொருள் நினைப்பறியீரோ என்பது, இறைவர் கொண்டபொருள். யாவரும் மதிக்கத்தகுந்த அழகு என்பது. உன் அழகை யறிந்தன்றே யாம் எல்லாவற்றையும் துறந்துவந்து உனக்கெதிர்பட்டோம் என்றாராயிற்று.

149. புரக்குங்குணத்தீர்திருவொற்றிப்புனிதரேநீர்போர்க்களிற்றை
யுரக்குங் கலக்கம் பெறவுரித்தீ ருள்ளத் திரக்க மென்னென்றேன்
கரக்கு மிடையாய் நீகளிற்றின் கன்றைக் கலக்கம் புரிந்தனைநின்
னிரக்க மிதுவோ வென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

புரக்கும் குணத்தீர்—காத்தருள்கின்ற குணத்தையுடைய வரே, திரு ஒற்றி புனிதரே—திருவொற்றியூரிலெழுந்தருளிய பரிசுத்தரே, நீர்—தேவரீர், போர் களிற்றை—போர்த்தொழிலை யுடையயானையை, உரக்கும் கலக்கம்பெற உரித்தீர்—பெருங்கலக்கமடையும்படி உரித்தீர், உள்ளத்து—(உமது) மனத்தில், இரக்கம் என் என்றேன்—இரக்கம் யாதென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) கரக்கும் இடையாய்—ஒளிக்கின்ற இடையையுடையவளே, நீ—நீ, களிற்றின் கன்றை—யானைக்கன்றை, கலக்கம்புரிந்தனை—கலங்கச்செய்கிறாய், நின் இரக்கம் இதுவோ என்கின்றார்—உன் இரக்கம் இதுதானோ என்கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

போர்க்களிறு என்றது கஜாசுரனை. உரத்தலல்-பதல். உரக்குங்கலக்கம்- பெரிய கலக்கம், கலக்கம்-கலங்குதல், (துன்பம்). கரக்குமிடை-நாளுக்குநாள் தனப்பொறையாற்றேய்ந்துமறைகின்ற இடை, (கட்புலனாகாத இடை). தலைவி இறைவரை நோக்கி நீர் போர்க்களிற்றை யிரக்கமில்லாமலுரித்தீரே யென்றதற்கு விடையாக இறைவர், பெண்ணே, நீகளிற்றின்கன்றை கலக்கம்புரிந்தனை யென்றது நீ யானைக்கன்றை நடையால்வென்று துன்பஞ்செய்தனை யென்றபடி, கலக்கம்-துன்பம். இதுவோ என்னும் ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு.

150. பதங்கூ றொற்றிப் பதியீர்நீர் பசுவி லேறும் பரிசதுதான்
விதங்கூறறத்தின்விதிதானோ விலக்கோவிளம்பல்வேண்டுமென்றே
னிதங்கூ றிடுநற் பசுங்கன்றை நீயு மேறி யிடுகின்று
யிதங்கூ றிடுக வென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ—ள்.) பதம்கூறு—சொல்லுருவாயிருக்கிற வேதாகமாதிகளாற் சொல்லப்படுகிற, ஒற்றிபதியீர்—திருவொற்றிப்பதியையுடையவரே, நீர்—தேவரீர், பசுவில் ஏறும் பரிசு—பசுவின்மீதேறும்விதம், விதம்கூறு—பலவகையாய்ச் சொல்லப்படுகிற, அறத்தின்விதி தானோ—தருமநூல் விதியோ, விலக்கோ—விலக்கோ,

விளம்பல்வேண்டும் என்றேன்—சொல்ல வேண்டுமென்றேன், (அதற்கு இவர்) நிதம் கூறிடும்—நாள்தோறும் விற்கப்படுகிற, நல் பசுங்கன்றை—அழகாகிய பசுங்கன்றை, நீயும் ஏறியிடுகின்றாய்—நீயும் ஏறி யிடுகின்றனை, இதம்—(இதிலுள்ள) நன்மையை, கூறி யிடுக என்கின்றார்—சொல்லுகவென்கிறார், இதுதான் சேடி யென் னேடீ. எ-று.

பதம்-சொல். அழகு எனினும் பொருந்துமாதலால் பதங்கூறிடு என்பதற்கு அழகுக்குச் சிறந்ததாகச் சொல்லப்படுகிற எனவும் பொருளுரைக்கலாம். பசுவிலேறும்பரிசதுதான் என்பதில் பசு-இடபம், அதுபகுதிப்பொருள்விகுதி. தான் அசை. விதிவிலக்கு என்பவற்றை விதிநிஷேதம் என்பர் வடநூலார். நிதங்கூறிடு என்ப தில் கூறுதல்-விற்றல். பசுங்கன்று-பசுமையாகிய வளையல். ஏறி யிடுதல்-கையிலேற்றிக்கொள்ளுதல் (கையிலணிந்துகொள்ளுதல்.) இதம்-நன்மை. பசுவிலேறுகிறாய் என்ற தலைவியை நோக்கி இறைவர் நீயும் பசுங்கன்றையேறியிடுகின்றாய என்றார். பசுங்கன்று-பச்சைவளையல் எனினுமாம்.

151. யோக முடையார் புகழொற்றி யூரிற் பரம யோகியராந்
தாக முடையா ரிவர்தமக்குத் தண்ணீர் தாநின் றனையழைத்தேன்
போக முடையாய் புறத்தண்ணீர் புரிந்து விரும்பா மகத்தண்ணீ
ரீக மகிழ்வி னென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) யோகம் உடையார் புகழ்—யோகமார்க்கத்தை யுடையவர் புகழ்கின்ற, ஒற்றியூரில்—திருவொற்றியூரிலுள்ள பரம யோகியர் ஆம்—பரமயோகியராகிய, தாகம் உடையார் இவர் தமக்கு—தாகமுள்ளவராகிய இவருக்கு, தண்ணீர் தா—தண்ணீர் கொடுக்க, நின்றனை அழைத்தேன்—உன்னை யழைத்தேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) போகம் உடையாய்—போகத்தை யுடையவளே, புறத்தண்ணீர்—புறத்தண்ணீரை, புரிந்துவிரும் பாம்—மிகுதியாக விரும்பமாட்டோம், (ஆதலால்) மகிழ்வின்—மனமகிழ்ச்சியோடு, அகத்தண்ணீர் ஈக என்கின்றார்—அகத்தண் ணீரை கொடுக்கக்கடவை யென்கிறார், இதுதான் சேடி யென் னேடீ. எ-று.

யோகம் தியானமெனவும் பொருள்படுமாதலால் யோகமுடை யார் என்பதற்கு தியானத்தையுடையவர் எனினுமாம். பரம

யோகியர்-மேலானயோகியர். ஆதியோகியராகிய சநகாதியர்நால்வர்க்கும் ஆசாரியராதலால் இவர் பரமயோகியர் எனப்பட்டார். தாகம்-நீர்வேட்கை. புறத்தண்ணீர்-புறத்தேயுள்ள குளிர்ந்தநீர், அகத்தண்ணீர்-அகத்தேயுள்ள தண்ணியசாந்தகுணம் (அன்பு). போகமுடையாய் என்பதற்கு பாக்கியமுடையவளே யென்பது பொருள். போகம்-பாம்பின் படத்துக்கும் பேராதலால் பாம்பின் படம்போலும் அல்குலையுடையவளே யெனினுமாம். யாம் விரக தாகங்கொண்டுவந்தோம் எமக்கு உனது போகசுகமாகிய நீரைத் தந்து அந்த தாகத்தைத் தணிக்கவேண்டுமென்றாராயிற்று.

152. வளநீ ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றார் மாதேநா
முளநீர்த் தாகமாற்றுறுநீ ருதவ வேண்டு மென்றார்நான்
குளநீரொன்றேயுளதென்றேன் கொள்ளேமிடைமேற் கொளுமிந்த
விளநீர் தருகீ வென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) வளம்நீர் ஒற்றிவாணர் இவர்—வளமாகிய நீர்சூழ்ந்த ஒற்றிவாணராகிய இவர், வந்தார் நின்றார்—வந்து நின்று, மாதே—பெண்ணே, நாம் உள்ள—யாம் அடைந்துள்ள, நீர்த்தாகம் ஆற்றுறும் நீர்—நீர்த்தாகத்தைத் தணிக்கத்தகுந்தநீரை, உதவவேண்டும் என்றார்—தரல்வேண்டுமென்றார், (அதற்கு) நான்—யான், குளநீர் ஒன்றே உள்ளது என்றேன்—குளநீரொன்றே யுண்டென்று சொன்னேன், (அதற்கு இவர்) கொள்ளேம்—(குளநீரை) ஏற்றுக் கொள்ளமாட்டோம், இடைமேற்கொள்ளும்—இடைமேற்கொண்டிருக்கிற, இந்த இளநீர்—இந்த இளநீர்களை, தருக என்கின்றார்—தரல்வேண்டுமென்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

வளநீர்—நீர்வளம் என முன்பின்னாகமாற்றி நீர்வளமுள்ள எனினுமமையும். வந்தார் நின்றார் முற்றெச்சங்கள். உளநீர்த் தாகம் மனத்தின்குணமாகிய விரகதாகம். மாற்றுறுநீர்-நீக்குதற்குரிய நீர் என்றலுமொன்று. குளநீர்-வெல்லநீர், சர்க்கரைநீர், மேல் இடைகொள்ளுமிந்த இளநீர் எனநிறுத்தி மேலிடத்தைக்கொண்ட இந்த இளநீர் என்றுரைப்பினுமாம். உளநீர்த்தாகம்-உளதாகிய நீர்வேட்கை மனத்தின்கண்ணதாகிய விரகதாகம்; குளநீர்-தடாக நீர், வெல்லம் சர்க்கரை கலந்தநீர், (பாநகம்). அதாம்ருதம், இளநீர்-தெங்கிளங்காய், (தனம்) தாகத்தை மிகுவிக்கிறவெல்லஞ் சர்க்கரைநீர்வேண்டாம் தாகத்தைத் தணித்தற்குரிய இளநீரே வேண்டுமென்றதாயிற்று.

153. மெய்ந்நீரொற்றி வாணரிவர் வெம்மையுளநீர்வேண்டுமென்று
ரந்நீ ரிலைநீர் தண்ணீர்தா னருந்த லாகா தோவென்றேன்
மூந்நீர் தநயை யனையாயும் முதுநீ ருண்டு தலைக்கேறிற்
றிந்நீர் காண்டி யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) மெய்நீர்—மெய்ம்மைக் குணத்தையுடைய, ஒற்றி வாணர் இவர்—திருவொற்றியூரில் வாழ்பவராகிய இவர், வெம்மை உள்ள நீர் வேண்டும் என்றூர்—வெப்பமுள்ள நீர்வேண்டுமென்று கேட்டார், (அதற்கு நான்) அந்நீர் இல்லை—அந்தநீரில்லை, நீர்—தேவரீர், தண்ணீர்தான் அருந்தல் ஆகாதோ என்றேன்—தண்ணீரைத்தான் குடிக்கலாகாதோ வென்றேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) மூந்நீர் தநயை அனையாய்—கடற்புதல்வியாகிய திருமகளை நிகர்த்தவளே, இ—இந்த, முதுநீர் உண்டு தலைக்கு ஏறிற்று—பெருநீர்குடித்து தலைக்கேறியிருக்கிறது, இ நீர் காண்டி—இந்த நீரைப் பார், என்கிறூர்—என்று சொல்லுகிறூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

மெய்நீர்-சத்தியகுணம், அழியாததன்மை. வெம்மையுள நீர்-வெந்நீர், விருப்பமுள்ள மனத்தையுடைய நீங்கள். தண்ணீர்-குளிர்ந்த நீர், சாந்த குணம் அருந்தல் ஆகாதோ-குடித்தால் உடம்புக்காகாதோ. முதுநீருண்டு தலைக்கேறிற்று-பெருநீர்குடித்துத் தலைப்பளுவாயிருக்கிறது, பெருநீராகிய கங்கை தலையிலேறியிருக்கிறூள். ஆகாதோ-அணையலாகாதோ என்ற தலைவியை நோக்கி, இறைவர் எமது தலையிலேறியிருக்கிற கங்கை பார்த்துக்கொண்டிருக்கிறூள் என்று விடை கூறினூராயிற்று.

154. சீலஞ் சேர்ந்த வொற்றியுளீர் சிறிதாம் பஞ்ச காலத்துங்
கோலஞ்சார்ந்து பிச்சைகொளக் குறித்து வருவீ ரென்னென்றேன்
காலம் போகும் வார்த்தை நிற்குங் கண்டா யிதுசொற் கடனுமோ
யேலங் குழலா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) சீலம்சேர்ந்த—ஒழுக்கமமைந்த, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலிருப்பவரே, சிறிது ஆம்—கொஞ்சமாகிய, பஞ்ச காலத்தும்—பஞ்சகாலத்திலும், கோலம் சார்ந்து—பிக்ஷாடந வேஷம்பூண்டு, பிச்சைகொள்ள குறித்து வருவீர்—பிக்ஷையெடுக்க நினைத்துவராநின்றீர், என் என்றேன்—என்னென்று கேட்டேன்

(அதற்கு இவர் என்னை நோக்கி) ஏலம் குழலாய்—மயிர்ச்சாந் தணிந்த கூந்தலையுடையவளே, காலம்போகும் வார்த்தைநிற்கும்—காலம்நீங்கும் வார்த்தை நிற்கும், கண்டாய்—இதனை அநுபவ மாய்க் கண்டிருக்கின்றாய், இது—இதனை, சொல்—சொல்லுதல், கடன் ஆமோ—முறையாகுமோ, என்கின்றார்—என்று சொல்லு கிறார், இதுதான் சேடி யென்னேடீ. எ—று.

சீலம்-ஒழுக்கம், அதி இங்கு நல்லொழுக்கத்தைக் குறித்தது இறைவனெழுந்தருளியிருத்தலால். உலகத்தில் பஞ்சகாலம் நேர்ந் தால் அது நிற்பது நெடுங்காலமன்மையால் சிறிதாம் பஞ்சகாலத் தும் என்றாள். கோலம்-வேஷம், அது இவ்விடத்தும் பிக்ஷாடன வேஷத்தைக்குறித்தது ; குறித்தல்-நினைத்தல். காலம் போகும் வார்த்தைநிற்கும் என்றது இந்தச் சிறுவிலைக்காலம் நீங்கிப் போகும், பிக்ஷையெடுக்கவந்தீரே யென்று நீ சொன்னவார்த்தை உலகில் நிலைபெற்றிருக்கும் என்றாயிற்று.

155. ஊற்றர் சடையீ ரொற்றியுளீ ரூரூரிரக்கத் துணிவுற்றீர்
நீற்றால் விளங்குந் திருமேனி நேர்ந்திங் கிளைத்தீர் நீரென்றேன்
சோற்றா லிளைத்தே மன்றுனது சொல்லாலிளைத்தே மின்றினிநா
மேற்றா லிகழ்வே யென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) ஊற்று ஆர் சடையீர்—கங்கையைத்தரித்த சடையை யுடையவரே, ஒற்றி உள்ளீர்—திருவொற்றியூரிலெழுந்தருளியிருப் பவரே, ஊர் ஊர் இரக்க துணிவுற்றீர்—ஊரூராய்ச்சென்றிரக்கத் துணிந்தீர், (அதனால்) நீர்—தேவரீர், நீற்றால்விளங்கும்—திரு வெண்ணீற்றால் விளங்குகின்ற, திருமேனி நேர்ந்து—திருமேனி மெலிந்து, இங்கு இளைத்தீர்—இப்படி யிளைத்துப்போனீர், என் றேன்—என்று சொன்னேன், (அதற்கு இவர்) சோற்றால்—சோற் றின்பொருட்டு, இளைத்தேம் அன்று—இளைத்தேமல்லேம், இன்று உனது சொல்லால் இளைத்தேம்—இன்று உன் சொல்லினாலிளைத் தோம், (அதற்கு நான் என் சொல்லாகியது யாதென்றேன்) (அதற்கு இவர்) ஏற்றால் இகழ்வு என்கின்றார்—ஏற்றாலிகழ்ச்சி யென்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

ஊற்று-சுரப்பு, இது தொழிலாகுபெயராய் ஊறுதலையுடைய கங்கைக்காயிற்று, நேர்தல்-மெலிதல் உன்சொல்லாலிளைத்தேம் என் றது ஏற்பதிகழ்ச்சி என்று நீ சொன்னசொல்லா லிலைத்தேம் என்ற படி.

156. நீரை விழுங்குஞ் சடையுடையீ ருளது நுமக்கு நீரூருந்
தேரை விழுங்கும் பசுவென்றேன் செறிநின்கலைக்கு ளொன்றுளது
காரை விழுங்கு மெமதுபசுக் கன்றின் றேரை நீர்த்தேரை
யீர விழுங்கு மென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) நீரைவிழுங்கும் சடை உடையீர்—கங்காஜலத்தை யடக்கிக்கொண்ட சடையையுடையவரே, நுமக்கு—உமக்கு, நீர் ஊரும் தேரை விழுங்கும் பசு உள்ளது என்றேன்—நீர் ஊர்கின்ற தேரைவிழுங்கும் பசுவானது உண்டு என்றேன், (அதற்கு இவர்) நின்—உனது, செறிகலைக்குள்—நெருங்கிய கலைக்குள்ளே, ஒன்று உள்ளது—ஒன்றுண்டு, (அதாவது) காரைவிழுங்கும்—(நிறத்தால்) மேகத்தைவென்ற, எமது பசு—எமது பசுவினது, கன்றின் தேரை—கன்றின் தேரையும், நீர்த்தேரை—நீர்ததேரையையும், ஈர விழுங்கும் என்கின்றார்—பிளவுபடும்படி விழுங்கும் என்று சொல்லுகின்றார், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

நீரைவிழுங்கும் என்பதில் விழுங்குதல்-அடக்குதல். நீர் சினையாகு பெயராய்க் கங்கையையுணர்த்திற்று ; நீரூருந்தேர் என்றது பூமியை, அதனை விழுங்கும் பசு என்றது விஷ்ணுமூர்த்தியை ; கலையை என்றது மேகலையை, கலைக்குள் ஒன்று என்றது பாம்பு-அதாவது அல்குல் ; காரைவிழுங்கும் எமது பசு என்றது விஷ்ணுமூர்த்தியை ; அதன் கன்று என்றது மன்மதனை. கன்றின்தேர் என்றது தென்றற்காற்றை, நீர்த்தேரை-தவளை.

157. பொன்னேர்மணிமன்றுடையீர்நீர்புரிந்ததெதுவெம்புடையெ
ன்றே, னின்னேயுரைத்தற்கஞ்சுமென்றாரென்னென்றேனியம்பு
தமேன்,மின்னேநினதுநடைப்பகையாமிருகம்பறவைதமைக்குறிக்
கு, மென்னே யுரைப்ப தென்கின்று ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) பொன் ஏர் மணிமன்று உடையீர்—பொன்னினாலும் அழகியமணியினாலுமியன்ற சபையையுடையவரே, நீர்—தேவரீர், எம்புடை—எம்மிடத்தில், புரிந்தது எது என்றேன்—விரும்பினது யாது என்று வினவினேன், (அதற்கு இவர்) இன்னே—உரைத்தற்கு—இப்பொழுது சொல்லுவதற்கு, அஞ்சும் என்றார்—அஞ்சாநின்றோம் என்றார், என் என்றேன்—அது யாது என்று நான் கேட்டேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) மின்னே—மின் கொடிபோல்வாளே, நினது நடை பகை ஆம் மிருகம் பறவைதமை

குறிக்கும்—உனது நடைக்குப் பகையாகிய மிருகத்தையும் பறவையையும் குறிக்கும், என்னே உரைப்பது என்கின்றூர்—இதனை என்னென்று சொல்லுவது என்கின்றூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

பொன்னேர்மன்று-பொற்சபையும் ரத்நசபையும். புடை-எழனுருபு, மின்-உவமையாகுபெயர், நடைப்பகையா மிருகம் பறவை யென்றது பெண் யானையையும் அன்னத்தையும், பெண் யானைக்குப் பிடியென்று பெயராதலால் பிடியன்னம் வேண்டுமென்றதாயிற்று.

158. அடையார் புரஞ்செற் றம்பலத்தே யாடு மழகீரெண்பதிற்றுக்
கடையாமுடலின் றலைகொண்டீர் கரமொன் றினிலற் புதமென்றே
னுடையாத் தலைமேற் றலையாக வுன்கை யீரைஞ்ஞூறுகொண்ட
திடையா வளைக்கே யென்கின்றூ ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) அடையார்—பகைவரது, புரம்செற்று—முப்புரத்தை யழித்து, அம்பலத்தே—பொற்சபையில், ஆடும்—திருத்தஞ்செய்கிற, அழகீர்—அழகரே, எண்பதிற்று கடை ஆம் உடலின் தலை—எண்பதிற்றுக்கடையாகிய சரீரத்தின்தலையை, கரம் ஒன்றினில் கொண்டீர்—ஒருகையிற் கொண்டிருக்கிறீர், அற்புதம் என்றேன்—இது ஆச்சரியமென்றேன், (அதற்கு இவர்) உடையா தலைமேல் தலையாக—உடையாத் தலைமேல் தலையாக, உன்கை—உன்கையானது, இடையாவளைக்கே, ஈரைஞ்ஞூறுகொண்டது-ஆயிரங்கொண்டது, என்கின்றூர்—என்று சொல்லுகிறூர், இதுதான் சேடி யென்னேடீ. எ-று.

159. தேவர்க்கரியவாநந்தத் திருத்ராண் டவஞ்செய் பெருமானீர்
மேவக் குகுகு குகுகுவணி வேணி யுடையீ ராமென்றேன்
தாவக் குகுகு குகுகுகுகுத் தாமே யைந்து விளங்கவணி
யேவற் குணத்தா யென்கின்றூ ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) தேவர்க்கு அரிய—தேவர்களுக்கு அரிதாகிய, ஆநந்தம்—பேரின்பத்தை யுண்டாக்குகிற, திருத் தாண்டவம் செய் பெருமான்—திருநடநஞ் செய்யும் பெருமானே, நீர்—தேவரீர், மேவ—பொருந்த, குகுகுகுகுகு அணி—கு கு கு கு கு கு அணிகின்ற, வேணி உடையீர் ஆம் என்றேன்—சடையையுடையீ

ராமென்றேன், (அதற்கு இவர்) என்னை நோக்கி) தாவ—தாவும் படி, குகுகுகுகுகுகு தாமே—குகுகுகுகுகுகுக்கள் தாமே, ஐந்து விளங்க அணி—ஐந்து விளங்கும்படி அணிகின்ற, ஏவற்குணத் தாய்—ஏவற்குணத்தை யுடையையா யிருக்கிறாய், என்கின்றார்—என்று சொல்லுகிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

தேவர்க்கரியவாநந்தம் என்றதனால் பேரின்பமாயிற்று. பெருமான் அண்மைவிளியாதலால் இயல்பாயிற்று. குகுகுகுகுகு-அறுகு. (அறுகம்புல்). குகுகுகுகுகுகு-அமாவாசை, அமாவாசை யிருட்டினும் நான் மடங்கதிகமான இருட்டையுடைய (கறுத்த) கூந்தல் ஐந்து விளங்க-முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்னும் ஐவகை மயிர்முடி விளங்க. அணி-ஆபரணம். ஏவற்குணம்-ஏவுதற்குரிய பெருந்தன்மை.

160. கோன்றைச்சடையீர்கொடுங்கோளூர்குறித்தீர்வருதற்கஞ்சுவல்யா,ஞென்றப்பெருங்கோளென்மீதுமுரைப்பாருண்டென்றுணர்ந் தென்றேன், நன்றப்படியேற் கோளிலையாநகருமுடையேநங்காய்நீ யின்றச் சுறலென் னென்கின்றா ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) கொன்றை சடையீர்—கொன்றை மலர்மாலையைத் தரித்த சடையையுடையவரே, கொடு கோளூர் குறித்தீர்—(நீர்) கொடிய கோளூரை யிடமாகத் திருவுள்ளம் பற்றினீர், (ஆதலால்) வருதற்கு—வருவதற்கு, யான் அஞ்சுவல்—நான் அஞ்சாநின்றேன், (ஏனென்றால்) என் மீதும்—என்மேலும், ஒன்ற—பொருத்தமாக, பெருங் கோள் உரைப்பார்—பெரியகோள் சொல்லுவோர், உண்டு என்று உணர்ந்து—உண்டென்றறிந்தேயாம், என்றேன்—என்று சொன்னேன், (அதற்கு இவர் என்னை நோக்கி) நங்காய்—பெண்ணே, நன்று—நல்லது, அப்படியேல்—அப்படியாயின், கோள் இல்லை ஆம்—கோளில்லையாகிய, நகரும் உடையேம்—நகரையுமுடையேம் (யாம்) ஆதலால், நீ இன்று அச்சுறல் என் என்கின்றார்—நீ இன்று அச்சமடைதல் யாதுக்கு என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

கொன்றையென்னு மரப்பெயர் அதன்சினையாகிய மலருக்காயினது முதலாகுபெயர் (பொருளாகுபெயர்), அது அதனாற் றொடுக்கப்பட்ட மாலைக்காயினது கருவியாகுபெயர், ஆதலால் கொன்றை இருமடியாகுபெயர். கோளூர்-ஒரு திருப்பதி, இதற்கு

கோள்சொல்லுமூர் எனத்தலைவிபொருள்கொண்டாள். ஒன்ற என்றது நம்பும்படியாக என்றபடி. அச்சு-அச்சம். அச்சுறல் ஒரு சொல்லாகக்கொள்ளுதலுமாம். என் என்னும் வினு அஞ்சவேண்டியதில்லை யென்னும் பொருளது. கோளிலையாநகர் என்றது “திருக்கோளிலி” என்னும் திருப்பதி.

161. புரியுஞ் சடையீ ரமர்ந்திடுமூர் புலியூ ரெனிலெம்போல்வார்க்கு
முரியும் புலித்தோ லுடையீர்போ லுறுதற் கியலு மோவென்றேன்
றிரியும் புலியூ ரன்றுநின்போற் றெரிவை யரைக்கண் டிடிற்பயந்தே
யிரியும் புலியூ ரென்கின்ரு ரிதுதான் சேடி யென்னேடீ.

(இ-ள்.) புரியும் சடையீர்—கட்டப்பட்ட சடையையுடையவரே, (நீர்) அமர்ந்திடும் ஊர்—(நீர்) விரும்பியுறையும் ஊரானது, புலியூர் எனில்—புலியூரென்ருல், உரியும் புலித்தோல் உடையீர் போல்—உரித்த புலித்தோலுடையீராகிய உம்மைப்போல, எம்போல்வார்க்கும்—எம்போலியர்க்கும், உறுதற்கு இயலுமோ என்றேன்—(அந்தப்புலியூரை) அடைதற்கியலுமோவென்று சொன்னேன், (அதற்கு இவர்) திரியும்புலியூர் அன்று—(அது) திரிகிற புலியூரன்று, நின்போல் தெரிவையரை கண்டிடின்—உன்னைப்போன்ற மாதரைக்கண்டால், பயந்து—அஞ்சி, இரியும்—ஓடுகிற, புலியூர் என்கின்ருர்—புலியூர் என்கிருர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.)

புரிதல்-கட்டுதல், சுருட்டுதல் எனினுமாம். புலியூர்-தில்லைப்பதி, புலிகள் வாழுமூர். புலித்தோல் உடையீர் என்பதற்குப் புலித்தோலையுடையவர் என்றும், புலித்தோலாகிய ஆடையையுடையவர் என்றும், பொருளுரைத்துக்கொள்க. இயலுமோ-கூடுமோ. திரியும்புலி-சஞ்சரிக்கும்புலி, மாறுபடும்புலி. தவத்தினர்க்குமாதரைக் கண்டஞ்சுத லியற்கையாதலால், தெரிவையரைக்கண்டிடிற் பயந்தேயிரியும்புலி யென்றது வியாக்கிரபாத முனிவரை. இவர்வாழுமூராதலால் தில்லைப்பதியைப்புலியூர் என்பர். இவர்க்குப்புலிப்பாணியார் என்றொருபெயருமுண்டு, மாதரைக்காணின் தவங்கெடுமாதலால் தவத்தினர் மாதரைக்காணின் அஞ்சுவாராயினர், இச்செய்தி சகுந்தலையைக்கண்டு தவமிழந்த விசுவாமித்திர முனிவரிடத்து நிகழ்ந்தமை புராணகதை. தையலார் மையல், “சுந்தரஞானியர் தீரர் சூரரையெல்லா மிமைப்பிற்றுரும்பு செய்யும்” என்பது பிரத்தியக்ஷாநுபவம்.

162. தேவ்வூர்பொடிக்குஞ்சிறுநகையித் தேவர் தமைநானீரிருத்த லெவ்வூ ரென்றே னகைத்தணங்கே யேழூர் நாலூ ரென்றார்பின் னவ்வூர்த் தொகையி னிருத்தலரிதா மென்றேன் மற்ற திலொவ்வூ ரிவ்வூ ரெடுத்தா யென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) தெவ் ஊர் பொடிக்கும்—பகைவருரைப் பொடி செய்த, சிறுநகை—புன்சிரிப்பையுடைய, இ தேவர்தமை—இந்தத் தேவரை, நான்—யான், நீர் இருத்தல்—தேவரீரிருப்பது, எவ்வூர் என்றேன்—எந்தவூரில் என்று கேட்டேன், (அதற்கு இவர்) நகைத்து—சிரித்து, அணங்கே—பெண்ணே, (யாமிருப்பது) ஏழூர் நாலூர் என்றார்—ஏழூர் நாலூரிலென்றுசொன்னார், (அது கேட்டநான்) பின்—பிறகு, அவ்வூர் தொகையில் இருத்தல்—அந்தவூர்த்தொகையிலிருப்பது, அரிது ஆம் என்றேன்—அரிதாகும் என்றேன், (அதற்கு இவர்) அதில் ஒவ்வூர்—அதில் ஒரூராகிய, இவ்வூர் எடுத்தாய் என்கின்றார்—இந்த வூரையெடுத்தாய் என்கிறார், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

தெவ்-பண்பாகுபெயர். ஊர் என்றது முப்புரத்தை. பொடி யென்னும் பெயரடியாகப்பிறந்த பொடிக்கும் என்னும் பெயரெச்சம் நகையென்னும் பெயர்கொண்டு முடிந்தது. சிறு என்னும் அடையை நகைக்காக்குக. பொடிக்குஞ் சிறுநகையென வொரு சொல்லாக்கினுமமையும். தேவர்தமை யென்பதில் தம் சாரியை.

163. மணங்கொ ளிதழிச் சடையீர்நீர் வாழும் பதியாதென்றேனின் குணங்கொண்மொழிஃகட்டோரளவு குறைந்தகுயிலாம்பதியென்றா ரணங்கின் மறையூ ராமென்றே னஃதன் றருளோத் தூரிஃது மிணங்க வுடையே மென்கின்றா ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) மணம் கொள் இதழி சடையீர்—வாசனையைக் கொண்ட கொன்றைமலர் மாலையைத் தரித்த சடையை யுடையவரே, நீர் வாழும் பதி யாது என்றேன்—நீர்வாழும் ஊர் எது வென்று கேட்டேன், (அதற்கு இவர்) நின்—உனது, குணம் கொள் மொழி கேட்டு—சுகத்தைத் தருகிற சொல்லைக்கேட்டு, ஓரளவு குறைந்த—ஓரளவிற் குறைந்த, குயிலாம் பதி என்றார்—குயிலாம் பதி யென்று சொன்னார், (அதன்மேல் நான்) அணங்கின்—தெய்வத்தன்மையுள்ள, மறையூர் ஆம் என்றேன்—மறையூராமென் றேன், (அதற்கு இவர்) அஃது அன்று—அதுவல்ல, அருளோத்

தார் இஃதும்—அருளோத்தூராகிய இதனையும், இணங்க உடையேம் என்கின்றூர்—பொருந்த உடையோம் என்கிறூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

இதழி-கொன்றை, இது மலரையுணர்த்தி அது அதனுலாகிய மாலையையுணர்த்தலால் இருமடியாகுபெயர். இதழிச்சடை-இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். குணம்-சுகம். அணங்கின்மறையூர்-அழகையுடைய மறையூர், துன்பமில்லாதமறையூர் என்றுரைத்தலுமாம்.

164. ஆற்றுச்சடையாரிவர்பலியென் றடைந்தா நுமதூரியாதென்றேன், சோற்றுத்துறையென்றூர் நுமக்கு சோற்றுக்கருப்பேன்சொலுமென்றேன், றோற்றுத்திரிவேமன் றுநின்போற்சொல்லுங்கருப்பென் றுலகியம்ப,வேற்றுத்திரியேமென்கின்றூரிதுதான்சேடி என்னேடீ.

(இ-ள்.) ஆற்றுச் சடையார்—ஆற்றைச் சடையிலே யுடையவராகிய, இவர்—இவர், பலி என்று அடைந்தார்—பிக்ஷையென்று வந்தார், நுமது ஊர் யாது என்றேன்—நுமது ஊர் எதுவென்றேன் (அதற்கு இவர், எம்மூர்) சோற்றுத்துறை என்றூர்—சோற்றுத்துறை யென்று சொன்னூர், (அதுகேட்ட நான் இவரை நோக்கி நீரிருப்பதே சோற்றுத்துறையானுல்) நுமக்கு—உமக்கு, சோற்றுக் கருப்பு என்—சோற்றுக்கருப்பு யாதுக்கு, சொல்லும் என்றேன்—சொல்லுமென்று கேட்டேன், தோற்று திரிவேம் அன்று—யாம் தோற்றுத் திரிகின்றூே மல்லேம், நின்போல—உன்னைப்போல, சொல்லும் கருப்பு என்று—சொல்லுங்கருப்பாமென்று, உலகு இயம்ப—உலகம் சொல்ல, ஏற்று திரியேம் என்கின்றூர்—(அச்சொல்லை) ஏற்றுத் திரியமாட்டோம் என்கிறூர், இதுதான் சேடி என்னேடீ. எ-று.

ஆறு என்றது ஆகாய கங்கையாற்றை. துறை-இடம். சோற்றுத்துறை-ஓர் திருப்பதி. கருப்பு-பஞ்சம், சொல்லுங்கருப்பு-சொல்லும்பஞ்சம். சொலலுங்கரும்பு.

165. ஓங்குஞ் சடையீர் நெல்வாய லுடையே மென்றீருடையீரேற் றூங்கும்புகழ்நும்மிடைச்சிறுமை சார்ந்த தெவனீர் சாற்றுமென்றேனேங்கும் படிநும் மிடைச்சிறுமை யெய்திற்றலதீண் டெமக்கின்றூலீங்குங் காண்டி ரென்கின்றூ ரிதுதான் சேடி என்னேடீ.

(இ-ள்.) ஓங்கும் சடையீர்—நீண்டசடையை யுடையவரே, நெல்வாயல் உடையேம் என்றீர்—நெல்வாயலையுடையேம் யாமென்றீரே, உடையீரேல்—உடையீராயின், தாங்கும்புகழ்—புகழைத் தாங்கிய, நும் இடை—உம்மிடத்தில், சிறுமைசார்ந்தது என்—சிறுமைவந்ததெவ்வாறு, நீர் சாற்றும் என்றேன்—நீர் சொல்லுமென்றேன், (அதற்கு இவர்) எங்கும்படி—(கண்டோர்) இரங்கும் வண்ணம், நும் இடை சிறுமை எய்திற்று அலது—நும்மிடத்துச் சிறுமையுண்டாயிற்றேயன்றி, ஈண்டு—இவ்விடத்தில், எமக்கு இன்று—எம்மிடத்தில்லை, ஈங்கும் காண்டிர் என்கின்றார்—இங்கும் காண்பீராயினென்கிறார், இது தான் சேடிஎன்னேடீ. எ-று.

ஓங்கும்சடை-சுருட்டி மகுடமாகக் கட்டப்பட்டு உயர்ந்து தோன்றுகிற சடையெனினுமாம். நெல்வாயல்-ஓர் திருப்பதி. நெல்லையுடைய வாயில். இடை-எழனுருபு. மருங்குல்-இடுப்பு. சிறுமை-தரித்திரம், நொய்ம்மை. உடையீரேல் என்பதில் ஏல் எனின்என்பதன்மரூஉ. கண்டோர் இரங்கல் எற்றுக்கெனின் தனப்பொறையால் இட்டிடைமுறியுமெனக் கருதியென்க.

## இங்கிதமாலை மூலமும் உரையும்

முற்றிற்று.

சென்னை சமரச சுத்தசன்மார்க்க சங்கம்
8/99 அம்மன்கோயில் தெரு, கொண்டிதோப்பு
வால்டாக்ஸ் ரோட் போஸ்டு, G. P. O. சென்னை.

அருட்பெருஞ்ஜோதி அச்சு நிலையம், சென்னை. 9-8-1938.